
www.padippakam.com



உள்ளே :

உடைபடும் மவுனங்கள்

இன்றைய அமெரிக்கா : அவமதிப்பின் அரசியல்

இந்தியா – காலத்தை எதிர் நோக்கி

பிரேதா பிரேதன் : தீண்டாதவள்

# தமிழ் நேயம் 7

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் - 7

முன்னுரை :-

தமிழ் உணர்வை வற்புறுத்தும் நோக்கில் வெளிவரும் இதழ்களில் தமிழ்நேயத்தின் தனித்தன்மையை நண்பர்கள் கவனித்திருக்க முடியும். தமிழ் நமக்கு இன்றியமையாதது என்பதில் நமக்கிடையில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. கல்வி, தொழில், வேளாண்மை, மருத்துவம் முதலிய பல களங்களிலும் தமிழ்மக்கள் தமக்கான உரிமையைப் பெறவேண்டும்.

உலகளவிலான வரலாற்றுச் சூழலை தமிழன் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்காவின் வளர்ச்சியைக் கண்டு தமிழன் தன்னை இழந்து விடமுடியாது. இந்தியாவிற்குள்தான் நாம் இன்னும் இருக்கப்போகிறோம். ஆகவே தேசிய இனஉரிமைகளை ஒப்புக் கொள்கிற ஒரு கூட்டாட்சி முறை குறித்துத்தான் நாம் சிந்திக்க முடியும். உச்ச நீதிமன்றம் உட்பட அனைத்து நீதி மன்றங்களும் நம்மை என்ன செய்கின்றன என்பது குறித்து நாம் கருத்துச் செலுத்த வேண்டும். இந்திய மக்கள், காலங்காலமாகத் தம்மீது சுமத்தப்பட்டிருந்த தளைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்க்காக ஒரு புரட்சி இயக்கத்தை எதிர்பார்த்திருந்தார்கள். அந்த வாய்பு எப்படியோ தவறி விட்டது.

மதத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்குரிய புதிய ஆன்மீகத் தேடல் இல்லாமல் நமக்கு முடியாது. தமிழ் இலக்கியத்தில் நவீன இலக்கியம் குறித்து நாம தொடர்ந்து கற்கத்தான் வேண்டும். உலகளவிலான விடுதலை இயக்கங்கள் குறித்து நாம் அக்கறை கொள்வதற்கான அனைத்து நியாங்களும் நமக்கு உள்ளன. விடுதலையை விரும்பும் எவரும் கவிதைக்கான மனநிலையை தமக்குள் உயிர்ப்பித்துக் கொள்ளவேண்டும். இவைதான் தமிழ்நேயத்தின் தனித்தன்மைகள். இவற்றை மேம்படுத்தும் முறையில் நண்பர்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து வேண்டுகிறோம். எண்பது ஆண்டு நிறைவை எட்டியுள்ள தமிழ் அறிஞர் திரு. வல்லிக் கண்ணன் அவர்களுக்கு நம் வணக்கங்கள் உரியவை. அறுபது ஆண்டு நிறைவை அடைந்துள்ள அசலானத் தமிழறிஞர் பேராசிரியர் இளவரசுக்கு நம் வாழ்த்துக்கள்.

-ஞானி

மே - முதல்நாள்


படிப்பகம்

www.padippakam.com

# உள்ளுரை :

பக்கம்

1. அகமும் புறமும் 3

2. கட்டுரைகள்
   1. இந்தியா : காலத்தை எதிர்நோக்கி பகுதி 2 - அருள்திரு.சுதாகர் 10
   2. வளர்ச்சியின் அரசியலும் "அவமதிப்பு" அநீதிகளும் -மேதா பட்கர் 20
   3. இன்றைய அமெரிக்கா- ஒரு தமிழனின் பார்வையில் - செ.நாரயணசாமி 23
   4. உடைபடும் மௌனங்கள் -முனைவர் ஹரி விஜயலட்சுமி 27
   5. தமிழில் நவீன கவிதை - பிரேதா பிரேதன் 31
   6. ஆன்மீகம் புதிய தேடல் 37

3. கவிதை
   "தீண்டாதவள்" கவிதை நாடகம் - ஞானி 42
   கவிதை நூல் அறிமுகம்

4. மடல்கள் அறிக்கைகள் 60
   1. நெஞ்சில் ஈரமின்றி ஓய்வூதியம் பெறுவதோ எம்.பி; எம்.எல்.ஏ.க்கள் -மருத்துவர் கோபி
   2. தமிழன உறவு மடல் - வ.நா. தன்மானன்
   3. என்னருமை தாயகமே கதறியழு - ஹர்ஸ் மந்திர்

○ பள்ளி ஆசிரியர்களுக்குள் படைப்பியக்கம் தேவை. குழந்தைகளும், கவிதைகள், கட்டுரைகள் தரமுடியும். இதற்கான ஓர் இதழ் **கற்க கசடற**

○ சிதம்பரத்தில் பார்ப்பனர்களால் எரியில் கொல்லப்பட்ட நந்தனைப் போல இராமனால் கொல்லப்பட்ட சம்புகனும் நமக்குள் இன்னும் வாழ்கின்றான். **சம்புகன்** என்ற பெயரில் வருகிறது ஓர் இதழ். இரண்டையும் பெற அருள்திரு. சுதாகர், ஆர்.சி. கோவில், தவசி மேடை, திண்டுக்கல்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் :

## அகமும் புறமும் :

○ தமிழீழத்தின் தேசிய இனத்தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்திக்கும் முறையில் எழுநூறுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் ஏப்ரல் 10 அன்று கிளிநொச்சியில் கூடினர். இருபதாண்டுகளாக தமிழீழத்தின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தியவர் பிரபாகரன். சிங்கள இராணுவத்திற்கு அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், இந்தியா முதலிய நாடுகள் ஏராளமான ஆயுதங்களையும், போர்ப் பயிற்சியையும் தந்தபோதிலும், சிங்கள இராணுவம் விடுதலைப் புலிகளை வெல்ல முடியவில்லை. ஆனையிறவு கட்ட நாயாக விமானதளம் முதலியவற்றை புலிகள் தகர்த்தன் மூலம் சிங்கள இராணுவம் இனி செய்வதற்கு எதுவும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. சந்திரிகாவின் தந்திரங்கள் பலிக்கவில்லை. தேர்தல் தோல்வியையும் சந்திக்க நேர்ந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகளோடு சமரசம் செய்து கொண்டால் ஒழிய இலங்கையின் பொருளாதாரம் முதலியவற்றைக் காப்பாற்ற முடியாது. இந்த உண்மையை இலங்கைப் பிரதமர் சரிவர புரிந்து கொண்டதின் விளைவு போர் நிறுத்தமும், அமைதிக்கான உடன்பாடும் என்பதில் ஐயமில்லை. தமிழீழ மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையையும் ரணில் நீக்கினார். கொரில்லாப் போரில் இருபது ஆண்டுகள் தாக்குப் பிடித்து வெற்றி பெற்ற ஒரு தலைவனை நேரில் பார்க்கும் ஆர்வத்தோடு உலகளவில் செய்தியாளர்கள் வருகை தந்ததில் வியப்பில்லை.

ஈழத்தின் முற்றான விடுதலைக்காகவே போரிட்டவர்கள் இப்பொழுது தாயக உரிமை, தன்உரிமை முதலியவற்றை ஏற்றுக் கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தனி ஈழம் என்ற இறுதி இலக்கை இப்பொழுது வற்புறுத்தவில்லை. தமிழ் மக்களின் அமைதியான வாழ்வை முன்னிருத்தி ஒரு உடன்பாட்டுக்கு வர விரும்புகின்றனர். இந்தியாவோடு நல்லுறவை வேண்டுகின்றனர். அமைதி உடன்பாட்டிற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று திரும்பத் திரும்ப கூறுகின்றனர். இந்தியாவோடு பண்பாடு முதலிய களங்களில் தங்களுக்குரிய உறவை எடுத்துரைக்கின்றனர். தங்களுடைய இயக்கம் பயங்கர வாதம் அல்ல என்றும் விடுதலை இயக்கம் என்றும் கூறுகின்றனர். இந்திய அமைதிப் படை ஈழத்தில்



படிப்பகம்

www.padippakam.com

செய்தவைகளையும், இராஜிவ் காந்தி கொலையையும் இப்பொழுது மறந்து விடலாம் என்கின்றனர். வரலாற்றில் பழிவாங்குதல் என்பதை முன்னிறுத்தினால் உலகத்தில் எந்த நாடும் இன்று அமைதியாக இருக்க முடியாது. தமிழ் மக்களோடும், தமிழ் நாட்டோடும் ஈழத் தமிழ் மக்களுக்குரிய நெருக்கமான உறவையும் நம்மால் புறக்கணிப்பதற்கு இல்லை.

தமிழகத்தில் / இந்தியாவில் அரசியல் கட்சிகள் இத்தகைய உணர்வோடு செயல்படவில்லை என்பதில் தமிழ் உணர்வாளர்களாகிய நமக்கு வருத்தம் தருகிறது. வரலாற்றியகத்தை இவர்களால் தடுத்து நிறுத்த இயலாது. பிரபாகரனை இந்தியாவுக்கு இழுத்து வருவது என்பதில் சிங்கள அரசுக்கும் உவப்பாக இருக்க முடியாது. இந்தியாவில் சில இயக்கங்களின் தேவையை இந்திய அரசு நிறைவேற்றித் தரும் என்பதும் உண்மை இல்லை. இந்தச் சிக்கலில் நடுநிலை வகிப்பது என்பதற்கும் நியாமில்லை. தமிழீழத்தில் இந்தியப் படை செய்த அட்டூழியங்களுக்கு எதிர்வினையாகத்தான் இராஜிவ் கொல்லப் பட்டார் என்று உச்ச நீதிமன்றத்தில் அரசு வழக்குரைஞர் விவாதித்ததை நாம் மறந்து விடவில்லை. இப்படியும் பிரபாகரனோ மற்ற தலைவரே பேசவில்லை. இது ஒரு துயரவியல் நிகழ்வென்று பிரபாகரன் கூறுகிறார். இதற்கு மேல் விவாதிப்பதற்கு என்ன இருக்கிறது என்று நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஈழத்தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இருபதாண்டுகளுக்கு மேலாக எதிர்பார்த்து காத்திருந்த அமைதியை அவர்களுக்கு உறுதி செய்வதன் மூலமே நம் பாரம்பரிய பெருமையைத் தக்க வைத்துக் கொள்ள இயலும். சீனாவோடு ஓர் உடன்பாட்டிற்கு நாம் முந்துகிறோம். பாகிஸ்தானோடு ஓர் அமைதியான உடன் பாட்டின் மூலமே இந்தியா தன்னைத் தக்க வைத்துக் கொள்ள இயலும். அமெரிக்காவுக்கு கோழைத்தனமாக அடிபணிவது நமக்கு அறவே விருப்பமில்லை. பிரபாகரன் தமிழீழத்தின் தலைவர் மட்டுமல்ல. உலகத் தமிழ்மக்களின் ஒப்பற்ற தலைவர் என்பதை இந்த அமைதி உடன்பாட்டைச் செய்வதன் மூலமே மெய்பித்து வருகிறார். இதைப் பொறுக்க இயலாத சில தலைவர்கள் புலம்புவதை நாம் புரிந்து கொள்கிறோம். இப்படி ஒரு அமைதி உடன்பாட்டோடு உறவுடைய அனைவரையும் நாம் பாராட்டுகிறோம். குறுகிய அரசியல் நோக்கை ஒதுக்கி வைத்துவிட்டு தேசங்களுக்கிடையில் அமைதியை முன்னிறுத்துவதே இன்றைய முதற் கடமை என நாம் வற்புறுத்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

○ குஜராத் நிகழ்வுகள் இந்தியாவின் எந்தத் தலைவருக்கும் மரியாதைக் குறைவு என்பதை நாம் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. ஐம்பது பேர் கொல்லப்பட்டதற்காக, ஆயிரம் மக்களைக் கொல்வதும், வீடுகள் தீவைத்துக் கொழுத்துவதும் கருணையில்லாமல் தாய்மார்கள், குழந்தைகளைக் கொல்வதும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களை அகதிகள் ஆக்குவதும் எந்த நாகரீகத்திற்கு ஒத்து வரும்? இஸ்லாமியர் நூற்றுக் கணக்கில் கொல்லப் படுவதை அனுமதித்த காவல் துறையையும், அரசையும் எப்படி மன்னிக்க முடியும்? முதலைமைச்சர் மோடியை வீட்டுக்கு அனுப்ப விரும்பாத அரசியல் தலைமையின் உள்நோக்கம் எது என்பது நமக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. பாபர் மசூதி என்ற சிக்கல் இப்படிக் கொடிய விழைவுகளை தொடர்ந்து எத்தனை காலத்திற்கு தூண்டுவதாக இருக்க முடியும்? இந்துத்துவ அரசியலின் கோரமுகத்தை குஜராத் வெளிப்படுத்துகிறது. இந்துத்துவ வெறியை முழு அளவில் முடுக்கி விட்டதன் விளைவாக குஜராத்தில் இன்னொரு தேர்தலில் வெற்றி பெற முடியும் என இந்துத்துவ வாதிகள் நம்புகிறார்கள்.

காந்தியின் தேசம் இப்படியா நாசமாக வேண்டும்? சபர்மதி ஆசிரமத்தில் அமைதியை ஏற்படுத்தும் முறையில் மேதாபட்கர் முதலியவர்களைத் தாக்குவது எதைக் காட்டுகிறது? குஜராத் முதலாளிகளின் தொழில் வளர்ச்சிக்காக மின்சாரம் வேண்டும். பத்தாயிரக்கணக்கான பழங்குடிகள் நாசமாவது பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை. இயற்கை வளங்களை கொள்ளையடிக்கும் முதலாளிகள் எந்த மக்களுக்கு நல்வாழ்வு தருவார்கள். இந்துவத்திற்கு முதலாளிகள் வேண்டும். இயற்கையோ, மக்களின் நல்வாழ்வோ தேவையில்லை. குஜராத் நமக்கு ஓர் மாபெரும் எச்சரிக்கை. இந்தியாவில் இனி எந்த இடத்திலும் குஜராத் வெடிக்கலாம்

○ ஆண்டிப்பட்டித் தேர்தலில் வெற்றியடைந்ததின்மூலம் மீண்டும் தமிழ்நாட்டின் முதலைமைச்சாரகத் தன்னை நியமித்துக் கொண்ட ஜெயலலிதா அவர்கள் இந்தியாவிலேயே தொழில் முதலிய துறைகளில் தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்க முடியும் என்று சொல்லுகிறார். 36,000 கோடி ரூபாய் கடன் நாள் ஒன்றுக்கு 11 கோடி ரூபாய் வட்டி என்று கணக்குச் சொல்லுகிறார் நிதியமைச்சர். மைய அரசு ரூபாய் 3000 கோடி நிதி உதவி தரவேண்டும் என்று முதலைச்சர் கேட்கிறார். பேருந்து, உணவுப் பொருட்கள் முதலியவற்றின் மீதான கட்டணம், வரி


படிப்பகம்

www.padippakam.com

முதலியவற்றை உயர்த்துகிறார். 750 கோடி பற்றாக்குறை என்று சொல்லுகிறார். விவசாயிகள் மின்சாரத்திற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்ற முறையிலும் சில ஏற்பாடுகளைச் செய்ய விரும்புகிறார் சிமெண்ட் கொள்ளை பற்றி நிதியமைச்சர் விளாவாரியாகச் சொல்கிறார். வெளிநாடுகளிலிருந்து நேரிடையாகக் கடன் பெறுவதற்கு தங்களுக்கு உரிமை வேண்டும் என்கிறார் முதல்வர். இரண்டு இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டு வரவேண்டும் என்கிறார்.

மழை போதுமான அளவு பெய்யவில்லை. காவிரி முதலிய ஆறுகளில் நீர் இல்லை. காடுகள் தொடர்ந்து அழிக்கப்படுகின்றன. ஆற்று மணல் கொள்ளைகளுக்கு குறைவில்லை. தடங்கள் மறைக்கப்பட்ட நிலையில் யானைகள் துயருகின்றன. இலவச மின்சாரம் காரணமாக நிலத்தடி நீரை வெளியில் எடுத்துக் கொட்டுகின்றனர். அரசிடம் நிதியில்லை. அரசு ஊழியர்கள் முதலியவர்கள் போராடுகின்றனர். தற்கொலைகள், கொள்ளைகள், கொலைகள் நாளும் அதிகரிக்கின்றன. சங்கரலிங்க புரத்திற்கு அடுத்ததாகத் திங்களூரில் காவலரின் அட்டகாசங்கள். வேலை வாய்ப்புக்கு வழியில்லை. பெண்களின் மீதான வன்முறை அதிகரிக்கிறது. கட்சி அரசியல் அருவருப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. நாள்தோறும் பலவகையான நாடகங்களைச் சட்ட மன்றம் அரங்கேற்றுகிறது. தொலைக்காட்சியில் எல்லாவற்றையும் பார்க்க முடிகிறது. வருமானம் குறையக் கூடாது என்பதற்காகக் கிராமப்புறங்க்ளிலும் பார்கள் திறக்கப்படுகின்றன. திரையரங்குகள் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளலாம்

தேவையானபடி பொடா சட்டமும் பயன்படுத்தலாம். அரசின் நிதிநிலை மோசமாக இருப்பதால் உழவர்களின் நெல்லைக் கொள்முதல் செய்ய இயலவில்லை. உழவர்களின் தலைவிதியை வணிகர்கள் நிர்ணயம் செய்யலாம். ஊழலுக்கு எல்லையில்லை. அதிகாரிகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. மக்களைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லை.

இந்தியாவின் முதன் மாநிலமாகத் தமிழகம் எப்படி மாற முடியும். அரசின் அதிகாரக் கொடுங்கோண்மையை எப்படித்தான் பொறுத்துக் கொள்ள முடியும்? விலைவாசிகள் தொடர்ந்து உயரத்தான் செய்யும். மக்கள் இயக்கங்கள் தொடர்ந்து ஒடுக்கப்படும். அவ்வப்பொழுது இழப்பீடுகள் பெற்றுக் கொள்ளலாம். நடைபெறுவது மக்களாட்சிதானா? இதுவும் ஒரு தேசம்தானா? இப்படியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

○ பாரதியார் பற்றிய அறக்கட்டளைச சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவதற்காக ஏப்ரல் 4 அன்று நண்பர் மு.குமரவேலுவுடன் நான் தஞ்சைப் தமிழ் பல்கலைக் கழகத்திற்குச் சென்று வந்தேன். தமிழின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் காலத்தில் 1200 ஏக்கர் பரப்பில் தொடங்கப்பட்டது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம். தமிழ் ஆய்வுகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைகழகத்தின் இன்றைய நிலை சிறப்பாகச் சொல்வதற்கில்லை. வி.ஜ. சுப்பிரமணியம் துணைவேந்தராக இருந்த காலத்தை இன்று பலரும் நினைவு கூறுகின்றனர். அரசு உதவி தேவையான அளவுக்கு வருவதில்லை. பல்கலைக் கழக வளாகம் வெறிச்சோடிக் கிடக்கிறது. பேராசிரியர்கள் பலரைச் சந்தித்தேன். நிம்மதியாக எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. புதியதாகப் பொறுப்பேற்றுள்ள இ.சுந்தரமூர்த்தி அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என பெரும் வேட்கை உடையவர் என்பதில் ஐயமில்லை. மிகப்பெரிய நூலகம் மற்றும் அச்சகத்தை கொண்டுள்ளது பல்கலைக் கழகம். ஏராளமான ஆய்வு நூல்கள் மற்றும் களஞ்சியங்களை வெளியிட்டுள்ளது பல்கலைக் கழகம். இடைக்காலத்தில் நின்று போன செயற்பாடுகள் சிறப்பாகத் தொடர்வதற்கு பல தரப்பிலிருந்தும் ஒத்துழைப்புகள் கிடைக்க வேண்டும். தமிழைக் காக்க பல்கலைக் கழக நிதி நல்கை குழு ஒத்துழைக்க வேண்டும்.

தஞ்சையில் நான் தங்கியிருந்தபொழுது அறிஞர் அருளி அவர்களளைச் சந்தித்தேன். பதிமூன்றாண்டுகளாகக் கடுமையாக உழைத்து 135 அறிவியல் துறைகளுக்கான தமிழில் கலைச் சொற்கள் களஞ்சியம் ஒன்றை சிறப்பாக அணியப்படுத்தியிருக்கிறார். 1500 பக்கங்கள்; ஒன்றரை இலக்கம் கலைச் சொற்கள். ஒலி அச்சு படிகளை என்னிடம் தருகிறார். சுமார் மூன்று கிலோ எடை இருக்க கூடும். எனக்கு ஏற்பட் வியப்புக்கு அளவில்லை. தொடர்ந்து அருளி அவர்கள் பேசுகிறார். தன்னுடையது தவ முயற்சி என்கிறார்.

துணை வேந்தர் முன்னுரை தரவேண்டும். பிறகு நூல் வெளியிடப் படும் என்கிறார். தமிழுக்கான மிகப் பெரிய கலைச் சொற்களஞ்சியம். பாவாணர் அவர்களைத் தொடர்ந்து அருளி அவர்கள் செய்திருக்கும் மாபெரும் தமிழ்ப்பணி. கலைச் சொல் ஆக்கத்தோடு வேர்ச்சொல் ஆய்விலும் கடந்த பல ஆண்டுகளாகத் தாம் மேற்கொண்டுள்ள ஆய்வு குறித்து அருளி அவர்கள் கடல்மடை திறந்தது போல் பேசுகிறார். தன்னலம் என்று சிறிதும் இல்லாமல் ஒவ்வொரு நாளும்15 மணிநேரம் கடுமையானத் தமிழ்ப் பணி மேற்கொண்டிருக்கும் அருளி அவர்களின் உழைப்பு தமிழ் மக்களின் வணக்கத்திற்குரியது என்பதில் ஐயமில்லை.


படிப்பகம்

www.padippakam.com

○ தோழர் எஸ்.என். நாகராசன அவர்களிடம்தான் நானும், புலவர் ஆதி, எஸ்.வி.இராசதுரை போன்றவர்களும் மார்க்சியம் கற்றோம். திருத்தல்வாத மார்க்சிய கட்சிகளோடு அவர் என்றும் முரண்பட்டுத்தான் இருந்தார். அறிவியல் மாணவராக இருந்து மார்க்சியத்தைக் கற்றுக் கொண்டவர் அவர். மா.வோ. நெறியில் மார்க்சியத்தைப் பல பரிமானங்களில் வளர்த்தவர் தோழர் நாகராசன். மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகிய அந்நியமாதலை கண்டறிந்ததன் மூலம், மதம், கலை இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை மார்க்சிய நெறியில் ஆழமாகப் புரிந்து கொள்ள வழி செய்தவர் நாகராசன். எந்த ஒரு மார்க்சிய கட்சியோடும் இன்று அவர் இல்லை. எனினும் மார்க்சிய இயக்கத்தில் அவர் தொடர்ந்து இயங்குகிறார். மார்க்சியம் - கிழக்கும் - மேற்கும் என்ற அவரது நூல் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்குமானால் உலகளவில் இன்று பேசப்படுபவராக இருந்திருப்பார். ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதை அவர் எப்பொழுதுமே வற்புருத்தி வருகிறார். தேசிய இன விடுதலையை மார்க்சிய நெறியில் தொடக்கம் முதலே வற்புறுத்தினார்.

பசுமைப் புரட்சியை அவர் என்றும் ஆதரித்தது இல்லை. உழவர் முதலியவர்களை உள்ளடக்கிய அடித்தளமக்களோடு அவர் என்றும் நெருக்கமாக இருந்திருக்கிறார். வைணவத்தின் அன்பு நெறியை அவர் போற்றினார் என்பதன் காரணமாக அவரைப் பார்ப்பனர் என்று முத்திரை குத்தி ஒதுக்கியவர் பலர். சோவியத் ஒன்றியத்தின் தகர்வை அடுத்து மார்க்சியத்தின் உள்ளுறை ஆற்றல்களை இனிமேம்படுத்த முடியும் என்று ஓயாமல் எடுத்துரைக்கிறார். மார்க்சின் உள்ஆழுங்களை அவரைப் போல எடுத்துரைப்பவர் எனறு இன்னொருவரைச் சொல்வதற்கில்லை. நவீன அறிவியல் தொழில் நுட்பம் குறித்து அவரது திறனாய்வுகள் விரிவானவை. மார்க்சின் மார்க்சியத்தை ஆணிய மார்க்சியம் என்றும், மாவோவின் மார்க்சியத்தை பெண்ணிய மார்க்சியம் என்றும் வேறுபடுத்தி விளக்குகிறார்.

75 வயதிலும் உற்சாகம் குறையாமல் அவர் எழுதியும், பேசியும் வருகிறார். தமிழ்நாடளவில் மட்டுமல்லாமல் இந்தியா மற்றும் மலேசியாவிலும், அமெரிக்கா முதலிய நாடுகளிலும் இவரை நேசிக்கும் நண்பர்கள் நிறைய உள்ளனர்.

டிசம்பர் 26 அன்று அவரது 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முறையில் அவரைப் பற்றித் தோழர்கள், நண்பர்கள் ஆகியவர்களின் நினைவுகளையும், மதிப்பீட்டையும் தொகுக்கும் முறையில் சிறப்பான மலர் ஒன்றை வெளியிட

www.padippakam.com

முடிவு செய்துள்ளோம். அவரது நூல்களை மறுபதிப்புச் செய்யவும் முயற்சி எடுத்து வருகின்றோம். சத்தியமங்களம் தோழர்கள் இம்முறையில் முன்னின்று செயல்படுகின்றனர். இவர்களோடு நண்பர்கள் பலரும் ஒத்துழைக்கின்றனர். தோழர் எஸ்.என்.நாகராசன் அவர்களின் மார்க்சியப் பேரறிவைக் கற்றுக் கொள்ளும் முறையில் கோவை, ஈரோடு, திண்டுக்கல் முதலிய இடங்களில் நண்பர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து வருகிறோம். மலருக்குக் கட்டுரைகள், நன்கொடைகள் தேவைப்படுகின்றன. கீழ்க்கண்ட முகவரியோடு நண்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். நண்பர்கள் தமிழ்நேயத்தோடும் தொடர்பு கொள்ளலாம்..

தோழர் எஸ்.ஆர். சுந்தரராமன்
அஞ்சல் பெட்டி எண் - 2
சத்தியமங்களம் - 638 401
ஈரோடு (மா) - தொலை பேசி : 95429 - 525047

## வரப்பெற்றோம். நன்றி

- அருளி
  ஆசிரியர் : பாவலரேறு பெருஞ்சித்தரானார்
  வெளியீடு : தமிழினத் தொண்டியக்கம், 466, வழதாவூர்ச் சாலை புதுச்சேரி - 605 009 பக்கங்கள் 130 விலை ரூ 30
- இந்திர காவியம் அல்லது நான்மறை விளக்கம்
  ஆசிரியர் : டாக்டர் கு. செல்லப்பா
  வெளியீடு : அருள் வள்ளலார் கல்வி அறக்கட்டளை
  21/153, 6வது குறுக்குத் தெரு, மங்களா நகர், சென்னை - 116
  பக்கங்கள் : 208 விலை : ரூ50.00
- சாகுபடிப் புரட்சி
  ஆசிரியர் : மு.பாலசுப்பிரமணியம், மு.குமரவேல்
  வெளியீடு : அறவி, நடையனேரி, விருதுநகர் - 626 103
  பக்கங்கள் : 64 விலை : ரூ 20/
- சல்லிக் கட்டு
  ஆசிரியர் : முனைவர் ஆ.முத்தையா
  வெளியீடு : அனறில் பதிப்பகம்
  9,1-D ஜவஹர் தெரு மதுரை - 20
- 36 கவிதைகளும், 18 ஓவியங்களும்
  ஆசிரியர் : முருகேஷ்
  வெளியீடு : கவின் நூல் பயணம்
  36, தோப்புத் தெரு, வந்தவாசி - 604408
  பக்கங்கள் : 64 விலை ரூ 20


படிப்பகம்

www.padippakam.com

கட்டுரைகள்:

# இந்தியா : காலத்தை எதிர்நோக்கி

## -யேன்மிர்தால் நூல் அறிமுகம், தொடர்ச்சி-பகுதி 2

– அருள்திரு.சுதாகர்

1951ல், இந்தியாவில் 80% நிலவுடைமை பார்ப்பனர், பூமிகார், ராசபுத்திரர் போன்றோரின் கைகளில் இருந்தது. 'ஏரைத்தொடுவதில்லை' என்ற மூடத்தனத்தை வளர்த்த உழைப்பின் விரோதிகளான பார்ப்பனர்கள், குர்மிகள்தான் நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டு, மக்களை கொத்தடிமைகளாக்கினர். யாதவர், குர்மி, கொயிரி போன்ற இடைநிலை சாதியினர் குத்தகை விவசாயிகளில் 75% அளவினராக இருந்தனர். ஏழைகள், தலித்துகள், கூலி விவசாயிகளின் தங்களின் சுய அடையாளங்களை இழந்து, சமஸ்கிருதமயமாக்கப்பட்டனர்.

1770ல் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் முதல் பஞ்சத்தை ஏற்படுத்தினர். ஒரு கோடி மக்கள் மடிந்தனர். 1/3 பங்கு நிலம் தரிசானது. குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டனர். மனிதனை மனிதன் தின்கிற அளவிற்கு நிலைமை முற்றிவிட்டது. ஆங்கிலேயர்களுடைய வரிவசூலும், நிர்வாகமுமே பஞ்சத்திற்கான காரணங்கள். 1943ல் ஒரிசாவிலும், வங்கத்திலும் பஞ்சம் மீண்டும் தலைவிரித்தாடியது. சுதந்திர இந்தியாவிலும் அதே நிலை. முன்பு வெள்ளையர் ஆண்டதால் பஞ்சம். தற்போது உள்நாட்டு / வெளிநாட்டு கூட்டுக் கொள்ளையர்களால் பஞ்சம். நாளேடுகளுக்கு இது பற்றி கவலையில்லை.

வறுமை, பஞ்சம், ஏழ்மை இவற்றையெல்லாம் பட்டொளிவீசும் சுதந்திரக் கொடியில் எவ்வளவு காலத்திற்கு மூடி மறைத்திட முடியும்? மதமுகமூடிகளை அனைவருக்கும் மாட்டி விடுவதால் மக்களின் துயரங்களை இல்லாதொழிக்க முடியுமா?

இந்தியச் சூழலில் மதமுரண்பாடுகள் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. மதக் கலவரங்கள் என்ற பொதுவாக அறியப்படுபவை அரசியல் / சமூகத் தன்மை உடையவை. இந்திய நிலப் பிரபுத்துவத்தின் விளைவுகளே மதங்களுக்கிடையிலான பூசல்கள். வங்கத்தில் வகுப்பு மோதலை ஆங்கிலேயர்கள் திட்டமிட்டே உருவாக்கினர். 1909க்கு முன்பு வகுப்பு மோதல்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முசுலீம்கள், இந்துக்கள் என ஆள்வோரால் மக்களைத் தங்களின் நலன்களுக்காக துண்டாட முடிகிறது !

மொழி அடிப்படையில் வங்கம் பிரிந்துபட்டிருக்க வேண்டும். இந்தி, ஒரியா, வங்காளி தனித்தனி நிர்வாகமாயிருக்க முடியும். திறமையான நிர்வாகமே இலக்கு எனில் வங்கமொழி பேசியோரை ஒரே மாகானமாக்கியிருக்க வேண்டும். புதிய வங்கத்தில் வங்கமொழி பேசுவோர் 1கோடியே 70இலக்கம் பேர். இந்துக்கள்



படிப்பகம்

www.padippakam.com

2கோடி, சமூக அரசியல் முரண்களை மதப்பிரச்சனையாக்கிக் கொள்ள இது தளம் அமைத்தது.

அமெரிக்காவில் இனவெறுப்பில் சீனர்களைக் கொடுமைப் படுத்தினர். பதிலடியாக சீனா அமெரிக்கப் பொருட்களை புறக்கனித்தது. அமெரிக்கா சீனர்களை கொத்தடிமைகளாய் உறிஞ்சிப் பயனில்லை என்றதும் அவர்களை வெளியேற்றியது. சீனாவைப் போன்று வங்கமும் பிரிட்டனின் பொருட்களை புறக்கனிப்பு செய்தது. இது 5கோடி வங்காளிகளையும் ஒன்று படுத்தியது. வங்க எழுச்சி ஆங்கிலேயரின் பணப்பையக் குறிவைத்து தாக்கியது. உள்நாட்டுத் தொழில் செழித்தது. ஜமீன் முதல் சலவைத் தொழிலாளி வரையில் ஒன்றுபட்டிருந்தனர். "அமெரிக்கா - பிரிட்டன்" மிகப்பெரிய சாதியமைப்பு என்பதை மக்கள் புரிந்து கொண்டனர். வங்க சுதேசி இயக்கத்தை மீறும் நபரோடு உறவு இல்லை, திருமணம் இல்லை. நாவிதரும் சேவை செய்யக் கூடாது. வங்காளிகள் என்னும் உணர்வற்றுபோனவர்களை 'சமுகத் தொடர்பிலிருந்து விலக்கி வை' என்றுதான் அனைவரின் எழுச்சி முழக்காமாகயிருந்தது. மனிதர்களை நடத்துவதைப் போல் விலங்குகளை நடத்தினால் அவை பைத்தியமாகிவிடும். சமூகப் புறக்கனிப்பு மனிதர்களை இறுக்கமான நிலைக்கு கொண்டு செல்லும். ஆனால், அரசியல் மக்களின் சக்திவாய்ந்த இச்செயகை முறியடிக்க முடியாமற் போனது.

1905, 06, 07ல் இந்து நடுத்தர வர்க்கமே சுதேசி இயக்கத்தை முன்னெடுத்தது. இதில் அதற்கு ஆதாயம் உண்டு. ஆங்கிலேயர்கள் இந்தச் சூழலில்தான் இஸ்லாமியர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்க முயன்றனர். மதம் மேலும் சிக்லான ஒன்றாயிற்று. சாதி, வர்க்கம், மதம், தேசிய இனம் யாவும் ஒன்றுடன் ஒன்று சிக்கிக் கொண்டுள்ளன. போலீசு உளவாளிகள் தீவிரமாய் மதவெறியை நெய்யூற்றி வளர்த்தனர். இவ்வேளையிலும்கூட, ஒன்றாகவே இந்துக்களும், இசுலாமியரும் வாழ்ந்து வந்துள்ளனர். அல்லாகு அக்பரும், வந்தே மாதரமும் சேர்ந்தே ஒலித்தன.

மதவெறியர் முன்வைக்கும் ஆன்மீகம் உணர்ச்சிப் பூர்வமானது. அறிவை வக்கிரப் படுத்துவது. மலட்டுதனமானது. சுயமறுப்பும், சுய துள்ளலும் உடையது. செயலற்ற தன்மைக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இத்தகைய இழிந்த ஆன்மீகம் கொள்ளை நோய் போல் பரவுகிறது.

கடுமையான அடக்கமுறையும் மோசமான ஆன்மீகத்தைப் போன்றதுதான். ஒன்று செயலற்றறோராய் மனிதர்களை மாற்றுகிறது. அல்லது பயங்கரவாதிகளை உருவாக்குகிறது. ஆங்கிலேயர்களுக்கு நிலைமையைச் சமாளிக்க ஆன்மீகமும் பயன்பட்டது. அடக்கு முறையும் பயன்பட்டது. கைது சித்ரவதை, நாடு கடத்தல், தூக்கு போன்றவை மூலம் மக்களை தடுக்க முடியாதபோது, அச்சுறுத்தல் என்ற ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் ஆங்கிலேயர்கள் தங்களைச் சுற்றிலும்


படிப்பகம்

www.padippakam.com

பீரங்கிகளையும், சுடு கருவிகளையும் குவித்து வைத்திருந்தாலும், அவர்களை ஓயாமல் அச்சுறுத்தி வந்த விடயம் " பயங்கரவாதம்"தான். துப்பாக்கிகளைக் கையில் வைந்திருந்தும் அதிகாரிகள் தங்களின் மெய்க் காவலர்களைக் கண்டு அஞ்சினர். அடையாளம் தெரியாத யாரைப் பார்த்தாலும் அச்சமே ஆட்சிகொண்டது. வெள்ளை எசமானர்கள் முன்பு மண்டியிட்டுத்தான் நிறுத்தப்பட்டனர். நேருக்கு நேர் நிற்க வைத்து பேசுவதற்கேகூட அவர்களுக்கு அச்சமாயிருந்தது.

பயங்கரவாதம் மக்கள் இயக்க வளர்ச்சியில் ஒரு அடி முன்னேற்றம். மக்களுக்கும் சுயமரியாதையைப் பெற்றுத் தருகிறது பயங்கரவாதம். நடுத்தர வர்க்கப் புரட்சியாளர்களின் பண்பு பயங்கரவாத மரபு இந்தியாவில் உண்டு.

1925ல் தடை செய்யப்பட்ட ஒரு தேசிய ஆவணம் கீழ்க்கண்டவாறு உள்ளது. "இந்தியப் புரட்சியாளர்கள் பயங்கரவாதிகளும் அல்லர் அராசக வாதிகளும் அல்லர். இந்த நாட்டின் அராஜகத்தை பரப்ப அவர்கள் என்றுமே எண்ணியதில்லை. ஆகவே, அவர்களை முறையாக அராசகவாதிகள் என்று அழைக்க முடியாது. பயங்கரவாதம் அவர்களின் லட்சியம் அல்ல. அவர்களால் பயங்கரவாதிகள் என்றும் அழைத்துவிடமுடியாது. மிகத்திறமையான பதிலடி என்ற முறையில் ஒரு சில தருணங்களில் அவர்கள் பயங்கரவாதத்தை பயன்படுத்தியிருந்த போதிலும்கூட, பயங்கரவாதம் மட்டுமே விடுதலையைக் கொண்டவந்துவிடும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. பயங்கரவாதத்திற்காக பயன்படுத்துபவர்களும் அல்ல. தற்போதைய அரசு நீடித்து வருவதற்கு ஒரே காரணம் அந்நியர்கள் இந்திய மக்களைத் மிகத் திறமையாக அச்சுறுத்தி வைத்திருப்பதுதான். இந்திய மக்கள் தங்களின் ஆங்கில எசமானர்களை விரும்பவில்லை. ஆங்கிலேயர்கள் மீது மிகப்பயங்கரமான அச்சம் கொண்டிருப்பதுதான் மக்கள் அவர்களுக்கு உதவி வருகிறார்கள். பயங்கரவாதிகளை இந்திய மக்கள் நேசிக்கவில்லை என்பதினால் அல்ல. மக்களிடம் குடி கொண்டிருக்கும் இந்தப் பேரச்சம்தான் புரட்சியாளர்களுக்கு உதவுவதிலிருந்து அவர்களைத் தடுத்து விடுகிறது. இந்த அரசு பயங்கரவாதத்தை எதிர்பயங்கவாதத்தின் மூலம்தான் நிச்சயமாய் எதிர்கொள்ள வேண்டும். நமது சமூகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் கையாலாகத தன்மை வேரோடியிருப்பதால் சமூகத்தில் சரியான உயிர்த் துடிப்பை மீண்டும் நிலை நிறுத்தப் பயங்கரவாதம் ஒரு திறனான வழிமுறையாகும். இது இல்லாமல் முன்னேற்றம் சாத்தியப்படாது.

எம்.என்.ராய் மதிப்புமிகு தலைவர். ஆனால் அகில உலக கம்யூனிஸ்டு இளைஞர் அமைப்பின் சார்பாக கண்டனம் தெரிவிக்கிறார். பயங்கரவாதிகள் பற்றி அவதூறுகளை அள்ளி வீசுகிறார். வங்கத்தில் பிறந்த, பார்பண மாணவனான நரேந்திரநாத் பட்டாச்சாரியா 1905ல் பள்ளி முதல்வரால் எச்சரிக்கை செய்யப்பட்டார். கரிபால்ஸ்டியின் நூல்களை படித்தற்காக 18 வயதில்


படிப்பகம்

www.padippakam.com

பள்ளியை விட்டு நீக்கப்பட்டார். 28 வயதில் வங்கப் பயங்கரவாத இயக்கத்தின் முன்னனியாளர். குண்டாந்தடியை மறைத்து வைத்துக் கொள்வதிலும், காதின் பின்புறம் எதிரியை அடித்து வீழ்த்துவதிலும் சமர்த்தியம் காட்டினார். 10வது ஜாட் படைப் பிரிவைக் கலைக்கும் அளவிற்கு செயல்பட்டார். பலமுறை துறவி வேடம் போட்டுத் தப்பித்தார். 1857ல் நாடு தழுவிய வங்கிக் கொள்ளை நடத்த முனைந்தார்.போர்டு கம்பெனியிடம் பணம் ரூ 18,000 பெற்றார். கட்சிக்காக கொள்ளை நடத்தவதில் தவறில்லை என வாதிட்டார். பயங்கரவாதத்தை கெரில்லாப் யுத்தமாக 'மாற்றினார். 1914ல் முதல் உலகப் போரின் போது, செருமனியிடம் பேசி ஆயுதம் வாங்குவதற்காக இளம் பாதிரியார் மார்ட்டினாக எம்.என்.ராய் வேடம் பூன்டார். தீவிர மாந்தநேயம் என்ற கொள்கையை முன்னிறுத்தினார்.

1951ல் இந்திய கம்யூனிச கட்சி மாநாட்டில் முன்வைத்த கட்சித் திட்டம் மாஸ்கோவில் முடிவுசெய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் இந்தியப் பொறுப்பாளராக எம்.என்.ராய் விளங்கினார். நிதியாளரான ஜாட்னிட்கிலின் ஊழலை எதிர்த்து ராய் வெளியேறினார். 1954ல் இறந்தார்.

இந்திய கம்யுனிஸ்டுகள் பிரிட்டன் கம்யூணிஸ்டுகளின் கீழ் இருக்க நேரிட்டது. இங்கிலாந்து அரசியலில் ஒன்றும் பிடுங்க முடியாத பிரிட்டன் கம்யூனிஸ்டுகள் இந்திய கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் என்ன செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் பார்பனர்கள் மட்டுமல்ல, பழுப்புநிற வெள்ளையர்களும்தான்.

வங்கத்தின் வாஸ்டர் ஸ்காட் என்று பங்கிம் சந்திர சட்டர்ஜியைக் குறிப்பிட வேண்டும். ஆனந்த மடம் என்கிற இவரது படைப்பு 1772 - 74ல் நடந்த சந்நியாசிகளின் கலகத்தை கதைக் கருவாய்க் கொண்டிருந்தது. 1773ல், பிச்சைகாரர்களும், சந்நியாசிகளும் ரஸ்க்பூரில் தளபதி தாமசின் தலைமையில் வந்த சிப்பாய்கள் படைப்பிரிவிரைத் தோற்கடித்தனர். தேசம் விடுதலை அடையும் வரையில் சொத்து, சுகம், வீடு, நண்பர் என யாவற்றையும் விலக்கினார்கள். இவர்களிடம் சாதி இல்லை. வந்தே மாதரம் என்னும் முழக்கம் உண்டு. அனுசிலன் சமிதி என்னும் இரகசிய தேசியக் கட்சி உருவானது. வங்கத்தில் தேசிய உணர்வு கிளர்ந்தெழ இந்நாவல் ஒரு முக்கியக் காரணம்.

1921ல், காந்தி 'ஒராண்டிற்குள் சுயராச்சியம் வாங்கித் தருவேன்' என்று ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினார். பல இலட்சக்கணக்கான மக்களின் தியாகங்களையும், முயற்சிகளையும் காந்தி ஒன்றுமில்லாமல் செய்து விட்டார். 1928ல் காந்தி சுபாஷ் படையை 'இசை நாடக வீரர்கள்' என்று இழிவுபடுத்தினார். எந்தவொரு போராட்டமும் வலுவடையும் போது அதைப் பலமிழக்கச் செய்வார். ஆங்கிலேயரின் அடக்கு முறை அதிகரிக்கவே இவர் உதவினார். பிரிட்டனின் இந்தியப் படைகள் சொந்த மக்களைச் சுடுவதற்கு மறுத்தபோது படைவீரர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக, 'அவர்கள் கீழ்ப்படியாததால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்' என்று கூறி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார். ஏப்18,


படிப்பகம்

www.padippakam.com

1930 சிட்டகாங் நகர் / ஆயுதக் கிடங்கு புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டது. 1857க்கு பிறகு நடைபெற்ற மிகப் பெரும் தாக்குதல் இதுவே எனலாம்.

எதிரிக்கு எதிரியிடம் உதவி பெற்று நாட்டை விடுவிப்பதே போசின் திட்டம் முதல் உலகப்போரில் இந்த யுத்தியை ராய் பின்பற்றினார். 2ம் உலகப்போரில் போஸ் பின்பற்றினார்

உஸ்தாஜாலின் குரோசியன் படை இட்லரின் துணைப்படையாகச் செயல்பட்டதைப் போன்றே இந்திய தேசிய இராணுவம் பயன்படுத்தப்பட்டது. 1934ல், முசோலினியைப் போஸ் பாராட்டினார். 1940ல் போஸ் எதிர்பார்த்த உதவிக்கரம் இட்லரிடமிருந்து நீட்டப் படவில்லை. இரண்டு காரணங்கள். 1. இந்தியாவின் மீதான ஸ்@டாலினின் அக்கறை. 2. இந்தியர் மீதான வெறுப்பு. 'கீழானவர்களுக்கு விடுதலையா?' என்னும் மனோபாவம்.

இந்திய தேசிய வீரர்கள் இட்லருக்கு விசுவாசமாயிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். 1943ல், நீர்மூழ்கியில் செருமானியருடன் சப்பானுக்குச் சென்றார். 1945 ஆக15ல் சப்பான் சரணடைந்தது. ஆக18 அன்று 14.30 மணிக்கு டய்சோரு என்னும் இடத்திலிருந்து தாய்வானுக்கு வானூர்தியில் சென்றபோது விபத்திற்குள்ளானார் போஸ். போஸ் துரோகியல்ல. ஏஜெண்டும் அல்ல. அந்நிய நாட்டின் உதவியோடு ஒருவர் தன் தாய்நாட்டை விடுதலை செய்வது இயலாத செயல் என்பதை அவர் இறுதிவரையில் உணரவே இல்லை.

1857ல், இந்திய சுதந்திரப் போரைப்பற்றி, 1907, 23 வயதே நிரம்பிய வினாயகர் தாமோதர் சாவர்கர் மராத்தியில், 'கடந்த காலத்தில் எவரும் காலூன்ற முடியாது. விழிப்புணர்வு இல்லாதவற்களுக்கு எதிர்காலம் இல்லை. இன்றுள்ள நிலைகளைச் கணக்கெடுக்க வேண்டும். அன்று அப்படி என்பதற்காக, இன்று இப்படி என்பது அறியாம் முட்டாள்தனம்' என்றெழுதினார். இந்திய நிலைகளைத் சரியாக கணக்கில் கொண்டு செயல்பட்டவர் இவர்தான். கம்யூனிஸ்டுகள் புரட்சிகரச் சூழல் கனிந்து வருவதையோ, வந்து நிற்பதையோ கண்டு கொள்ள தவறிவிட்டனர். சாவர்க்கர் பின்னால் மிகக் கேவலமான இந்துவச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டபோதிலும், இளம் சாவர்க்கர் இந்தியச சூழலை மிகச் சரியாக கணக்கில் கொண்டிருந்தார்.

இந்தியாவை விட்டு ஆங்கிலேயேயர்கள் வெளியேறுவதற்கு வேறு சில காரணங்கள் இருக்கின்றன.

1. மகா பிரிட்டன் உலகச் சந்தையிலிருந்து வெளியேறியது
2. இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்தின் ஆட்சிப் பரப்பளவு மிகவும் சுருங்கிவிட்டது.
3.1946ல் கப்பற் படை எழுச்சி

தேசிய வேர்கள் இல்லாத ராய், சமூக வேர்கள் இல்லாத போஸ் - இவ்விருரையுமே வராலாறு பாடங்களாய்ச் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

மதச்சார்பற்ற இந்தியா பற்றி நேரு பெருமிதம் கொண்டிருந்தார். ஆனால், மதவெறித் தீயை, சூறையாடலை ஒன்றும் செய்ய முடியவில்லை. மதக்கலவர


படிப்பகம்

www.padippakam.com

பட்டியல் இதோ :

| | |
|---|---|
| 1960 - | 1979 (மதக்கலவரங்கள்) |
| 1960 - 26 | 1961 - 92 |
| 1964 - 1070 | 1965 - 676 |
| 1967 - 198 | 1968 - 346 |
| 1969 - 519 | 1979 - 521 |
| 1971 - 321 | 1972 - 240 |
| 1973 - 242 | 1975 - 1976 374 |
| 1977 - 400 | (அவசர நிலையின் போது) |

நேருவின் இந்திரா வெறிபிடித்தவராகவே இந்திய அரசியலில் தென்படுகிறார். அவரது வெறிக்கு இரத்தமே கட்டணம். உள்நாட்டில் விதவை உடையும், வெளிநாட்டில் நவீன உடையும் தரித்தார். வீட்டில் ஆடம்பரமான சேலைகளோடிருந்தார். மோசடி, ஏமாற்று, வஞ்சகம் இவற்றை பொறுத்தவரையில், மாவோவிற்கு ஜியாங் குயிங் எப்படியோ அதுபோன்றே நேருவிற்கு இந்திரா வாய்த்தார்.

தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்திற்கு ஆலை மூடல் என்பதனைப் பதிலடியாக இந்திரா வழங்கினார். இவரின் காலத்தில் முதலாளியம் வளர்ந்தது. தொழிலாளியின் போராடும் திறன் குறைந்தது.

ஆங்கிலேயர், அமெரிக்கர், லீசியர் இவர்களே நமது அரசை நடத்திவந்தார்கள். சட்ட முறைகள் கேலிக்கூத்தாயின. ஏதேச்சதிகாரம் நடைமுறைக்கு வந்தது. சஞ்சய் கட்டுப்படுத்த முடியாதவராணார். அதிகார வர்க்கம் வளமும் நிலவுடைமையாளர் செல்வாக்குப் பெற்றனர். நடுத்தட்டு வர்க்கம் சலுகையிலும், ஊழலிலும் சிதைந்தது. காவல் துறையின் நெறிகெட்ட போக்கை தட்டிக் கேட்க இந்திரா தயாரில்லை. இந்தியாவில் முதலாளியத்தை வளர்த்துக் கொண்டே, வெளிநாடுகளில் தன்னை ஒரு சோலிசவாதியாகக் காட்டிக் கொள்ள அவரால் முடிந்தது.

இந்தியாவில் இரட்டை மனோபாவம் புதிதான ஒன்றல்ல. கோயில் சுவர்களில் பாலியல் சுதந்திரம் இருக்கும். கிராமங்களில் பாலியல் அடக்குமுறை இருக்கும். நிலப்பிரபுக்களின் கனவு வெளிப்பாடாக கொனரக், கஜுராஹோ விளங்கின. நடைமுறையில் அவர்கள் பெண்களை கொத்தடிமைகளாகவே நடத்தி வருகின்றனர்.

## மதுரா வழக்கு

மகாராட்டிரத்தில், நாக்பூர் மாவட்டத்தில் வசித்த மதுரா தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண். 1972ல் அவருக்கு 14 வயது. இவர் வேலை பார்த்துவந்த வீட்டின் மருமகன் அசோக் 1972, மார்ச் 26 அன்று கடத்திச் சென்று விடுகிறான். மதுராவின் சகோதரர் காமா இது குறித்துப் புகார் தெரிவிக்கிறார். சந்திரப்பூர் அருகிலுள்ள தேசாய் கஜே காவல் நிலையத்தில்


படிப்பகம்

www.padippakam.com

காலை 9-10.30 மணிவரை மதுரா விசாரிக்கப்படுகிறார். வெளியே மக்கள் கூடியிருக்கும்போதே, குப்தா மதுராவை கழிவறை ஒன்றிற்குள் தள்ளினான். அங்கே கட்டில் போடப்பட்டிருந்தது. துக்காராமும், கண்பத்தும் மதுராவை பாலியல் நாசப்படுத்தினர். துக்காராம் அதிகம் குடித்திருந்தால் அவனால் வல்லுறவு செய்யமுடியவில்லை. மதுராவின் அலறல் கேட்டுக் கூட்டம் வெளியே கூடியது. நிலைமையைச் சமாளிக்க, தலைமைக் காவலர் வழக்கு பதிவு செய்ய ஒப்புக்கொண்டார். பம்பாய் உயர்நீதி மன்றம் கண்பத்திற்கு 5 ஆண்டுகளும், துக்காராமிற்கு 1 ஆண்டும் தண்டனை விதித்தது. வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது, உச்சநீதிமன்ற நீதிபதிகளான 1.ஜஸ்வந்சிங் 2.தய்லா ஷாம் 3.கோசல் ஆகியோர் மதுராவிற்கு ஏற்கனவே பலரோடு தொடர்பு இருந்தது என்றனர். 14, 15 வயதில் மதுரா வயதுக்கு வராதவள். அவளை எப்படி கெடுக்க முடியும்? கழிவறைக்கு இழுத்துச் செல்லும்போது ஏன் கதறவில்லை? என்றெல்லாம் தீர்புரையில் குறிப்பிட்டிருந்தனர். தில்லி பல்கலைக் கழகத்தின் சட்டத்துறையின் முதல்பெண் உறுப்பினர் லோதிகா சர்க்கார் 1977ம் ஆண்டு தலைமை நீதிபதி சந்திர சூட்டிற்கு இது குறித்து பகிரங்கக் கடிதம் எழுதினார். அதற்கு பிறகுதன் மதுரா வழக்கு பரவலாகப் பேசப்பட்டது. கலைகள், சட்டங்கள், யாவும் நிலப்பிரபுத்துவ எதார்த்தங்களுடன் விளங்குவதையே நீதி மறுக்கப்பட்ட கதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

## பாக்பத் வழக்கு

சூலை18, 1980. மாயாதியாகி, அவருடைய கணவர் ராஜ் பாலா வேறு இரு நண்பர்கள் யாவரும் ஒரு மகிழுந்தில் பாக்பத்திற்கு அண்ணன் மகன் திருமணத்திற்கு சென்று கொண்டிருந்தனர். அவர் ஒரு இரானுவவீரர். இவர்களின் குடும்பம் ஒரு விவசாயக் குடும்பம்.

வண்டியை வழி மறித்த ஒரு காவலர் மாயாவின் கழுத்திலிருந்த சங்கிலியைப் பறிக்க முயன்றார். கத்தவும் விட்டுவிட்டுச் சென்றவர், சிறிது நேரத்திற்குள் ஆயுதந் தாங்கிய சில காவலர்களுடன் அங்கே வந்தார். ராஜ்பாலாவையும், உடன் வந்த இருவரையும் சுட்டுக் கொன்றனர். மாயாவை அம்மணமாய்ப் பாக்பத்தின் கடைத்தெருவழியே கூட்டிச் சென்றனர். ஏழு காவலர்கள் மாயாவை வல்லுறவு செய்தனர். குடிப்பதற்கு சிறுநீர் கொடுத்தனர். மருத்துவமனையில் மாயாவின் பிறப்புறுப்பில் ஆறு தையல் போடப்பட்டது. மோதலின் போது கொள்ளையர்கள் கொலை செய்யப்பட்டதாகக் காவலர்கள் அறிக்கை அளித்தனர். ஈரான் ஷா விட, சிலியின் பினோ செட் போன்றோரின் காவலரை விட இந்தியக் காவல் துறை படுகேவலமானதும், இழிவானதும் ஆகும்.

இந்தியாவில் மக்களாட்சி என்பது பேருக்குத்தான். 70% மக்கள் விவசாயத்தை நம்பியுள்ள ஒரு நாட்டில் மக்களாட்சி நடத்துவதாய்க் கூறுகிற அரசு விவசாயிகளின் வயிற்றிலடித்து முதலாளிகளை காப்பாற்றுகிறது.


படிப்பகம்

ஒரிசாவில் 5வது பெரும் தொழிற்சாலையும், 2வது பெரும் நிறுவனமுமான ஜே.கே. காகித ஆலை 1958ல் தொடங்கப்பட்டது. ஜே.கே. சிங்கானியாவினால் தொடங்கப்பட்டது. ஏராளமான மூங்கில், மலிவு மின்சாரம், போதிய நீர் வசதி, இரயில் பாதை போன்றவை கிடைப்பதினால் இங்கு இது நிறுவப்பட்டது. காடுகள் அழிக்கப்படுவதும், மண்ணரிப்பு ஏற்படுவதும் , குறை கூலியில் உழைப்புச் சுரண்டலும் அதிகரித்தது. மூங்கில் தொழிலாளிகள் காட்டில் வேலை நிறுத்தம் செய்தனர். ஒப்பந்தக்காரர்கள், வன அதிகாரிகள் ஆகியோரை எதிர்த்துக் கலகம் செய்தனர். ஆற்று நீர் முழுமையாக ஆலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதைக் கண்டித்தனர். 8 மணி நேரவேலைக்கு நான்கு ரூபாய் கூலி கொடுக்கப்படுவதை எதிர்த்தனர். பழங்குடிகள், கூலித்தொழிலாளர்களின் உறுதிமிக்க போராட்டம் அனைவரின் ஒத்துழைப்போடு நடைபெற்றது. இந்திய வரலாற்றில் இது ஒரு அரிய நிகழ்வு.

இந்தியா தொழில்துறையில் உலகின் 14வது இடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 11.4 மில்லியன் டன் இரும்பை உற்பத்தி செய்கிறது. இது ஸ்பெயினை மிஞ்சுகிறது. தொழில் உற்பத்தியில் பிரான்சை மிஞ்சுகிறது. தென்கிழக்காசியா, மத்தியகிழக்கு ஆப்பிரிக்காக்களில் வணிக ஒப்பந்தங்களை கைப்பற்றி வருகிறது. சர்வதேசத் தகுதிவாய்ந்த, தொழில் நுட்ப வல்லுனர்களை உருவாக்கிவருகிறது. இந்தியாவில் 3ம் உலக நாடுகளின் முதலீடு அதிகரித்துள்ளது. 104 கூட்டுத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

சுவிட்சர்லாந்தில் பிர்லா ஏஜி நிதிநிறுவனத்தின் தலைமையகம் செயல்படுகிறது. தென்கொரியாவில் நெசவாலைகளை ஏற்படுத்தியுள்ளது. கென்யா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, நைஜீரியா, பிலிப்பைன்ஸ் இந்நாடுகளில் பிர்லாவின் முதலீடுகள் அதிகரித்திருக்கின்றன. மிட்சுபிசியைப் போல டாடா சிங்கப்பூரில் புகழ்பெற்ற நிறுவனம்.

பாரத ஹெவி எலக்டிரிக்கல்ஸ் லிமிடெட், இந்தியன் ஆயில் லிமிடெட், என்ஜீனிரிங் புராஜக்ட்ஸ் லிமிடெட் போன்றவை உலகின் பெரிய 200 தொழில் நிறுவனங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இதுமட்டுமே இந்தியா அல்ல. அதன் இன்னொரு முகத்தையும் காணத்தவறக்கூடாது. இந்தியா மூன்றாம் உலக நாடுஅல்ல. நான்காம் உலகநாடு. உகாண்டா, வங்கம் போன்று இந்தியா படு ஏழைநாடாக உள்ளது என்று உலக வங்கி கூறுகிறது.

15-19 வயதினில் 54.8% க்கு கல்வியில்லை. 50 கோடிபேருக்கு மேல் கல்வி எட்டவில்லை. 75,000 இந்தியக் கிராமங்களில் பள்ளி இல்லை. பெண் கல்வி மறுக்கப்படுகிறது. சிறுமிகளில் 62% பேர் பள்ளி செல்வதில்லை. இந்தியத் தொழிலாளிகள் 10% பேருக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியும். பிலிப்பைன்சில் 83%, தென்கொரியாவில் 55% இளைஞர்கள் எழுதப்படிக்க கற்றவர்கள். ஆனால் இந்திய இளைஞர்களில் 29% மட்டுமே எழுதப்படிக்கத் தெரியும்.


படிப்பகம்

www.padippakam.com

நாட்டின் வளங்களைத் தங்களின் பிள்ளைகள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்னும் நோக்கில் மேல், நடுத்தட்டு வர்க்கங்கள் செயல்படுகின்றன. தொழில் நுட்ப நிபுணர் ஏற்றுமதி நடந்தேறி வருகிறது. 1970ல், இந்தியா 3,141 மருத்துவர், விஞ்ஞானிகள் போன்றவரை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தது. இவர்களனைவரும் இந்திய மக்களின் செலவில் படித்தவர்கள். 1971 வரை இந்திய அரசு சற்றேறக்குறைய 30,00 விஞ்ஞானிகள், ஆய்வறிஞர்கள், பொறியாளர்கள் என உருவாக்கியுள்ளது. இதில் 5000 பேர் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். இவ்வளவு மூளைகளிலிருந்தும் இந்தியாவில் 30% விருந்து 70% ராக வறுமையின் பிடியில் சிக்குண்டோர் நிலவரம் உள்ளது.

18ம் நூற்றாண்டு முதலே இந்தியா ஏழைமயம் ஆகிவருகிறது. 19ம் நூற்றாண்டு முழுமையாக தொழில் நீக்கம் அல்லது தொழில் முடக்கம்தான் நடைபெற்றது. குடிசைத் தொழிலாளர் 19% லிருந்து 8.5% ஆக வீழ்ந்து விட்டனர்.

இரண்டு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு சென்ற பணம் 150,00,000 பவுண்டுகள். பிரிட்டனின் தொழிலாளிகளுக்கும் இக் கொள்ளையில் பங்குண்டு. இதுதான் அவர்கள் அமைதியான காலனியாகவாதிகளாகத் திகழ்வதற்கு அடிப்படைக் காரணம்.

1962 - 76 வரை நகரங்களுக்கு 80,00,000 விவசாயத் தொழிலாளர்கள் குடிபெயர்ந்துள்ளனர். வங்கிகள் தேசிய மயமாதல் என்பது முதலாளிகளை கட்டுப்படுத்தவில்லை. 1963 - 64ல், 2,829 மில்லியன் பிர்லாவின் சொத்து. 66-67ல் 4,469 மில்லியனாகவும், 72 -73ல் 7,258 மில்லியனாகவும், 75-76ல் 10,646 மில்லியனாகவும் உயர்வடைந்துள்ளது. இந்தியாவில் முதலாளிகளே வெற்றி பெற்று வருகின்றனர். 50 கோடி மக்களின் வாழ்க்கைத் தேவைகள் நிறைவு செய்யப் படவில்லை.

பட்டினிச் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்!
பாரினில் கடையரே எழுங்கள் வீறுகொண்டு! தோழர்களே!
தண்டனை என்ற இடி முழக்கத்தோடு நீதி வரும்!

-என்ற யூஜின் பாட்டாரியரின் ஆவேசத் தீ மேட்டுக்குடி இந்தியரை இன்னும் சுட்டெரிக்கவில்லை. 1843ல், தில்லியில் இந்திய அரசுக் கட்டிடங்கள் அடிமைகளால் கட்டப்பட்டு வந்த அதே வேளையில் தான் பண்ணையடிமை சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் விவசாய இயக்கம் சர்வதேச ஆதரவைப் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக ரசியா பாடுபட்டது. கம்யூனிசக் கட்சி ஏழை, நடுத்தர மக்களை இணைத்து, நகர்புற, நடுத்தட்டு மக்களின் ஆதரவுடன் பெரும் புரட்சியாக வெடித்த தெலுங்கானா இயக்கத்தினர் ரசியா தடைசெய்யாமலிருந்தால், 30 லட்சம் விவசாயிகள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொண்டிருப்பார்கள். டென்மார்க் அளவுள்ள 40,000 சதுரமீட்டர் நிலப்பரப்பினை தங்கள் வசமாக்கி


படிப்பகம்

www.padippakam.com

கொண்ட நிலையில் வெற்றி பெற்றிருப்பர். கம்யூனிசத் தலைமை மேல்சாதி, மேல்தட்டு விவசாயிகளின் பிணைப்பு செய்து கொண்டிருந்தது ஒரு பெரும் பின்னடைவு ஆகும்.

இந்தியப் புரட்சியாளர்களின் குறிப்பிடத் தகுந்தவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் என்று சிறிகாகுளம் வேம்படப்பு சத்திய நாரயணனைக் குறிப்பிட வேண்டும். அவர்தான் முழங்கினார்:" இன்றிலிருந்து நாம் ஒரேடியாகச் சாதியைத் தூக்கியெறிவோமாக. இன்றிலிருந்து நாம் சகோதர, சகோதரிகளைப் போல இருப்போம். ஆண்களும், பெண்களும் சேர்ந்தே உணவு உண்போம். சாதிக்கோ, சமூகத் தடைகளுக்கோ எவ்வித மதிப்பும் தரவேண்டாம்.

1970 சூலையில் போரி மலைகளில் வேம்படப்பும், ஆதிபட்ல கைலாசமும் தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் புரட்சி விதைகள் இன்னும் முளைவிட்டுக் கொண்டிருக்கின்றன." தெலுங்கு வீர இரத்தினங்களே ! வாழ்க!" என்று கொண்டப்பள்ளி சீத்தா ராமையா இம் மகத்தான் மனிதகுலப் போராளியைப் பற்றிப் பாடினார். சிறைகளால் இச்செயல்களால் இயக்க முடியுமா? என்று அரசைக் கேலி செய்தார்.

சிறீசிறீ உலகத்தரம்வாய்ந்த கவிஞர். அவரைப் பட்டினி போட்டு சிறையிலடைத்து, வன்கொடுமை புரிந்த ஆந்திர அரசு அவரது 60வது பிறந்தநாளில் அவருக்கு விருது வழங்கக் கருதியது. ஊழல் அரசின் நிழல் கூடத் தன்மீது படர இக்கவிஞர் மறுத்துவிட்டார்.

சிரபண்டராஜு மற்றுமொரு மகத்தான் புரட்சியாளர். இவர் பட்டினியாலும், காவலர் கொடுமையாலும் சாக நேரிட்டது. இவரது, இறப்பிற்கு பிறகு அரசு வழங்கிய விருதினை வாங்க மறுத்த இவரது துணைவியார் பின் வருமாறு எழுதினார்.

"விருது வேண்டாம் என்பதுதான் என்னுடைய உறுதியான பதில். 20 ஆண்டுகளாக அவரது வாழ்க்கைத் தோழியாக இருந்தவள் என்ற முறையில் அவரின் ஒவ்வொரு சிந்தனையும், உணர்வும் எனக்குத் தெரியும் என்று உறுதியோடு என்னால் சொல்ல முடியும். எங்களின் மாபெரும் இலட்சியத்தின்மீதும், மக்களின் ஆயுதப் புரட்சியின் மீதும் அவர்காட்டிய பற்று முழுமையானது. வெளிப்படையானது. 1970க்கு முன்னரே அவரது சொற்கள் இந்த இலட்சியத்திற்கே பணியாற்றின. ஏதோ ஒரு ஆட்சியில் வெறும் எதிர்ப்பாளர் மட்டுமல்ல, அகாடமிக்கும், அதை ஒத்த மற்ற நிறுவனங்களுக்கும் சொந்தமான இந்தச் சமூக அமைப்பை, இந்தச் சுரண்டல் அமைப்பு மொத்தத்தையும் அவர் எதிர்த்து வந்தார். அகாடமியின் விருதை ஒத்துக் கொள்வது என்பது அவருக்கும், அவரது புகழுக்கும் களங்கம் ஏற்படுத்துவது மட்டுமல்ல, எந்த மக்களுக்காக அவர் எழுதியும், பாடியும் வந்தாரோ அந்த மக்களையும், நெருக்கடியான நேரங்களில் அவரோடு உறுதியாக நின்றவர்களையும் களங்கப்படுத்துவதாகவும், அவமதித்தாகவும் அமையும்" - பி. சியாமளா, அய்தராபாத், ஆந்திரப் பிரதேசம்.



படிப்பகம்

www.padippakam.com

# வளர்ச்சியின் அரசியலும் "அவமதிப்பு" அநீதிகளும்

**–மேதா பட்கர்**

புக்கர் விருதுபெற்ற அருந்ததிராய்க்கு உச்சநீதிமன்றம் நீதிமன்ற அவமதிப்புத் தண்டனை வழங்கியுள்ளது. இது அரசியல் சாசனத்தின் பாதுகாவலராய் விளங்கும் நீதிமன்றத்தின் கருத்தியலையும், செயல்முறையையும் விவாதத்திற்குள்ளாக்குகிறது. அயோத்தி உள்ளிட்ட சில பிரச்சினைகளில் நீதிமன்றம் உறுதியோடும், அறிவுக் கூர்மையோடும் தீர்ப்புகள் வழங்குகிறது. இது பாராட்டத்தக்கது எனினும் மக்கள் சார்ந்த பல நூற்றுக்கணக்கான பிரச்சனைகளில் நீதிமன்றம் இத்தகைய அணுகுமுறையைக் கையாளுவதில்லை.

நடுநிலையோடு தீர்ப்பு சொல்வது, சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துவது, மாற்றுக் கருத்துக்களுக்கும், மக்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிப்பது போன்றவற்றை வெளிப்படுத்தும் போதுதான் சனநாயக அமைப்பு பக்குவப்பட்டிருக்கிறது, முதிர்ச்சியடைந்துள்ளது என்று சொல்ல முடியும். மக்களின் அடிப்படை உரிமைகளை வரையறை செய்வதிலும், உறுதிப்படுத்துவதிலும் இந்திய நீதித்துறை 70களிலும், 80களிலும் முழுமூச்சோடும், முழுவீச்சோடும் பங்காற்றியது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைச் சனநாயக உரிமைகள் என்னும் தளத்திற்குள் கொண்டு வந்துள்ளது.

அதே சமயத்தில், தேசிய மூலதனங்களும், பன்னாட்டு மூலதனங்களும் தாராளமாக மக்களின் அரசுகளின் உரிமைகளை மீறின. போபால் விசவாயு வழக்கில் நீதிமன்றம் எத்தகைய அவமானகரமான மக்கள் விரோத தீர்ப்பை நல்கியது? 1990களின் மத்தியில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மனித உரிமைகளை உறுதி செய்ய நீதிமன்றம் தடுமாறியது, தவறியது, பம்மிப் பின் வாங்கியது. பழங்குடிகள், தலித்துகள், கூலிகள், இவர்களுக்கான அமைப்புகள் போன்றவற்றை கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகிற நாசகாரத் தீர்ப்புகளை வழங்க நீதிமன்றங்கள் தயங்கவில்லை. பன்னாட்டுக் கொள்ளையர்களுக்கு ஆதரவாகவும், பாமர மக்களுக்கு எதிராகவும் செயல்படுகிற நீதிமன்றங்கள் சனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிவிட்டன.

பன்னா-முக்தா எண்ணெய் வயல், என்ரான், ரிலையன்ஸ், கோஜென்ரிக்ஸ் நிறுவனத்தின் ஊழல் பால்கோ பங்குகளை விற்றது, மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தில்லியில் அனுமதி வழங்கியது, தலித்துகளின் இடஒதுக்கீட்டில் கைவைத்தது, தொழிற்சட்டங்களை முதலாளியத்திற்கு காவு கொடுத்தது போன்ற யாவும் நீதிமன்றம் அதிகாரத்திலிருப்போரின் அரசியல் - பொருளியல் கருத்தியலுக்கு கேவலமான முறையில் மண்டியிட்டுக் கிடந்ததை தெளிவுபடுத்திவிட்டன.

மக்களின் உரிமைகளை நசுக்காமல் முதலாளிகளின் விருப்பங்களை நீதிமன்றங்கள் நிறைவேற்றி விடமுடியாது. அருந்ததிராய் மீதான


படிப்பகம்

www.padippakam.com

அவமதிப்பு வழக்கும், தீர்ப்பும் யாருடைய நலன்களுக்காக என்று கவனிக்க வேண்டும். வளர்ச்சி திட்டங்களையும், ஆளும் அரசின் முரண்பாடுகளையும் எழுதிவரும் ஒரு எழுத்தாளரை அவமதிப்பு வழக்கின் பெயரால் தடுத்து நிறுத்தி, விளக்கம் கேட்கும் நீதிமன்றத்தைச சனநாயகத்தின் காவல்தூண்களில் ஒன்று என்று கருதுவதா? மக்கள் சார்ந்து சிந்திப்போரையும், எழுதுவோரையும், செயல்படுவோரையும் முடக்கத் துடிக்கும் முதலாளியத்தின் இரும்புக்கரம் என்பதா?

1986ல் நர்மதைப் பள்ளத்தாக்கில் போராட்டம் வெடித்தலிருந்தே பேச்சுரிமை பெரும் அளவிற்கு மறுக்கப்பட்டது. சர்தார் சரோவர் திட்டத்தினால் பாதிப்பிற்குள்ளாகும் நபர்களிடம் எவ்வித உரையாடலையும் மேற்கொள்ளாத அரசின் போக்குகள் குறித்து கிராமத்தவர்கள் கடும் அதிருப்தி கொண்டிருந்தனர். கொடிய அடக்குமுறைகளையே மக்கள் சந்திக்க நேரிட்டது. கட்டாயப்படுத்தி அவர்கள் வெளியேற்றப்பட்டனர். கள்ளத்தனமாக ஊர்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டன. அவர்களின் வீடுகள் அவர்களின் கண்முன்பாகவே கரைந்து அவலத்தைக் கண்டனர், குடும்ப உறவுகளும், சமூக உறவுகளும் சிதைந்து சின்னாபின்னமாயின.

பத்தான்டுப் போராட்டத்திற்குப் பிறகும் மக்கள் சொந்த நாட்டில் அகதிகளாய் அலையும் அவலத்தைப் போக்க முடியாத சூழலில்தான், நர்மதை பச்சாவோ அந்தோலன் அமைப்பு நீதிமன்றத்தை நாடியது. சனநாயக அமைப்பும், நீதிமன்றமும் சாமானியனுக்குத் துனைநிற்கும் என்கிற நம்பிக்கையோடுதான் அனுகியது.

ஆனால், அக் 18, 2000 அன்று சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அணைக்கட்டு வேலையை மறுபடியும் துவக்குவதற்கு நீதிமன்றம் தீர்பானை பிறப்பித்தது. எங்களின் குரல்வளையை நெறித்தது. நீதியரசர் பருச்சா மட்டும் புதிய சூழல் காப்புறுதிச் சான்று பெறுதலையும், அதுவரையில் வேலையை நிறுத்தி வைத்ததையும் தனது தீர்புரையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், மற்ற நீதியரசர்கள் சனநாயக விரோ முடிவுகள் மேற்கொள்வது பற்றியோ, இழப்பீடுகள் வழங்கப்படாதது குறித்தோ, மறுவாழ்விற்கு ஒத்துவராத திட்டங்கள் பற்றியோ, சூழல் நாசமடைவதைப் பற்றியோ கவலைப்படாமல் நாங்கள் எழுப்பிய குற்றச்சாட்டுக்களைக் குப்பைத் தொட்டியில் வீசியெறிந்த விட்டனர். அச்சுறுத்தப்பட்ட மக்கள் தங்களின் வளங்களைத் தாங்களே பங்கிட்டு கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையை இழந்தனர். திட்டங்களில் பங்குதாரர்களாய்த் தாங்களும் இணைக்கப்படுவோம் என்கிற நம்பிக்கைகளை இழந்தனர். மக்களின் நியாமான கோரிக்கைகளைக் கிடப்பிலே போட்ட நீதிமன்றத் தீர்ப்பு சமூக ஆர்வலர்களையும், அரசியல் நோக்கர்களையும் சீற்றமடையச் செய்தது.

இத்தகைய சூழலில்தான், சன2001 அன்று அருந்தததி ராய், பிராசாந்த் பூஷன், மற்றும் என்மீது அவமதிப்பு வழக்கு தொடுப்பது நீதிமன்றத்திற்குச் சரியெனப்பட்டது. நீதியற்ற தீர்ப்பினைக் கண்டித்து உச்ச நீதிமன்றத்திற்கு எதிரே நாங்கள் நடத்திய அறப்போராட்டத்தையொட்டி சில



படிப்பகம்

www.padippakam.com

வழக்குரைஞர்கள் தொடுத்த வழக்கின் அடிப்படையில் என்மீது நீதிமன்றத்தின் உசாவல் நடைபெற்றது. ஆனால், அந்தச் சட்டம் படித்த வழக்குரைகளின் புகார் அருகிலுள்ள காவல் நிலையத்தில்கூடப் பதிவு செய்யப்படவில்லை. எம்மீதான குற்றச்சாட்டுக்கள் அருவருப்பானவை. அநாகரிகமானவை. படுமோசமானவை.

அருந்ததிராயும், நானும் குண்டர்களை அவர்களின் மீது ஏவிவிட்டதாகக் கூடச் கூசாது பொய் கூறினர். இத்தகைய அபத்தமான குற்றச்சாட்டுக்களை மறுத்து நாங்கள் பதில்மனு தாக்கல் செய்தோம். ஆக28,2001 அன்று எமது குற்றச்சாட்டுக்கள் அனைத்துயுமே ஏற்றுக் கொண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை நிராகரித்தது. உள்ளீடற்ற போலிமனுவைத் தாக்கல் செய்திருந்த மனுதாரர்களை கண்டித்திருக்க வேண்டிய நீதிமன்றம் அருந்ததி ராயை அடக்கத் துடித்தது. ஒரு போலித்தனமான மனுவை ஏற்று அதன் அடிப்படையில் தன்மீது பாய்ந்ததின் அறிவுக்கு புறம்பாகச் செயல்படுகிறது. நீதிமன்றம் என்று ராய் சரியாகவே சுட்டிக் காட்டினார். விமர்சனங்களை எதிர்கொள்ளத் திராணியற்ற அவற்றை அடக்கிவிடத் துடிப்பதும், மாற்றுச் சிந்தனைகளில் குரல்வளையை நெறிப்பதும், அதோடு ஒத்துப்போகதவரை அச்சுறுத்துவதும், இழிவுபடுத்துவதும்தான் அவமதிப்பு வழக்கிற்கான அடிப்படைகள் என்று ராய் கூறினார்.

அருந்ததி ராய்க்கு வழங்கப்பட்ட ஒரு நாள் சிறைத்தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய் தண்டத் தொகையும், "நீதித்துறை உள்ளும், புறமும் தொடர் அச்சுறத்தலுக்கும், உள்ளாகிக் கொண்டிருப்பதையே " எமக்குத் தெளிவு படுத்துகின்றன. நீதித்துறை சுதந்திரமாகவோ, நடுநிலை பிறழாமலோ செயல்படும் என்றெல்லாம் எதிர்பார்ப்பது வீண்.

நீதித்துறையை உள்ளிருந்து ஆட்டங்காணச் செய்வோர் யார்? சொல்லுங்கள். இப்புற்று நோயையினைத் தீர்ப்பதற்கு நீதித்துறை என்ன செய்கிறது. அவமதிப்பு வழக்குகளுக்கு அப்பால், நீதியை நிலைநாட்டுவதற்கு வேறு உருப்படியான திட்டம் எதுவும் நீதித்துறையிடம் இல்லையா? ஹவாலா ஊழலில், யூனியன் கார்பைடு வழக்கில், என்ரான் நிறுவன அக்கிரமத்தில் கையைச் சுட்டுக் கொண்டு இன்று கையாலாகத் தன்மையைப் பற்றிக் கவலைப்படாத நீதித்துறை ராய் மீது பாய்ந்து குதறுவதற்கு எப்படி முடிகிறது?

ராய் இந்திய அரசியலில் விழுந்துவிட்ட பெரும் களங்கங்ளைச் சுட்டிக் காட்டுகிறார். அரசையும் அதன் திட்டங்களையும் சாடுவோர் மீது நீதித்துறை தனது அவமதிப்பு ஆயுதத்தைப் பயன்படுத்துவதை எடுத்துரைக்கின்றார். தனிப்பட்ட நீதிபதிகளை அவர் விமர்சிக்கவில்லை. வளர்சியின் மாயைகளை எள்ளி நகையாடுகிறார். இதுதான் ஆள்வோர் கண்களை உறுத்துகிறது. அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை இந்த அடிப்படைகளிலிருந்துதான் எனினும், தேசத்தின் சட்டத்தை மதிக்கும் குடிமகனாகத் தீர்ப்பினை ஏற்றார்.

**தமிழில் அருள்திரு சுதாகர். நன்றி : இந்து**



படிப்பகம்

www.padippakam.com

# இன்றைய அமெரிக்கா - ஒரு தமிழனின் பார்வையில்

*-செ.நாரயணசாமி*

அமெரிக்கா பூவுலக சுவர்க்கம் என்று போற்றப்படுவது ஏதோ குருட்டுத்தனமான வாய்ப்பாக நிகழ்ந்தது அன்று. கடலோடும் பாரம்பரியம் பெற்ற அய்ரோப்பியர்கள், மேலான வாழ்வை நாடி, நிலங்களை கவரும் பழக்கத்தில், கொலம்பசு கண்டுபிடித்த, வானத்தின் புது எல்லைகளைத் தேடி மிகச் சிரமப்பட்டு அமெரிக்காவின் கிழக்குக் கரைகளில் இறங்கிக் குடியமரத் தொடங்கி படிப்படியாக மேற்கு திசைநோக்கிக் கடுமையான காடுகள், மலைகள், விலங்குகள், குளிர் வெப்பம், புயல்கள், வெள்ளங்களில் அல்லலுற்று, தளராத உறுதியுடன் எதிர்கொண்டு போராடி வென்று கட்டுப்படுத்தி, தங்களை நிலைப்படுத்திக் கொண்டு, எதிர் நீச்சலிட்டுத் தொடர்ந்து முன்னேறி காடு திருத்திக் கழனி பெருக்கி, பொருட்களை விளைவித்து, வாரிபெருக்கி வளப்படுத்தி, தொழில்களைத் தொடங்கி, விரைவாக முன்சென்று 3500 கல்கள் **(Miles)** வரை மேற்கே பரவித் தங்கள் நிலையைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் (மத்திய ஆசியாவிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு தெற்கே வந்து, ஏற்கனவே பண்பட்டுச் செழித்திருந்த சிந்து கங்கைச் சமவெளிகளில் குடிபுகுந்து ஆதிக்கம் பெற்ற ஆரியர்களின் அனுபவத்திலிருந்து) முற்றிலும் வேறுபட்ட சூழலை எதிர் நின்று போராடி வென்றவர்கள். இந்தப் போராட்டங்கள் தங்கள் புதிய வரலாற்றில் விரிவாக, ஆழமாகப் பதிக்கப்பெற்று, கதைகள், பாடல்கள், நாடகங்கள், திரைப்படங்கள் வாயிலாகப் போற்றி சந்ததியினருக்கு ஊட்டி வளர்த்து வருவதால் அவர்களிடையே போராட்ட மனப்பான்மையும், உழைப்பின் பெருமையும் குருதியில் கலந்து ஓடுகின்றன. உலகில் மற்ற எல்லோரையும் விட நாங்கள் வலிமையானவர்கள், திறமையானவர்கள், சிறந்தவர்கள்; எப்பாடு பட்டேனும், எவ்வழியிலேனும் எங்கள் முதன்மை நிலையைக் காத்துக் கொள்வோம் என்ற உறுதியே அமெரிக்க அரசியல், படை ஆதிக்க, முதலாளித்துவக் கோட்பாடுகளுக்கு அடிப்படை. நாம் வாய்மையே வெல்லும் என்பதை உதட்டளவில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வலிமையே வெல்லும் என்பதைச் செயலில் காட்டுகின்றனர். கடவுள் என்பது இயற்கை ஆற்றலின் உருவகம் என்று கொண்டால் அது உழைப்பால் உயரும் அமெரிக்கர்களுடன் இணைந்து செயல்படுகிறது. **'God Bless America'** என்பது அவர்கள் அடிக்கடி சொல்லும் தாரக மந்திரம். அவர்களின் வளர்ச்சி குபேரனும் வானிலிருந்து குடிபெயர்ந்து அங்கு புகச் செய்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இதனை வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. முதல், இரண்டாவது உலகப்போர்களில், அடிபட்ட செருமனி, சப்பான், ஃபிரான்சு, இத்தாலி, உருசியா நாடுகள் தொழில் வளர்ச்சியைச் சீரமைத்துத் தொழில் நுட்பத்திலும், வணிகத்திலும் வேகமாக முன்னேறியதைக் கண்ட அமெரிக்கா அறிவியல் வல்லுனர்களைப் பல நாடுகளிலிருந்தும் வரவழைத்து அடிப்டை ஆய்வுகளை விரித்து உறுதி செய்து மற்ற நாடுகளுக்கு ஈடாக, மேலாக, வளர்ச்சி வேகத்தை முன்னேற்றி நிலைநிறுத்தி முன் செல்கிறது. 1955ல் உருசியா முதன்முதலாக இசுபுட்னிக் செயற்கைக் கோளை வானில் செலுத்தி முன்நிலை எய்தியதைக் கண்ட அமெரிக்கர் தங்கள் குடியரசுத் தலைவர் கென்னடி குறித்த கெடுவிற்கு முன்னதாகவே செயற்கைக் கோள் மூலம் நிலவில் கால்பதித்த மனிதர்கள் என்ற பெருமையைப் பெற்றனர். சிதைந்துவிட்ட உருசியக் கூட்டமைப்பைப் போல் அல்லாது, தங்கள் முதல் நிலைக்கு, இத்துறையில் தொடர்ந்து முன்னேறுவதற்குத் தேவையான கல்வி, அறிவியல், தொழில் கட்டமைப்புகளுக்கான பெரிய செலவினங்களைப் பொருளாதார வலிமை பெற்ற அவர்களால் மட்டுமே சமாளிக்க முடிகிறது. இயந்திரங்கள், ஊர்திகள், மின்னியல் துறைப் பொருட்கள் உற்பத்தியில் சப்பான், அய்ரோப்பிய நாடுகளை அனுமதித்து, அவர்களுடைய வணிகப் போட்டிக்கு இடமளித்து தங்கள் உற்பத்தி, வணிகத் திறன்களை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

கணினியியல், தகவல் தொடர்புச் சாதனங்களில் மைக்ரோ சாஃப்டு, ஐ.பி.எம்., ஏ.டி.அன்.டி., இன்டெல்., ஃகெவெலிட் - காம்பேக போன்ற நிறுவனங்கள் மகத்தான சாதனைகள் செய்துள்ளன. உலகப் புகழ் பெற்ற எம்.ஐ.டி., ஃகார்வர்டு, இசுடான்ஃபோர்டு, பெர்க்ளி, கார்னிகி-மெலான் முதலான பல்கலைக் கழகங்களும் வெசுடிங்ஃகவுசு, ஃபோர்டு, இராக்பெல்லர், நா.சா. போன்ற நிறுவனங்களும் அடிப்படை ஆய்வுகளிலும், தொழில் நுட்ப கட்டமைப்பிலும் பெரிதும் உதவுகின்றன. தகவல் தொடர்புத் துறையில் வியப்பூட்டும் பல சாதனைகள் நிகழ்ந்துள்ளன. உலகில் எங்கிருந்தாலும் கணினிகளின் மூலம் தொடர்பு கொண்டு நேருக்கு நேர் பார்த்து பேசிக்கொள்ளலாம். அண்மையில் 24 செயற்கைக் கோள்களை இணைத்து உலகளாவிய முறையில் ஒருவர் / ஒரு பொருள் எங்கு நிலைபெற்றுள்ளது / நகர்ந்து கொண்டுள்ளது என்பதைத் துல்லியமாக, ஒரு மீட்டருக்குள்ளான இடைவெளியில், படுபாகை, நெடுபாகை, உயரம் / ஆழம் இவற்றை மின் அலைகள் தானே கணக்கிட்டுத் தெரிவிக்கும் சாதனம் (Global Positioning System) செயல்படத் தொடங்கியுள்ளது. இவற்றை ஊர்திகள், கணினிகள், நடமாடும் தொலைபேசிகள், கடிகாரங்களில் (ஏன் மனித உடம்பில் கூட) இணைத்து விட்டால் எதுவும்


படிப்பகம்

www.padippakam.com

/ யாரும் / எங்கும் / எப்பொழுதும் தொலைந்து போக முடியாது. இந்தச் சாதனம் சென்ற ஆண்டு அமெரிக்காவில் 53 இலக்கம் எண்ணிக்கை (விலை மதிப்பு 42 கோடி டாலர்) விற்றுள்ளது.

வெள்ளையர்களுக்கு அடுத்த படியாக, அடிமைகளாகவும், கூலித் தொழிலாளர்களாகவும் ஆப்பிரிக்காவிலிருந்து குடிபெயர்த்திக் கொண்டுவரப்பட்டவர்கள் கருப்பு இனத்தவர். இவர்கள் பற்பல இன்னல்கள், இழிவுகளுக்கு உட்பட்டு, ஆற்றொணாத் துயரில் பல காலம் அல்லல் பட்டு, தொடர்ந்து போராடிப் போராடி தங்கள் உரிமைகளைச் சிறிது சிறிதாக நிலை நாட்டிக் கொண்டு வருகிறார்கள். கல்வி, உடலுழைப்பு, தொழில் நுட்பம், ஆட்சி, அரசியல் துறைகளில் தாங்கள் மற்று எவர்க்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மெய்ப்பித்துள்ளனர். தங்கள் எண்ணிக்கையினாலும் ஒற்றுமையான செயல்பாட்டினாலும், அரசியலில் செல்வாக்கும் பெற்றுள்ளனர். காலின் பவல், கொண்டலிசா ரைசு போன்றவர்கள் கூட்டாச்சியிலும் அமைச்சர் பொறுப்புக்கள் வகிக்கின்றனர். இசை, நடிப்பு, விளையாட்டுத் துறைகளில் முன்னணியிலுள்ளனர். வெள்ளையர்களை விடச் சிறப்பாகவும், தெளிவாகவும் ஆங்கிலம் பேசுகின்றனர். சட்டப்படி போராடிப் பெற்ற சம வாய்ப்புக்கள் மெல்ல மெல்லக் கைகூடி வந்தாலும் வரலாற்றுப் பின்னணியால், பொருளாதாரத்தில் மெலிந்தும், சமுதாய ஏற்பில் தாழ்ந்தும் உள்ளனர். ஏழ்மை நிலை, குறைந்த வருமானம், பொருளாதார - சமுதாய ஏற்ற தாழ்வுகளால் போதிய வாய்ப்புக் கிட்டாமை இவற்றால் ஆப்பிரிக்க அமெரிக்கர் வாழ்க்கை நிலையில தேவையான பெரிய மாற்றங்கள் இன்னும் நிகழவில்லை.

இவர்களுக்கு அடுத்த படியாக உள்ளவர்கள் மெக்சிகோ, நடு - தென் அமெரிக்க நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து அமெரிக்காவின் தெற்கு, மேற்கு பகுதிகளுக்கு வரும் 'லேடினோ' எனப்படும் இசுபானியர்கள். பெரும்பாலும் ஏழைகள், போதிய கல்வி அறிவோ, ஆங்கில மொழிப் பயிற்சியோ அற்றவர்கள்; பலவழிகளில் எல்லைகளைக் கடந்து புகுபவர்கள். இவர்களின் உழைப்பு அமெரிக்காவில் மிகவும் தேவைப்படுகிறது ; ஆனால் அவர்களுக்கு குடியுரிமை வழங்குவதை வெள்ளை அமெரிக்கர்கள் விரும்பவதில்லை. நீதித்துறை, உச்ச நீதிமன்றம் முதற்கொண்டு, பிற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கிறது. நாட்டுப் புறத்தில் பண்ணைகளிலும, காடுகளிலும், வெளிப்புறத்தில் எடுபிடி வேலைகளிலும் வாழ்க்கையைத் தொடங்கி, சிறுகச் சிறுக நகர்ப்புறங்களில் துப்புரவு, பராமரிப்பு, சேவைப் பணிகளிலும், உணவகங்களிலும், சிறு தொழில்களிலும் ஈடுபட்டு அல்லலுற்று பல ஆண்டுகள் (15-20) கழித்துத் தங்கள் உரிமை / குடியுரிமை பெற்றபின் தான் மெய்யான வாழ்க்கை


படிப்பகம்

www.padippakam.com

முறைக்கு நகர்கின்றனர். ஆப்பிரிக்க அமெரிக்கர், இசுபானிய அமெரிக்கர்களைப் பொருத்தவரை வெள்ளை அமெரிக்காவின் மனித உரிமை, மக்களாட்சி முழக்கங்கள் இன்றும் பேச்சளவிலான முகத் திரைகளே.

அடுத்த வகையினர் ஆசிய அமெரிக்கர்கள்.இவர்களில் முதன்மையாவர் சீனர்கள். இருப்புப்பாதைகள், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்காக 150 ஆண்டுகளுக்கு முன் பெருமளவில் வந்தவர்கள், தங்கள் கடும் உழைப்பால் தக்கவைத்துக் கொண்டு முன்னேறித் தற்போது வெள்ளை அமெரிக்கருக்குச் சமமாக பாரம்பரிய உணவகங்கள், வாணிபம், தொழில்கள், வங்கிகள், கல்வி, உயர் தொழில்நுட்பத் துறைகளில் ஈடுபட்டு பொருளாதாரத்திரும் சிறந்துள்ளனர். இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் (ஆப்பிரிக்க அய்ரோப்பா வாழ் இந்தியர்கள் உட்பட) இருவகையினர். 160-70 களுக்கு முன் குடியேறியவர்கள் பெரும்பாலும் வாணிபம், வேலை வாய்ப்புக்களால் ஈர்க்கப்பட்டவர்கள். இரண்டாவது வகை, பொறியில், தொழில்நுட்ப, மருத்துவ மேற்படிப்பிற்காக வந்து இங்குள்ள வாய்புக்கள், வாழ்க்கை மேம்பட்டு முறைகளால் கவரப்பட்டு, பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், தொழிற்சாலைப் பொறியாளர்கள், மருத்துவர்களாகவும் பணிகளில் அமர்ந்து தங்கி விட்டவர்கள். 1980 தொடங்கி அமெரிக்காவின் மின்னியல், கணினித் துறைகளில் மிகப்பெரிதான, வேகமான வளர்ச்சி (boom) காரணமாக இங்கு கல்விக்காக வரும் இந்தியர்களின் தொகை வெகுவாக கூடியதுடன், தேவை கருதி அமெரிக்கப் பல்கலைகழகங்களும் தொழில் நிறுவனங்களும், இந்திய உயர்நிலைப் பல்கலைக் கழகங்களில் (IITs&IIMs) கற்றுத் தேரியவர்களையும், சிறந்த தொழில் துறைகளில் அனுபவப் பட்டவர்களையும் கண்டறிந்து வரவேற்றது. தற்போது இங்குள்ள இந்தியர்களின் தொகை, இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் உட்பட 10 இலக்கத்தை எட்டுகிறது. இவர்கள் கல்வி, அறிவாற்றலில் சிறந்து விளங்குவதால் வெள்ளை அமெரிக்கருக்குச் சற்றுக்கூடக் குறையாமல் தொழில்நுட்பத் துறைகளில் மன உழைப்பில், திறமையில் மேலோங்கி, வாழ்க்கைத் தரத்திலும், பொருளாதார நிலையிலும், சமநிலை வெள்ளை அமெரிக்கருக்கும் உயர்ந்து உள்ளனர். இவர்களில் சிலர் தாமாகத் தொழில்களைத் தொடங்கி வெற்றி பெற்றுள்ளனர். எனினும் சீனர்களைப் போன்ற துணிவுடன் அவற்றை விரிவடையச் செய்யவில்லை. வேலை ஊதியம் பெறுவதிலேயே பெரும்பாலார் மனநிறைவு பெறுகின்றனர். இந்தியாவா, அமெரிக்காவா என்ற இரட்டை மனப்பான்மையும் ஒரு காரணம்.

-தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

## கவிஞர் தேவமகள்- விருது வழங்கும் விழா

கவிஞர் நித்திலன் ஐந்தாண்டுகளுக்குமுன் காலமான தன் துணைவியார் கவிஞர் 'தேவமகள்' நினைவாக ஒவ்வொரு ஆண்டும் தமிழின் சிறந்த கவிஞர்களை பரிசளித்தும், பாராட்டியும் வருகிறார். இந்த ஆண்டு மார்ச் 29 அன்று நம் மரியாதைக்குரிய திருமதி வசந்திதேவி அவர்களின் தலைமையில் பெண் கவிஞர்கள் அறுவருக்குப் பரிசும் பாராட்டும் வழங்கும் விழா நடைபெற்றது. கவிஞர்கள் கிருஷாங்கினி, ஆனந்தி ஆகிய இருவரும் ரூபாய் ஐயாயிரமும், இளங்கவிஞர்கள் பிருந்தா, சல்மா, தேன்மொழி ஆகியவர்கள் ஒவ்வொருவரும் ரூபாய் இரண்டாயிரமும் பரிசு பெற்றனர். பரிசு பெற்றவர்கள் நம் பாராட்டுக்குரியவர்கள். விழாவின் போது முனைவர் ஹரி விஜயலட்சுமி அவர்களும், நானும் கட்டுரை தந்தோம். ஹரி விஜயலட்சுமி அவர்களின் கட்டுரை இங்கு தரப்படுகிறது.

## உடைபடும் மௌனங்கள்

**-முனைவர் ஹரி விஜயலட்சுமி**

கவிஞர் தேவமகள் விருதுகளால் சிறப்பிக்கப் பெறுகின்ற பெண் கவிஞர்கள் அறுவரும் தத்தம் கவிச்சிறகை விரித்துப் பறக்க முயன்ற அனுபவங்களோடு உடன் பயணம் செய்தது ஒரு சுவையான அனுபவம்.

இந்த ஆறு தொகுதிகளும் பெண்களில் உணர்வுகளைப் பெண்கள் பதிவு செய்த ஆவணங்கள் அழகியல் தொடங்கி வாழ்க்கையின் பல்வேறு முரண்பாடுகள் வரையிலான பல செய்திகள் இக்கவிதைகளின் கருத்து மையங்கள். வாழ்க்கையே முரண்பாடுகளாலானதுதான். பெண்ணின் வாழ்க்கை அவள் பெண் என்பதாலேயே அதிகப்படியான முரண்பாடுகளைக் கொண்டதாக இருக்கிறது. பெருவாரியான பெண்கள் சூழ்நிலைக் கைதிகள். தம் சுயத்தை இழந்து வாழ்பவர்கள். அதனாலேயே சுயத்தை தேடுபவர்களும் கூட.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் தொலைந்து போன தம் அடையாளங்களைப் பெண்படைப்பாளர்கள் தேடுகிறார்கள். 1975 - 85 காலகட்டங்களில் திருமணம் ஆவது பற்றிய பிரச்சனைகள், வரதட்சனைகள் பற்றிக் கவிதைகள் நிறைய எழுதப்பட்டன. பெண்ணுக்கான பிரச்சனைகள் திருமணத்திற்குப் பிறகு புதிய வடிவங்களில் எழுகின்ற நிஜங்களை இன்றைய பெண்கவிஞர்கள பதிவு செய்கிறார்கள். மறைக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட, மதிப்பிழக்குமாறு செய்யப்பட்ட பெண்கள் சார்ந்த செய்திகள் இன்று கவிதைத் பொருளாகி வருகின்றன.

குடும்பம், மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, கணவன் - மனைவி உறவு முதலாய பல விஷயங்கள் பெண்ணுடைய கோணத்திலிருந்து பார்க்கப்படுகின்றன. பெண் தனக்குத் தானே விதித்துக் கொண்ட கலாச்சாரத் தணிக்கையைச் சற்றே தளர்த்தத் தொடங்கிவிட்டாள். மரபுகள் கலாச்சாரக் காவலர்களாக (Cultural Policemen) நின்று கண்காணித்த பிடியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளும் புறமுமான பெண்ணனுபவங்களை இன்றைய கவிஞர்கள்



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியங்களாக்க முற்பட்டுள்ளனர். தலைமுறையாகப் பல தளங்களில் நடந்து வந்த நிழல் யுத்தம் இப்போது வெளிச்சத்திற்கு வருகிறது.

ஆனந்தியின் "தானயக் கழிந்தது பொழுது" என்ற கவிதைத் தொகுதி, "கவிதை எழுதினீர்களா? உம்! எழுதினேன் உன்பெயரை", என்று இயல்பானதொரு காதல் கவிதையாகத்தான் தொடங்குகிறது. பெண்மனது காதலில் குதூகலிக்கின்ற மனது மட்டுமன்று "மனமே! என்னியதைச் சொல்லிவிடு. நான் எப்படி என நீ தீர்மானிக்காதே . . . வந்து விடு என நீ பணிக்க வருவேன் என நினைக்காதே" என்ற வரிகளில் தன் சுயத்தைப் பேணும் வேகம் தெரிகிறது. ஆண் - பெண் உறவின் நளினமான உணர்வுகள் பற்றிப் பல கவிதைகளில் ஆனந்தி அழகிய சித்தரிப்புக்களைத் தருகிறார். ஆனால் இவையெல்லாம் மையங்கொள்கிற இடம்' காயங்கள்தானே கவிதைகள் தந்து கொண்டிருக்கின்றன' என்பதாக முடிகிறது.

க்ருஷாங்கினியின் "கானல் சதுரம்" பெண்ணுலகு பற்றிய அவருடைய பார்வைகளை மிக நுணுக்கமான படிமங்களைச் சித்தரிக்கின்றது. "எங்கு தொலைத்தேன் என்னை? என்பதுதான் பெண்கள் பலரின மனத்தை அரிக்கும் வினா. பெண்களை நுகர்பொருளாகப் பார்க்கும் சமூகத்தின் மீது கவிஞருக்கு எழுகின்ற தார்மீகக் கோபம் கவிதையாய் வெடிக்கின்றது. "3, 5, 7, 10, 20, 60 அனைத்தும் ஒன்றே.. குத்தி கிழிபட்டு . . . எங்கிருந்து பரப்ப அன்பு? காகிதத்தில் பரவும் நெளிகளிலா? . . ." என்ற தாக்குதலில், 'காகிதத்தில் எழுத்துக்கள்' என்ற அங்கீகாரத்தைக் கூட மறுக்கும் சினத்தின் ஜ்வலிப்பு நெஞ்சை சுடுகிறது. பேச்சிலும் எழுத்திலும் மட்டும் பெண்ணினத்தை வாழவைக்க முடியாதென்பதை அவருடைய 'கதவு' கவிதையும் மிக மிகப் பூடகமாக உணர்த்துகிறது. "அறைக்குக் கதவு வேண்டும். . . அடைத்தலும் திறத்தலும் உத்தரவு அவசியமற்ற கதவின் வேலையானது. .. " என்று ஒர படிமத்தில் பெண்மீது நடத்தப்படும் உடல் தியான பலாத்காரத்தை வாசகன் உள்ளத்தில் ஊசியாய் இறக்குகிறார். "பெண்ணுக்கான இடம் ஒரு சதுரம் தான். இந்த எல்லை கடந்து சாதிக்க முயன்றால் சதுரத்திற்குள் பள்ளங்கள் விழும் ; பள்ளத்தில் அவள் விழ நேரிடலாம். பார்வையாளர்களாகப் பாராட்டிக் கலைவோருக்கு இது புலப்படாது' என்று கவிதை பாடும் போது பெண்ணினத்தின் சாதனைகளுக்குப் பின்னுள்ள வேதனை வரலாற்றை ஒரு 'சதுரத்திற்குள்' அடக்கி விடுகிறார்.

ஆனும் பெண்ணுமான வாழ்க்கையும் தான் எப்படி அமைந்திருக்கிறது? "இணையாத இரு குரல்கள் / பல்லாண்டாய் ஒரறையில / எதிர் எதிராய் ..." இதுதான் பல பெண்களுடைய வாழ்க்கைநிலை. க்ருஷாங்கினி மூடியிருந்த திரைகளை விலக்கி, நடைமுறை வாழ்க்கையின் அவலங்களை பெருவாரியான பெண்களின் முகமூடி வாழ்க்கையை அம்பலப்படுத்துகிறார். 'நிஜத்தை எதிர்கொள்' என்பதுதான் இக்கவிதைகளின் நோக்கம்.

வெண்ணிலா "நீரில் அலையும் முகத்தைப்" பார்க்கிறார். வாழ்க்கை ரசனை நிறைந்தாகத்தான் இருக்கிறதென்பதைப்



படிப்பகம்

www.padippakam.com

பல கவிதைகளில் வடிக்கிறார். ஆனால் இந்த மகிழ்ச்சி, 'திருத்தப்படாத வாலுடன் அலையும் கிளியைப் போலத்தான்' என்பதையும் உணர்ந்திருக்கிறார். பெண்கள் தங்களை எழுத்திலும் மேடையிலும் வெளிப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் எல்லாமே ஒரு எல்லைக் கோட்டுக்குள் நின்றுதான்.

"தவித்துப் போகிறேன் / தாமதமாகும் வினாடிகள் / வண்ணமிழந்து போகின்றன. . . . சனியன் - இந்தப் பேச்சையும் விட்டுத் தொலையவில்லை . . . தொலைக்க வேண்டியது 'பெண்' என்ற அடையாளத்தை. ." என்று வெண்ணிலா எழுதுவது க்ருஷாங்கினி குறிப்பிடும் சதுர எல்லைகள் பற்றியதுதான். பெண் என்ற அடையாளத்தை எப்படியெல்லாம் தொலைக்கலாம்? 'கொடி' போன்ற சங்கிலியும் கைக்கு மோதிரமான சடங்குகளை மறுக்கலாம். . சடங்குகளைப் பிடித்துக் கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது என்று ஆயாசப்படுகிறார். மணமான பிறகுதான் சுதந்திரம் பறிபோகிறது என்பது இவருடைய வாதம். இதை வெளிப்படக்கூறுவதற்கு இவ்வளவு நாள் காத்திருக்க வேண்டி வந்தது ! பெண்ணுக்குரிய உடல் தியான அவஸ்தைகளை புரிய வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்கிறார். தாயுமானவனாக - 'குழந்தைத்துவம் இருக்கும் பெண்களைச் சுமக்கு எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை?' என்ற வினாவை வீசுகிறார். அலுவலகத்தில் வாசனைகளுக்கும் நடுவே தன்னை மறைத்துக் கொள்ள முயற்சித்தும் 'தாயின் வாசம் சொட்டுச் சொட்டாக கோப்புகளில் இறங்குகிற அவஸ்தையும் இவருடைய எழுதுகோல் விட்டுவைக்கவில்லை. குழந்தை 'பசியைத் தின்று' அலற, அலுவலகத்தில் 'தாயின் தவிப்பு !' பெண்களே பெண்களுக்கு எதிரி என்று தொடர் பரவலாக அறியப்பட்ட தொடர்தான். வெண்ணிலாவின் நறுக்குத் தெறித்தாற் போன்ற கவிதை இக்கருத்தை வெளிப்படுத்தும் விதம் எளிமையானது. பொருள் நிறைந்தது. "காக்கைகளுக்கு தெரியாது எருதின் வலி ! சரிதான் எருதுகளுக்காவது தெரியுமா? ஆம். பெண்கள் தொழுவத்திலோ, நுகத்தடியிலோ பூட்டப்பட்ட எருதுகளாய், சக எருதுகளின் வலி உணர்வார்களா? குழந்தைப் பேறு சுகம்தான். எப்போதும் சுகம்தானா? இல்லை.. சுமையும் கூடத்தான் என்று இரண்டு பார்வைகளையும் கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

**தேன்மொழியின் "இசையில்லாத இலையில்லை"** அழகியல் பதிவுகள் நிரம்பிய கவிதைத் தொகுப்பு. கிராமிய வாழ்க்கைச் சூழலும், கொஞ்சமேனும் ரசனை நிறைந்த மனமும் கொண்ட வாசகன் தன் கடந்த காலத்தை இந்தக் கவிதைகளில் தரிசிக்காமல் இருக்க முடியாது. அம்மி கொத்தும் கிழவியும், ஊத்துத்தண்ணீர் சுமக்கும் அனுபவமும், தகரப் பெட்டிக்குள் தம் பொக்கிஷங்களைப் பேணிய நினைவுகளும் இன்னும் பிற எத்தனையோ இனிய அனுபவங்களும் கிராம வாழ்க்கையின் அழகிய அடையாளங்கள். வகுப்பறைப் பாடத்தை விட வாழ்க்கைப் பாடமே வலுவான பதிவுகளை ஏற்படுத்தும் என்பதை யார்தான் மறுக்க முடியும்? விடுமுறையில் விளைந்த காயெல்லாம் கூறுகட்டி விற்கையில் கணக்குப் பாடம் நன்றாக கற்பித்ததும் அந்தத் தோட்டம்தான்' என்று இயற்கையோடு இணைந்து கற்கும் பாடங்களின் மேன்மையைப் பறை சாற்றுகிறார் தேன்மொழி.


படிப்பகம்

www.padippakam.com

கவிஞர் பிருந்தா "மழையைப் பற்றிய பகிர்தல்" கள் மழையின் குளுமையை வாசகரோடு பகிர்ந்து கொள்கிறார். அவரே குறிப்பிடுவது போல அவருடைய கவிதைகள் 'அக்கா படிப்பது போல், அம்மா சமைப்பது போல்' இயல்பாக எழுந்தவையாக இருக்கின்றன. மழை பற்றியும் குடை பற்றியும் குளிரக் குளிரக் கவிதை புனைகிறார். பிருந்தாவின் இயற்கை ரசனை வெளிப்டும் முறையில் ஒரு புதுமை தெரிகிறது. "இலக்கியம் பற்றியும் பெண்ணியம் குறித்தும் உரத்துச் சிந்தித்த உன் பேச்சு ரசிக்கவில்லை; அதைவிட இலைகள் அசைவது மிகவும் பிடித்திருக்கிறது". என்று எழுதும் போது வாழ்க்கையை இயற்கையோடு இணைந்து அனுபவித்தலை முதன்மைப் படுத்துகின்ற போக்கு புரிகிறது. மழை ரசிகர்களுக்கு இத்தொகுப்பு மற்றுமொரு 'மழைக்கவிதை' மழை. மழையின் குளிருக்கு நடுவே வாழ்வின் வெம்மையும் தலை தூக்குகிறது. " என்ன செய்யட்டும் / நான் ஒவ்வொரு முறை பறக்க யதத்னிக்கும் போதும் / கீழிழுத்துப் போகின்றன கால்கள் "புவி விதிப்படி ..." சிறகுகளோடு நடப்பது சுகமாகத்தான் இருக்கிறது / பறப்பதான பாசாங்கில் . . என்ற வாழ்க்கை வரையறை புலப்படுகிறது. 'பெண்ணே ! உன் சிறகுகள் பறக்க அல்ல . . ' என்பதில் இருக்கின்ற சமூக வஞ்சகம் அழுத்தமானது.

சல்மாவின் "ஒரு மாலையும் இன்னொரு மாலையும்" தொகுப்பு அனுபவங்களின் முதிர்ச்சியில் விளைந்த தத்துவப் பார்வைகளால் நிரம்பிக் கிடக்கிறது. உறவுகளின் மத்தியில்தான் வாழ்க்கை. உறவுகளின் முரண்பாடுகளாலேயே தனிமைப் பட்டும் போகின்ற வெறுமையை இவருடைய கவிதைகள் சித்தரிக்கின்றன. தனக்கு நேர்ந்த எதையும் அறியாதவனான வாழ்க்கைத் துணையுடனான இறுக்கம் மிக்க வாழ்க்கையின் உச்சபட்ச முரண்பாட்டை இரக்கமற்ற சொற்களில் வடிக்கிறது இவருடைய பேனா. 'யாரோ ஒருவர் கொலையாளியாகும் சாத்தியத்துடன் ஒன்றாக உறங்குகிறோம் ! இந்த வெளிப்பாட்டில் அர்த்தம் இருக்கிறது; ஆனால் அடிப்படையில் இருக்கும் கசப்பு மறுக்க முடியாதது. இல்லறத்தில் ஒரு பெண்ணுக்கு இத்தகைய கசப்புணர்வு மிகுவதற்கான காரணத்தையும் பல கவிதைகள் வெளிப்படையாக பேசுகின்றன.

'இந்த உன் வீடு' என்ற கவிதைத் தலைப்பே மனமுரணை உணர்த்திவிடுகிறது. இப்சன் 'பொம்மை வீடு' என்ற நாடகத்தில் குறிப்பிட்டதும் இதைத்தான். வீடு நம் வீடாக இல்லை என்ற ஏக்கக் குரல் 'உன் காதில் விழாமலிருக்க என்னுடையது குரலல்ல; கேவல் !. . ' என்று சல்மா முடிக்கும் போது பெண்ணித்தின் ஏக்கங்கள் ஒட்டு மொத்தமாக வெளிப்படுகின்றன. தாய்மை பெண்ணுக்குச் சில புற அடையாளங்களை விட்டுச் செல்கிறது என்பதாலேயே ஏற்படும் சில மன முரண்களையும் 'ஆடவனே, உன்னிடம் தடயங்களில்லை என்பதால் நீ பெருமை கொள்ளலாம் . .' ஆனால் நியாமில்லையே என்ற வினாவையும் வீசுகிறார்.

பரிசு பெற்ற கவிஞர்கள் தம் கவிதைகளில் முன் வைத்துள்ள கருத்துக்களும், எழுப்பியுள்ள வினாக்களும் இதுவரை கேட்கப்படாத மௌன வினாக்கள். பெண்களின் நிலைப்பாடு பற்றிய முரண்பாடுகளை வெளிப்படுத்துவதும் ஒரு முயற்சிதான். பெண்ணின் படைப்பு மொழி தனது எல்லைகளை விரிவாக்கிக் கொண்டு வருகிறது. 'கானல் சதுரத்தை' விட்டு வெளிவந்து கவிச்சிறகுகளுடனும் கவித்தூவிகளுடனும் பறக்க முயற்சிப்பதே ஒரு நல்ல அடையாளம்தான்.


படிப்பகம்

www.padippakam.com

தமிழில் நவீன கவிதை

# "பிரேதா பிரேதனின் இருபது கவிதைகளும் இரண்டாயிரம் ஆண்டுகளும்"

*அறிமுகம் : பாலை நிலவன்*

சமகாலத்தில் தொகுப்புகளின் வருகையும் அதிகரித்து விட்டன. இது ஒரு விதத்தில் ஆசுவாசமளிப்பதாக கொண்டாலும் பல கவிஞர்களின் கவிதைகள் மத்திய தர வர்கத்து வேடிக்கை விளையாட்டுக்களாய் காணக்கிடைக்கின்றன. ஒரு பக்கம் நவீன கவிஞனின் விளையாட்டுக்களாய் காணக்கிடைக்கின்றன. ஒரு பக்கம் நவீன கவிஞன் தன்து சிதைவை தரிசிக்க கூடியவனாக இருந்து கொண்டு கவிதை தன் மீதான அதிகாரமாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனங்கொள்கிறான். இன்னுமொரு பக்கம் கவிஞன் கடவுளாவதற்கும் தயாராக இருக்கிறான். அறிவ ஜீவிகளின் விவாதங்களில் விவாதிக்கப்பட்டு வந்த கவிதை இப்போது எப்போதும் இல்லாத அளவிற்கு புனிதபட்டு வருகிறது. நவீன கவிஞன் ஒரு கவர்ச்சியை தந்தபடி இருக்கிறான். இந்தக் கவர்ச்சி ஏற்படுத்துகிற இடைவெளியில் வாசகன் கவிதையை வந்தடைவதற்கு சிரமப்பட வேண்டியிருக்கிறது. இதில் புதிய முயற்சிகள் **பிரேதபிரேதனின் புனைவு, என்.டி. ராஜ்மாரின் பேய்க் கவிதைகள் ரசூலின் மைலாஞ்சி தொகுப்பு கவிதைகள்.**

கவனிக்கும்படியான சில கவிதைகளை எழுதியவர்கள் என்ற வரிசையிலும் தொடர்ந்து எழுதி வருகிறவர்கள் என்ற வரிசையிலும் சில பெயர்கள் நினைவு கொள்ள முடிகிறது. மனுஷ்ய புத்திரன். காளிதாஸ், பூமா ஈஸ்வரமூர்த்தி, கைலாஷ் சிவன், சமயவேல், யூமா வாசுகி, சூத்திரதாரி, லக்ஷ்மி மணிவண்ணன், யவனிகா ஸ்ரீராம், எம்.எஸ்தர், அப்பாஸ், பாதசாரி, மதிவண்ணன், இனமுருகு, நிஷா, சுதேசமித்திரன், கே.ஸ்டாலின், பெருந்தேவி, கண்டராதித்தன், மகாதேவன், பா.சத்தியமோகன், சல்மா, க்ருஷாங்கினி, குட்டிரேவதி, இன்னும் பட்டியல் நீண்டு கொண்டே போகும். இதற்கு முந்தைய பட்டியலில் சேர்க்கப் படவேண்டிய பெயர்கள் தேவதேவன், பிரம்மராஜன், தேவதச்சன், யுவன், விக்ரமாதித்யன், சுகுமாரன், ராஜசுந்தரராஜன், ஆனந்த் பிரபஞ்ச விசாரம் குறைந்து கொண்டே வருவதால் இருண்மையான தட்டையான கவிதைகளும் இவர்களுக்குள்ளுமுண்டு, இசைத்தன்மைக்கு முற்றிலும் விலகி சுயதர்க்கமாகவும் மொழியின் தீவிரப் பிரக்ஞை விலகியும் ஒப்பாரிப் பாட்டாகவும் குரல் நிறைந்த ஊளையாகவும் எழுதப்படுகின்ற பல கவிதைத் தொகுப்புகளுக்கு உதாரனமாக செந்தூரம் ஜெகதீஸின் இன்னும் மிச்சமிருப்பவைச் சுட்ட முடியும். அதே தளத்தில் அங்கத தீவிரத்தோடு இயங்குகிற இன்னொரு வடிவம் ஸ்ரீபதி பத்மநாபாவின் பூஜ்யம்.



படிப்பகம்

www.padippakam.com

ரசனை சார்ந்த கவிதையில் மெய்யனுபவம் அல்லது கோட்பாடுகளை வரையறைகளை உடைத்துக் கொண்டு போகிற கவிதா அனுபவம் என்ற தளத்தில் கட்டுரை அமையவேண்டுமென்று எண்ணுகிறேன். அதே போது எல்லாவற்றினுள்ளும் மேற்சுழன்று செல்கிற சொல்லாடல்கள், தீர்மானங்களை நிறைவேற்றும்படி காத்துக் கொண்டிருப்பதால் எனது முன்மொழிதல்கள் எவ்விதமாக செல்லப் போகின்றன என்பதை நானே வேடிக்கை பார்க்கிறேன். கட்டுரையை வாசிபவனாக இருந்து கொண்டிருக்கும் போதே பார்வையாளனாகவும் இருக்கக் கூடியவனின் மன நெருக்கடியோடு நவீன தமிழ்க்கவிதையின் வாசகனாக என்னைக் கருதி கொள்கிறேன்.

சிதைவடைந்த வெளியின் அந்தர நிலையில் நவீன கவிஞன் புனைவாளனாக இருக்கிறான். எல்லோராலும் கைவிடப்பட்டவனாகவும் ஏதுமற்றவனாகவும் இருக்கிறான் கவிதைக் கணங்களில் தன்னை அவன் உணர்ந்து கொண்டிருப்பதால் இந்த சிதைவு கவிஞனொருவனின் சிதைவாக மட்டுமின்றி பிரபஞ்ச சிதைவாகவும் பிரதியெடுக்கிறான்.
"பக்கத்தில் பக்கத்தில் /இருக்கிறோம்" / சில சம்பவங்கள் / நடக்கின்றன / அப்பொழுது /ஒருவன் நம்பக்கத்தில்/இருந்தாலும் / அவன் வெகுதூரத்தில்/ இருப்பதாக உணர்கிறோம். என்று நகுலன் தனித்தவனாகிறார்.

" வாழ்க்கை சிதையேறி எரியும் / இச் சுடுகாட்டில் / விழி பிதுங்க /ஒரு பேயாய் அலைகிறேன் நான் / பிணமாவது கிட்டும் என்று வெறுமை அடிக்க நிற்கிறார் ராஜசுந்தரராஜன்.

பேராபத்துக்கள் சூழ்ந்த பிரபஞ்ச மைதானத்தில் நவீன கவிதா மொழி சிதைவடைந்த மனத்தின் மொழியாக நீள்கிறது. குழப்பமும் சந்தேகமும் முடிவின்மையும் மௌனமும், அலறலும் சுய இரக்கமும் மனத்தின் மொழியாக நவீன தமிழ்க் கவிதை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிகழ்வினூடாக அந்தப் புனைவும் காலத்தை துறந்தபடி வெளியை புறந்தள்ளிவிட்டு அந்தரக் கனவுகளின் சிருஷ்டிப்பையும் நிகழ்த்துகிறது.

## பிரேதா பிரேதனின் மொழி பற்றிய ஒரு குறிப்பு :

மொழி போதமையும் நிறைவின்மையுமாய் இருக்க, கட்டமைக்கப்பட்ட அதிகாரத்தினூடாக அதன் இருண்மை வலுப்படுகிறது. ஒருமைப்படுத்தப்பட்ட சமூக மனநிலைக்கும், தனிமனித மன எழுச்சிக்கும் நேரெதிர் முரண்கள் அதிகரிக்கும் போது நவீன கவிதாமொழி மீறுதலின் அல்லது பிறழ்வுகளின் வடிவத்தை தனதாக்கிக் கொள்கிறது. இந்த மீறுதல் அதீத புனைவாக அரூப வெளியில் பறக்கிறது. எதார்த்தத்தின் ஒழுங்கமைவை அதிகாரத்தின் குரூரங்களே கட்டமைத்திருப்பதால்



படிப்பகம்

குரூரங்களை விகாரங்களைப் புனையம் போது ஒழுங்குகள் திகைக்கிறது. ஒழுங்குகளை, பொதுமைகளை திகைக்க வைப்பது, மர்மப்படுத்துவது அரூபப் புனைவாக நிகழ்கிறது. கட்டமைக்கப்பட்டு சுழன்று திரிகிற மொழி அதன் அதிகார வடிவமான அரசு சார்ந்த தொடர்ப்புச் சாதனங்களின் வழியே சமூகத்தின் சொல்லடுக்குகளில் புனிதங்களைக் கோருகிறது. இவ்விதமான புனிதங்களின் பின்னே கொடுரமும் துரோகமும் நிறைந்து கிடக்க, கபடங்களை மறைத்துக் கொண்டிருப்பதுதான் பொது மொழியின் தந்திர மனோபாவமாகிக் கிடக்கிறது. பொதுமனம் தனது அந்தரங்களை வெளியரங்கமாக்காதபடி ஒப்பனையும் பாவனையும் கொண்டு அலைவுறுகிறது. எதையெல்லாம் பொதுமனம் ரகசியப்படுத்தகிறதோ அதை தணிக்கை செய்யும் பாவனையில் நுகர்ந்து கொண்டிருக்கிறது. சமூகத்தின் ரகசியங்களில் வழிந்து கொண்டிருக்கும் சாத்தானிய மனம் அரூபப் புனைவில் வெளியரங்கமாக மிதந்து கொண்டிருக்கிறது. எவ்விதமான தந்திரத்தோடு போதமனம் புனிதங்களை வடிவமைத்ததோ அதைவிடவும் விகாரத்தோடும் குரூரத்தோடும் வெளியைக் குற்றப்படுத்தியது. நவீன தமிழ்க்கவிதையோ கனவின் புலப்பாடுகளையும் நிர்வாணமாக்கியது.

"சூழலின் கொலை வெளியில் / மொழியின் பதுங்கு குழிக்குள் / நிகழும் பிரவேசம் செவிக்கெட்டும் திசைகளில் / துப்பாக்கிகளின் தொடரரோசையும் மீறி / தன்னுள் சுவாசம் இழைய வீறிடும் / இரத்தப் பிசுபிசுப்போடு கவிதை /" என்று பிரேதா பிரேதனின் கவிதையொன்று சூழலின் பயங்கரத்தையும் அதனூடாக நிகழும் கவிதையின் செயல்பாடு பற்றியும் எழுதிச் செல்கிறது. பயங்கரத்தினூடாக இருப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மொழி ஒரு பாதுகாப்பு வளையத்திற்குள் சுழல்கிறது. கோரங்களைனைத்தையும் மீறி சுவாசம் இழைத்து வீறிட மாமிசமும் இரத்தமும் கலந்த மனத்தின் முனகல்களாக கவிதைச் செயல்பாடு நிகழ்கிறது. முன்னர் கவிதை அதிகாரமாக இருந்தது நவீனத்தின் கவிஞன் நிராதரவின் யாசகன் அவலத்தின் நாயகன் ஒரு கனவின் சிதைவாக்கம் என்று பிரேதா பிரேதனின் பெரிய கவிதையை வாசிக்கிறேன்

நேற்றைய உனது கனவில் / கடல் உறங்கத் தொடங்கியது நெளியும் திரவ வெளி / நீர்ப்பாறையாய் இறுகிக் குளிர / உனது அணைப்பிலிருந்து நழுவி / பனிப்பரப்பில் வெறும் கால்களோடு ஓடினேன்! உனது விழிப்பில் கடலின் உறக்கம் கலைந்தது / நான் மூழ்கிவிடுவேன் என்பதின் அச்சமற்று.

இன்றைய விடியவிலில் / கடல் இளகத் தொடங்கியது / அசையும் அலையில் உனது தவிப்புகளாய் / எனது பாதச் சுவடுகள் மிதந்துலைகின்றன / விழிப்பின் கரையிலிருந்து / என்னைத் தேடி



படிப்பகம்

www.padippakam.com

உறக்கத்தின் நீராழத்துள் / நடந்து வருகிறாய் / என்னை பெயர்ச் சொல்லி விளிக்கிறாய் / உன் உதடுகளிலிருந்து சப்தம் / நீர்க் குமிழிகளாய் உன்னைச் சூழ்கின்றன / உன் தலைக்குள் நீரைக் கிழித்துச் செல்லும் / படகின் அடிப்பாகத்தில் நாம் சேர்ந்து செதுக்கிய நமக்கான காதல் வாசகங்கள் / உன்னால் மீள முடியாத காதலின் / கரையைப் பற்றிய ஞாபகங்களைச் / கிளர்த்துகின்றன.

அந்தரத்தில் தளும்பும் நீர்ப்பந்தலின் / வெளிச்சப் பூக்கள் விரிய / உப்புவாடை கமழும் சூரியத் தகிப்பில் / ஆழங்களின் பனிப்பாறைகள் விரிசலுற்று / மிதந்து கரையும் சீதளிப்பில் / உனது உடல் கொப்பளிக்கிறது. கரையும் பாறைகளின் விரிசல்களிலிருந்து / பனிச் சிற்பமென வெளிப்பட்டு அடி மண்ணில் அமிழ்ந்து படிகிறேன் / நீ பதற்றததுடன் நீந்தி என் மீதுபடர்ந்து / தொட்டு உலுக்கி எழுப்புகிறாய் / உன் கைகளிலிருந்து மெல்லக் கரைந்து திரவமாய்க் கலந்து நானே கடலாகிறேன்/

சுழலும் நீரோட்டத்தில் / மிதந்து கலையும் / இன்னும் கரையாத / எனது அங்கங்களைத் திரட்டி / உனது வலைக்குள் இட்டபடி அலைவுறும் / உன் கண்களைக் பின்னின்று / பொத்திச் சிரிக்கும் / என் வளைக்கரங்களைத் தொட்டு இழுத்து / என்னை வாரியணைக்க / உன்னை அலையொன்று மோதுகிறது எனது திரவ ரூபம்.

சற்றுத்தள்ளி அமிழ்ந்து கிடக்கும் / புராதன மரக்கலம் ஒன்றின் / சிதைவுகளுக்குள் பதுங்கி விளையாடும் / எனது கண்களை நோக்கி / உனது தாபம் விகசித்து / வலையாய் படர்ந்து விரட்ட / ரப்பைகள் துடிதுடிக்க அவை சிக்கிக் கொள்கின்றன. என்னை போதுமான அளவிற்கு / திரட்டி விட்டதின் திருப்தி / உனக்கு ஏற்பட்டது போலும் வலையை இழுத்துக் கொண்டு கரை திரும்புகிறாய் / உன்னைப் பார்க்க பாவமாய் இருக்கிறது / கடலாய் நானிருக்க / என் அங்கங்களை மட்டும் / திரட்டி என்ன செய்வாய் எனது கனவின் விடியலில் / நீ கரை திரும்பி வர / உறக்கம் கலைந்து / கடல் நோக்கி ஓடி வருகிறேன்.

ஊர்க் கூட்டம் உன்னை சுற்றி நிற்க / பெருமிதத்தோடு வலையை அவிழ்க்கிறாய் / வலையுள் உயிர்த்துடிப்போடு முழுமையாய் நான் / தீடீரென மிகப் பெரும் அலை / பொங்கி எழுந்து / வலையோடு என்னை வாரிஇழுத்து / கடல் சேர்க்க / தாவிப் பிடித்த உன் கைகளில் / வெறும் வலை மட்டுமே சிக்குகிறது / சுற்றி நின்றவர் பெரிதாய்ச் சிரிக்க / பரிதவிப்புடன் நின்ற உன்னை / அடக்க முடியாத சிரிப்போடு / நெருங்கி தலைமோதி அணைக்கிறேன் நான்.

சிநேகிதியின் கனவுள் நுழைந்த கவிதை விரிகிறது. கடலில் நிகழும் கனவு விளையாட்டில் சிநேகிதன் வெறும் கால்களோடு பனிப்பரப்பில்



படிப்பகம்

www.padippakam.com

ஓடுகிறான். கனவுக் கடலைச் சுற்றி காலம் மோதி உடைகிறது. கடலோடு காதல் புனைவாகிறது. ஆயிரக்கணக்கான காதல் கவிதைகள் ஏற்படுத்திய அந்த நேர வாசிப்பு உணர்ச்சியை மீறிச் சென்றபடியிருக்கிறது இந்தக் கவிதை. நுண் வாசிப்பில் மீண்டும் மீண்டும் வாசகனை காதலின் ஏகாந்த நாடகத்திற்கு அழைத்துச் செல்லும்படி மொழி லாகவமான சற்றே மர்மமான விளையாட்டோடு நகர்கிறது. கடல் ருசியைப் பரப்பியபடியே காதலின் தீவிர வேட்கையும் இந்தக் கவிதை எழுதிச் செல்கிறது. தொடரும் வாசிப்பில் கவிதை நமக்கானதாகிவிடும். காதலின் ருசிகரம் தேய்ந்து போனவெளியில் மீண்டுமான உணர்ச்சிகரத்தின் கனல் பொங்கும் நிமிடத்தை தந்தபடியே இருக்கும் இந்தக் கவிதை.

**கடவுளின் சிதைவாக்கம் :** என்ற பிரேதா பிரேதனின் இன்னுமொரு கவிதை பசிதாள முடியவில்லையெனில் / சிறிதும் யோசிக்காமல் / கடவுளைத் தின்றுவிடு / ரத்தவோட்டமற்று / காந்த விசை போன்ற ஒன்று / அதன் உடம்பில் சுழலுவதாலும் / இது தனதளவில் புராதனமானதாலும் / கிழடுதட்டிய கறியை / மென்று விழுங்கக் கொஞ்சம் கடினமாகத்தானிருக்கும் / இருந்தாலும் பராவாயில்லை / கைவசம் வேறு என்ன இருக்கிறது / கடவுளுக்கு இரத்தமில்லை என்பதை நீ நம்ப மறுக்கிறாய் / ரத்தத்தை நீ ரத்தமாக ஏற்காமல் / தாய்மை கருணை தியாகம் புரட்சி / என்பதன் குறியீடுகளாக்கிப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட ஊனம் இது / நான் பொய் சொல்லவில்லை / ஏற்கனவே போதுமான அளவிற்கு / தின்றுவிட்டுத்தான் சொல்கிறேன்/

மேலும் ஒரு செய்தி / எதற்கென்றே காரணம் தெரியாமல் / சிலசமயம் விரைத்தும் / பொதுவாகத் துவண்டும் / தொங்கிக் கொண்டிருக்கும் / கடவுளின் பாதுகாப்பை மட்டும்/ தின்னாமல் விட்டுவிடு / அதிலிருந்தே இளைத்து மீண்டும் / இழந்த உறுப்புகள் தோன்றி / முழுமையடையும் சாத்தியத்தை / விளைவிக்கும் சக்தி அதற்குண்டு /

நீ ஏற்க வில்லையென்றாலும் / இதையும் மறைக்காமலுனக்குச் / சொல்லிவிடுகிறேன் கடவுளின் பாலுறுப்பை / மிருதுவாக இருக்கிறதேயென சுவையறிய வேண்டி நீ தின்பாயெனில் / பிற அங்கங்களின் கிளைத்தல்களற்று / அது செத்துவிடும் / மேலும் / பாலுறுப்பைத் தின்றதால் நீயே கடவுளாகிவிடுவாய் / பிறகு / உன்னை நான் கடித்துக் கடித்துத் தின்பதைத் தவிர்க்க முடியாது / வேறென்ன செய்வேன் / எல்லாம் இழந்த எனக்கு / கொஞ்சம் போலத் தின்று பசியாற / கைவசம் கடவுளைத் தவிர / வேறில்லை என்று கவிதை முடிகிறது. கடவுள் பெரும் அவலமாக மாறும்படி கவிதை கடவுளைக் கொண்டு போகிறது. கவிஞன் உரத்தும் அழுதும் சொல்கிறான் "வேறென்ன செய்வேன் எல்லாம் இழந்த எனக்கு கொஞ்சம் போலத்


படிப்பகம்

www.padippakam.com

தின்று பசியார கைவசம் கடவுளைத் தவிர வேறில்லை. எல்லோராலும் கைவிடப்பட்டவனின் நிராதரவின் துயர் கடவுளைப் பசியாற தின்கிறது. தாய்மை, கருணை, புரட்சி எல்லாம் கடவுளுக்குள் ஒளிந்து பொம்மலாட்டம் நிகழ்த்துகிறது. கடவுளின் பாலுறுப்பை எழுதிச் செல்வதின் மூலம் கடவுள் மற்றுக் கோலத்தில் நிற்கிறார். அவரும் கைவிடப்பட்டவர். கடவுளைத் தின்று முடியும் போது பெரும் நிம்மதி நல்லதொரு கொலை செய்த நிம்மதி. அவ்வளவு கொடூரமாய் நிகழ்ந்தவர் கடவுள். மனுஷனை வடிவமைத்துவிட்ட கடவுள் எவ்வளவு போலியான சிருஷ்டிப்பை நிகழ்த்துயிருக்கிறார். மனுஷனின் வெளி துக்கரமானதற்கு அவர்தான் முழுக்காரணமாகவும் நிறுத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறார். பிரேதா பிரேதனின் கவிதைகள் பெருங்காட்சி நாடகங்களாய்ச் சுழல்பவை. மாமிசத்திலிருந்து தெறிக்கும் அதிர்வுகளை பிரபஞ்ச மர்மங்களை தேடியபடி மொழியின் போதாமையை உணர்த்திபடியும், உணர்ச்சியின்மனஅழுத்தத்தை பதிவு செய்யும்படியும் அலைபவை. உடலின் துயரத்தினூடாக மொழி அலைவுறுகிற போதே வாழ்வின் ரகசியங்களில் இருக்கும் வேஷங்களையும் புனைபவை.

அர்த்தமின்மையின் பிரக்ஞையை ஞாபகத்தில் நிறுத்தியபடி முன்நகரும் பிரேதா பிரேதனின் கவிதைக்குள் தமிழ்க்கவிதையின் அசாத்தியமான ஆண் உடல்மொழியை வாசிக்க முடியும். காமமும் காதலும் உடைந்து நொருங்கி விழ உடல் வலியில் மொழி சிக்கித் திணறுகிறது. இது பிரேதா பிரேதனுக்கான தனித்த அம்சம்.

கால காலமாய் / பூமிக்குள் புதைந்த உடம்புகளைனைத்தையும் திரட்டி / பொம்மை செய்து / மரத்தடியில் வைக்கிறேன் / மழையில் உருவம் கரைவதற்குள் அவன் வரவேண்டும் என்ற பிரார்தனையோடு, என்று ஒரு கவிதையின் வரி நிகழ்கிறது.

உன்னை கொன்று விடவேண்டும் / உதடுகளை கவ்வி முத்தமிட்டபடி கழுத்தை நெரித்து / உள்ளங்கையில் கரையும் பனிக்கட்டி போன்றதொரு கனவாய் உனது இன்மையே எனது கீதம் / என்று மாமிசத்தின் ருசியில் காதலை மிதமிஞ்சிய உணர்ச்சிக்கு கொண்டு செல்பவை. பிரேதா பிதேதனின் வரிகள் உடல் மொழியின் ஆரம்ப சாத்தியத்தை சொல்பவை. பிரேதா பிரேதனின் கவிதைகள் என்கிற போதே இந்திய புராதன மனநிலையின் துறப்போரும் ஆன்மாவின் குரலாக ஒலிக்கும் தேவதேவனின் மொழியைக் கடந்தும் நகுலனின் மந்திரச் சொல் போன்ற தனித்த துக்கத்தின் சாயலின்றியும் நவீனத்திற்குப் பின்னான மனுஷனின் கோரமான சித்திரத்தின் உடல் மொழியாகவும் பயணங்கொண்டிருப்பதால் பிரேதா பிரேதனின் இருபது கவிதைகளும் இரண்டாயிரம் ஆண்டுகளும் தொகுப்பு நவீன தமிழ்க் கவிதையின் வரிசையில் முக்கியமான தொகுப்பாகிறது. ●


படிப்பகம்

www.padippakam.com

# ஆன்மீகம் புதிய தேடல்

**-சகோ. கிளாரா, மருத்துவர், மதுரை**

திண்டுக்கல் மாநிலத்தில் (திண்டுக்கல் முதல் கன்யாகுமரி வரை உள்ள பிரதேசத்தில்) செயல்படும் அடைக்கல அன்னை சகோதரிகள் பல பள்ளிகளையும்; மருத்துவமனைகளையும் அமைத்து நிர்வாகம் செய்வதோடு இடையறாத சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இயேசுவை ஒரு போராளி என்ற வகையில் முன்நிறுத்தும் இவர்கள் விடுதலை ஆன்மீகம் பற்றிப் பேசுகின்றனர். இவர்கள் சார்பாக சகோதரி டாக்டர் கிளாரா அவர்கள் ஒரு சிறு நூல் எழுதி உள்ளார். ஆன்மீகத்தில் புதிய தேடலை நிகழ்த்தும் இந்நூல் குறித்து நம் கவனத்தை இங்கு குவிக்கலாம்.

போராட்டமே எதிர்மறை என்றால்இந்த
உலகில் நான்வாழ முடியுமா? என்ற
வினா என்னை எதிர்நோக்குகிறது.
விதையின் போராட்டத்தின் விளைநிலம்
பசுமரங்கள், காடுகள் பரிணமித்து நிற்கின்றன.
பல உயிர்களின் பிறப்பும் ஒரு தாயின்
போராட்டத்தில்தானே பரிமளிக்கிறது.

கெத்சமெனி இயேசுவே! உனது வாழ்க்கையும்
போராட்டத்தின் உச்சக் கட்டத்தில்தானே இருந்தது
நெஞ்சமெனி போராட்ட வெற்றியால் கிடைத்தது
சாவும், உயிர்ப்பும், பயனவாழ்வைத் தொடங்குமுன்
அவனுயுடன் போராட்டம்
பெண் சீடத்துவத்தை ஆராததித்தும், சாமானியப்
பெண்ணுடன் உளயாடியதும் கூட
போர்ாட்டத்திற்கு அகக்கூறு தானே!
முதல் கிறித்துவர்கள் போராடித்தானே நமது
கிறித்துவ மதத்தை வேரூன்றச் செய்தனர்? என்று வினாத்தொடுக்கும் இப்பகுதியில் சகோதரிகளின் சபைக்கெனப் புரிந்த தியாகங்களும் குறிப்பிடப்படுகின்றன.

போராட்டத்தில் இன்றும் குடிகொள்ளும் இயேசுவே!
எம் மூத்த சகோதரிகள் மேற்கொண்ட போராட்டங்கள்
எமக்குப் பெரும் உந்து சக்தியாயிருக்கிறது
எமது அவைக்காய் விழுப்புண் தாங்கியிருக்கும்
அவர்களுக்கு எமது வீர வணக்கங்கள்!

மனித அடிப்படைத்தேவைகளுக்காய் போராட வேண்டிய தேவை இல்லாத வசதியான சூழலில் வாழ்வதினாலோ என்னவோ, நான் போராட்டத்தையும், போராளிகளையும் இழிவாகக் கருதுகிறேன் என்பது


படிப்பகம்

www.padippakam.com

அற்புதமான பார்வை.

சாதிப் பாதுகாப்புச் சங்கத்தில் எனது பாதுகாப்பைத் தேடுவது, போராட்ட உணர்வை இழந்து விட்டு, பதவிக்காய், ஆணவத்திற்காய் துன்பத்தோடு வாழ்வது பரந்துபட்ட உலகுற்காகப் பங்களிப்பு எதுவும் செய்யாமலிருப்பது போன்ற கெடுமதிகள் நீங்க வேண்டும் என்ற உறுதியைப் **போராட்ட ஆன்மிக வரிகள்** நமக்கு உணர்த்துகின்றன.

தில்லையாடி வள்ளியம்மை, சிட்டகாங் வீராங்கனைகள், தெலுங்கானா வீரப்பெண்கள், வேலு நாச்சியார், வெண்மணித் தியாகிகள் என்று தொடரும் ஈகை நிறை போராட்டம் எம்மிலும் தொடரும் என்னும் நம்பிக்கையை இப்பகுதி கொண்டுள்ளது.

பிறரின் பாதிப்புகள் என்னைப் பாதிப்பதில்லையா?
அடிப்படைத்தேவைகள், உரிமைகள் அளவுக்கதிகமாய்
நிறைவேறிவிட்டால் எனக்குள் குடியிருப்பவையா?
புத்தர், வள்ளலார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார், மீரா
போன்றோரின் வாழ்வியல் ஆன்மீகம் என்னைக் கவரவில்லையா?
ஒரு வேளைச் சோற்றுக்காக, ஒருவனை நீதிக்காக
வீதியில் போராடுபவனை நான் வெறுப்பது ஏன்?

உலகச்சந்தையில் ஆயுதம் விற்கும், வாங்கும் வியாபாரிகளை ஏற்கும் நான், உயிர்வாழப் போராடுவோர் கையில் வைத்திருக்கும் தற்காப்புக் கருவி கூடத் தவறானதாயும், பயங்கரமானதாயும் எப்படித் தோன்றுகிறது? சமபங்கீடு இல்லாச் சமூகத்தில் மக்களே வறுமைக்கு காரணம் என நான் கருதுவது ஒரு மதிமயக்கம்தானே? இத்தகைய நூற்றுக்கணக்கான கேள்விகள் இப் பகுதியில் தென்படுகின்றன. உண்மையை உணரச் செய்யும் கேள்விகள் உரத்த குரலில் நீதி பற்றிய கேள்விகள் எழும்புகின்றன.

"போராட்டத்திற்கு முழு வடிவமும், பொருள் தந்து உயிர்நீத்த இயேசுவே! உம்மைப்போல சுயநலம் துறந்து, மனித குலத்திற்காய் உண்மை, அன்பினால் தூண்டப்பட்டு செயலாக்கம் கொண்டு வாழ வரமருகும்" என்ற வேண்டலுடன் இப்போராட்ட ஆன்மிகம் என்னும் பகுதி நிறைவடைகிறது.

'எளிமை மனம் கொண்ட ஆன்மீகம்' என்னும் அடுத்த பகுதி எளிமைப் படைப்புக்கள் அருகி வருவதோடு மனிதமனம் நாளுக்கு நாள் சிக்லாகிக் கொண்டு வருவதையும் எடுத்துக் காட்டுகிறது.

எளிமைக்கு பெருமை தேடித்தந்த எம்பெருமான் இயேசுவே,
எளிமை என்றவுடன் நினைவுக்கு வருவதெல்லாம்
உமது பிறப்பும், இறப்பும், வாழ்க்கை நிகழ்வுகளும்தான்!


படிப்பகம்

www.padippakam.com

காட்சிக்கு மட்டுமே எளியோராய் வேடம் பூண்டு
கபட நாடகம் போட்டு வரும் அரசியல் அதிகாரிகள்,
ஆசிரம சந்நியாசிகள், துறவிகள் -
கபடத்திற்குக் கைத்தாளமிடும் எம்மைப் பார்த்துத்தான்
வெளிவேடர்களே! உங்களுக்கு அய்யோ கேடு!
என்று இன்னும் இயேசு கூறுகிறார்.

இயேசுவைப் பற்றி அற்புதமாய் இப்பகுதி சித்தரிக்கிறது. வேசிப் பெண்ணின் வாழ்வதற்கான உரிமைக்காக போராடியவர் இயேசு. அன்பை முதற்கடமையாய் போதித்தவர்.

பணத்தினால் செருக்குற்றவனை 'முட்டாள்' என்றவர். அன்பு, அறம், வாய்மை, நேர்மை இவற்றைச் செல்வங்களாய்ச் சேகரிக்காத மனிதகுலப் பதர்கள், வறுமையிலும், வளமையிலும் செப்பமாய் வாழக் கற்றுக் கொள்கையற்றவர்கள், அறிவு வேலை செய்ய வேண்டிய இடத்தில் பக்தி மயங்கங்கள், போலித்தனமான வழிபாடுகள் போன்றவற்றைக் கடைபிடிக்கும் இற்றுப் போன மாந்தர்கள் யாவரையும் இயேசு கண்டிக்கிறார்.

வழியும், வல்லமையும், வாழுரிமையுமான தெய்வமே !
எளிமை எனது பெருமைக்காக, பதவிக்காக அல்ல
பிறரன்புப் பணிகளுக்காக, அடுத்திருப்போரை அங்கீகரிக்கும்
ஆயுதமாய் எளிமை எனக்குள் குடிகொள்வதற்காக

என்னும் கொள்கை முழக்கமாய் இப்பகுதி வெளிப்படுகிறது.

**'விழுமியங்களின் ஆன்மீகம்'** என்னும் பகுதி இயேசுவை உழைக்கும் வர்க்கத்தில் பிறந்தவராய், உழைப்பை மேன்மைப் படுத்தியவராய்ச் சித்தரிக்கிறது. 'உழைக்க மனமில்லாதவர் எவரும் உண்ணலாகாது' என்ற விவிலிய வரி நினைவூட்டப்படுகிறது. 'பட்டினி கிடந்து, பசியால் அலைந்து, பாழ்பட நேர்ந்தாலும் வீரம் உண்மை, உழைப்பு இவற்றை எப்போதும் கைக்கொள்வேன் என்ற உறுதிப்பாட்டை இப்பகுதி கொண்டுள்ளது.

சபைச்சிற்பி தந்தை லிஜியோனின் கல்லறைக்கு நடுநிசி வேளையில் சென்று, மனிதனைத் தோண்டி அவரது நினைவாக தலைப்பகுதியை கொண்டு வந்த இளம் துறவி தாவீது மரியம்மாளை மறக்காமல் விழுமிய ஆன்மிகம் போற்றுகிறது. மாறு வேடமிட்டு துணிச்சலாய் சேவை செய்த சகோதரிகள், தொற்றுநோய் குறித்துக கவலைப்படாமல் மருத்துவப் பணிசெய்தோர், பிச்சையெடுத்து வந்தும் பிறரைக் காப்பாற்றிய சகோதரிகள், அடிப்படைவசதிகள் மறுக்கப்பட்ட நிலையிலும், திருச்சபை ஆதரவு குறைந்த நிலையிலும் கம்பீரமாய் வாழ்ந்து காட்டி வரலாறாகியுள்ள அனைத்துச் சகோதரிகளையும் இப்பகுதி பெருமிதத்தோடு சுட்டிக் காட்டுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

எனது முன்னோரின் உழைப்பு, உண்மை, வீரம்
எமது நாடி நரம்புகளிலும், குருதியோட்டங்களுக்களிலும்
கரைபுரண்டு ஓடட்டும் என்கிறது.

'பிறரன்பு ஆன்மீகம்' என்னும் பகுதி பிறரை அன்பு செய்வதற்கான

சாவைத் தழுவிய இயேசுவை முன்னிறுத்துகிறது. நுகர்வு வெறிப் பொருளியலும், அறமற்ற அறிவியலும், அயோக்கிய அரசியலும், அசிங்க ஆன்மீகமும் மனித வாழ்வை சிதைத்து விட்டன என்கிறது. போர்களாலும், இயற்கை அழிப்பினாலும் வீதிக்கு வந்தோர், அடிமைகளானோர், பினியானரானோர் பற்றிய கவலைகளைப் இப்பகுதி பதிவு செய்கிறது.

இறைவா! பாறங்கல்லாய் இறுகி அசைவற்றிருக்கும்
எனது ஆன்மீகத்தை உற்று நோக்குகிறேன்!
இந்தப் பாறங்கல்லாய் புரட்டியருளும்!
நானும் இவரைப் போலவே உயிர்பெறறெழ விழைகிறேன்!
எனது மூத்த சகோதரியைப் போல் பிறரன்புப் பணிகளில்
முழுமையாக ஈடுபட்டு "பிறர் சிநேக சகோதரிகளின் சபை"
என்ற பெயரைக் கட்டிக் காக்கத் துடித்து நிற்கிறேன்".

என்னும் வரிகள் மனிதர்களின் ஆன்மிகத் தேடலையும், மக்கள் விடுதலை சார்ந்த வேட்கையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது.

**'இளந்துறவு நிலையைக் கடந்தவர்களின் பாடல்'** என்னும் பகுதி நீதி என்னும் பெயரிலும் உலாவும் அநீதிகளைச் சுட்டிக்காட்டுகிறது. கூட்டு வாழ்வில் ஏற்படும் பாகுபாடுகள், உட்பிரிவுகள் குறுங்குழுவாதங்கள் போன்ற கூறுபோடும் நிலைகளிடம் நம முன் எடுத்து வைக்கிறது.

சீடர்களை ஒருங்கிணைத்த இயேசுவே!
பலதரப்பட்ட உணர்வுகள், நிலைகள், இலட்சியங்கள்
கொண்ட எமது கூட்டுத் தோழமை
சிதறாதிருக்க எம்மை ஆழப்படுத்தியருளும்!
பாறங்கல் பிரச்சினைகளை மூடி மறைப்பதும்,
குண்டுமணிப் பிரச்சனைகளைப் பெரிதாக்குவதும், நீங்கி
பார்வைகள் விரிவடைய, பிறர் விழிநீர் துடைக்க
எம்மை அர்ப்பணிக்கிறோம்'

என்று இப்பகுதி அறைகூறுகிறது; 'கூடிவாழ்ந்தால் கோடி நண்மை' என்ற முதுமொழியைப் போற்றுகிறது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்கிறது.

**இளந்துறவியரின் இன்றைய அனுபவப் பாடல்** என்னும் இறுதிப் பகுதியில், கேள்விகள் எழுப்புவதும், சுயமாய் சிந்திப்பதும் இளந்துறவியரின் அடிப்டைக் கடமைகள் எனப் பறைசாற்றுகிறது.

படிப்பு, பதவி, ஊர் என்ற ரீதியில் ஒன்று சேருவதைத் தவிர்த்து நட்பு,


படிப்பகம்

www.padippakam.com

தோழமை, பணிவாழ்வு, இலக்கு என்ற ரீதியில் சேருவதே நன்மை பயக்கும் என்கிறது. கையில் மருந்திடப்பட்டிருக்கும் வெட்டுக் காயத்தைப் பற்றிக் கேட்க மனமில்லாமல் கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரத்தைப் பற்றி விசாரிப்பதை இப்பகுதி எள்ளிநகையாடுகிறது. மனிதமனம் இவ்வளவு கீழிறங்கத்தான் வேண்டுமா என்று ஆதங்கப்படுகிறது. இறுக்கங்கள், இயல்பு மாறாட்டங்கள் மனத்தையும், வயிற்றையும் புண்ணாக்கும் என எச்சரிக்கிறது.

பல நூற்றாண்டுகளாய்த் தேங்கி கிடக்கும் கிறித்தவ ஆன்மீகம் இச்சிறு நூலில் கழுவாய் தேடுவதைப் போன்று உள்ளது. பழமைவாத ஆன்மீகத்தை உதறியெறிந்து, இன்றைய வாழ்விற்கு உகந்த ஆன்மீகத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. ஆன்மீகம் பற்றிப் பேசுவதை இனியும் ஆதிகர்கள் சொந்தம் கொண்டாட முடியாது. இவர்களைப் போன்றே, இவர்தம் ஆன்மீகமும் இற்றுப் போன சக்கை. உதறியெறியத்தான் வேண்டும். ஆம், நமக்கான ஆன்மீகத்தை நாமே உருவாக்கிக் கொள்ள முடியும். தெரிவு செய்ய முடியும். விதியை நம்பச் சொல்கிற குருட்டுத் தனமான ஆன்மீகத்திலிருந்து விடுபட்டு, இன்றைய வாழ்வில் எழுந்து கொள்ள அறைகூவல் விடுக்கும் போராட்ட ஆன்மீகத்தை படைத்தளித்துள்ள சகோ. கிளாரா மிகச் சிறந்ததொரு பணியைச் செய்துள்ளார். பாடல் வடிவிலான இவரது ஆன்மீன்கத் தேடல்கள் மனதைப் பக்குவப் படுத்தவும், பொதுநல நோக்கினை வளர்த்தெடுக்கவும், இயல்பு வாழ்விற்குத் திரும்பவும் பெரிதும் துணைநிற்கும், ஆன்மீகத்திற்குள் இத்தகைய பார்வைகளும், பயணங்களும் இன்றைய மனிதனுக்குத் தேவைதான்.

## வரப்பெற்றோம். நன்றி

- ஆய்வுக் களங்கள்
  ஆசிரியர் : பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியம்
  வெளியீடு : உமா நூல் வெளியீட்டகம்
  208, ஒன்பதாம் தெரு, நடராசபுரம் தெற்கு, தஞ்சசை - 613007
  பக்கங்கள் : 205 விலை ரூ 60

- சிறைப்பரப்பு
  ஆசிரியர் : ஜனகப்பிரியா
  வெளியீடு : தமிழினி
  342, டி.டி.கே. சாலை, சென்னை - 14
  பக்கங்கள் : 96 விலை ரூ 30



படிப்பகம்

www.padippakam.com

# "தீண்டாதவள்" கவிதை நாடகம்
## தாகூரின் "சண்டாளிகா" நாடகத் தழுவல்

ஞானியின் குறிப்பு :- கோவைக்கு அருகிலுள்ள சிற்றூர் ஒன்றில் 1960ல் தொடங்கி இரண்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தேன். ஆண்டு இறுதியில் பள்ளியில் நடைபெறும் ஆண்டுவிழாவில் நடிப்பதற்கென தாகூரின் "சண்டாளிகா" வை கவிதை நாடகமாக எழுதினேன். பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியவர்களின் கவிதைச் செல்வாக்கு அக்காலத்தில் எனக்குள் மேலோங்கி இருந்திருக்க வேண்டும். கடந்த நாற்பதாண்டுகளாக எனது கோப்புகளுக்கு இடையில் முடங்கிக் கிடந்த இந்த நாடகத்தை அன்மையில் நான் கண்டெடுத்தேன். எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. நாடகத்தில் இடம் பெறும் தாய் தன் மகளுக்காக மாந்தரீகம் செய்கிற பகுதியில் தாகூரின் கவிதை இல்லை. இந்த இடத்தை நிரப்பும் முறையில் காமஉணர்வை எழுப்புகிற மாந்தரீக நோக்கில் நான் கவிதை எழுதினேன். இப்படித்தான் எனக்கு நினைவு. தாகூரின் மூல நாடகத்தோடு என் கவிதை நாடகத்தை நண்பர்கள் யாரேனும் ஒப்பிட்டுப் பார்த்து இது குறித்துப் பேசலாம். இந்த நாடகம் தவிர அக்காலத்தில் வேறுசில மொழிபெயர்ப்புக்களையும் செய்திருந்தேன்.

மார்லோவின் "டாக்டர் பாஸ்டஸ்" பைரனின் "கெய்ன்" நாடகம். இவற்றின் கையெழுத்துப் படிகள் யாரிடமோ கொடுத்து அப்புறம் தொலைந்து போயிற்று எனக்கு வருத்தமாக இருக்கிறது.

## காட்சி: 1

தாய் : (நுழைதல்)
கொதிக்குமிந்த வெய்யலிலே நண்பகலில்
கோதையே நீ தனியே நின்ற தென்னே !
மதிமுகத்து மகளிரெல்லாம் நீரெ டுத்து
மனைநோக்கிச் சென்றுவிட ஒருத்தி யிங்கே
எதை எண்ணி நின்றுவிட்டாய் இளங்கொடி
இமயமலை ஈன்றெடுத்த உமையாள் போல
பதி யடைத் தவம்புரிய எண்ணி னாயோ?
யாரிங்கே தாய் முகத்தைப் பார்த்துச் சொல்வாய் . (1)

மகள் : தண்ணீர்க்குக் குடம் கொண்டு தனியே வந்தேன்
தணல்பரவும் நண்பகலில் துறவி வந்தார்
தாழ்வெங்கள் குலம் என்றேன் கேட்க வில்லை
தண்ணீர்தா தண்ணீர்க்குக் குலமும் இல்லை
தடையில்லை தா என்றார் தயங்கி நின்றேன்
தண்ரைத் தாங்கிவரும் மேகம் பார்த்துத்
தாழ்வுரைப்பார் வையத்தில் இல்லை என்றார். (2)
தண்ணீரைத் தாம்உண்டு சென்றார் அம்மா
தாழ்வெல்லாம் தாம்கொண்டு சென்றார் அம்மா
உண்மையினை நான் மறைக்க விரும்ப வில்லை
உமையவள் போல் நிற்கின்றேன் உண்மை, தாயே



படிப்பகம்

www.padippakam.com

வண்மை தரும் வள்ளல் என் தலைவராகி
வாழ்விக்க வேண்டும் எனக் காத்து நின்றேன்
உண்மையினை அவர் எனக்குக் காட்டிவிட்டது
உத்தமரை எதிர்பார்த்தே இங்கு நின்றேன். (3)

தாய் : பல நாளும் பார்த்திருந்தேன் கேட்கவில்லை
பாழ்வெய்யில் நேரத்தில் கிணற்றருகில்
சிலை போலக் காத்திருந்தாய் தாய் மனத்தில்
தீயிட்டுப் பார்த்திருந்தாய் வேண்டாம் பெண்ணே
சிலநாளில் உனதுமுக அழகுங் கெட்டுத்
தீயிட்ட பொருள்போலக் கருக நின்றாய்
குலம் மறந்தாய் அடிமைமுறை மறந்து விட்டாய்
குறைகூறும் மக்கட்கே குறியாய் விட்டாய் (4)
அரசன்மகன் ஆணழகன் முன்பொரு நாள்
அடுத்திருக்கும் வனத்திலே வேட்டையாட
விரும்பி வந்தான் வழியினிலே உன்னைக் கண்டான்
விழியினிலே நீ நிறைந்தாய் சிலையாய் விட்டான்
பெரியன் அவன் தன் பெருமை நீங்கி நின்னைப்
பெண்டாளக் குறையிரந்தான் பாவி நீயோ
கரியமலர் விழியெடுத்தும் பார்க்கவில்லை
கரையில்லாக் காதல் இன் றெங்குப் பெற்றாய்? (5)

மகள் : கண்ணுக்கு அவன் அழகன்: உண்மை: ஆனால்
கருத்திற்கு அழகனோ சொல்வாய் நீயே
பண் இசைக்கும் பறவைக்கும் மான்க ணமும்
பழகி வரும் காட்டினிலே வேட்டை யாட
மண்ணாள் வாள் மகன் வந்தான்: வேல்விழியால்
வஞ்சித்து எனைக் கொத்தக் காத்து நின்றான்
பெண்ணழகை வேட்டை கொள்ளும் பித்தன் அன்றோ
பேயனை நான் வெறுத்தது என் பிழையும் அன்றோ. (6)

உள்ளத்தில் அவர் உருவைக் கொண்டு விட்டேன்
உடலை அவர் பணியினுக்கே ஒதுக்கி வைத்தேன்
கள்ளத்தார் வகுத்துரைத்த குலத்தை என்பால்
காண்பதற்கிங் கிடமில்லை குலம்க டந்தேன்
எள்ளரிய பெருநீதிக் கிடமாய் விட்டேன்
இகழுபவர்க் கிடமில்லை இகழ மாட்டேன்
வெள்ளம் போல் அன்பைநான் நெஞ்சில் தேக்கி
விடுதலைதந் தவர்க்காகக் காத்து நின்றேன் (7)

தாய் : மதம் வகுத்த முறையம்மா சாதித் தன்மை
மதத்தின் கைப் படையம்மா விதியேற்பாடு
விதியினையும் மதத்தினையும் விடுத்து எங்கே
வேறிடம்கண் டறிந்துநீ சேர்வாய் பெண்ணே
புதைபொருளாய் நிலத்தடியில் வாழ வந்தோம்


படிப்பகம்

www.padippakam.com

புனிதர் போல் வெளிப்பட்டு வாழ நின்றால்
மதியுடையார் மேற்குலத்தார் ஆட்சி யாளர்
மரணத்தின் ஏவலராய் நிற்பார் கண்ணே (8)

மகள் : சாதிகளை வகுத்துரைத்துக் கீழ்க்கு லத்தைச்
சதிபுரிந்து ஆள்வதுதான் சமயம் என்றால்
வாதிட்டு விதிவகுத்து மனிதர் நெஞ்சை
மாய்த்தால்தான் சமயம்என வைத்தார் என்றால்
மேதினியில் சமயம் என்ப தொருபொய் மூட்டை
மேலோர்கள் அதைச்சமயம் என்று கொள்ளார்
காதலினை அருட்பண்பை கடமை வாழ்வைக்
காப்பாற்றும் நன்னெறியே சமயம் என்பார் (9)

தாய் : விந்தைமொழி நீ பலவும் பேசுகின்றாய்
விளையாட்டுப் போல் உண்மை புகலுகின்றாய்
கந்தல் எனஇவ்வாழ்வை உதறித் தள்ளும்
கடடைநீ பேசுகின்றாய் ஒப்புக் கொண்டேன்
தந்தம் போல் உடல் அழகைப் பெற்றாய் பெண்ணே
தங்கம் போல் மனத்தினையும் செய்து கொண்டாய்
உந்தன் மனம் மலைபோல ஓங்கி நிற்கும்
உண்மை யதன் திருக்காட்சி ஒளிக்கேதெல்லை (10)

மகள் : என்னைநான் உணராமல் வாழ்ந்திருந்தேன்
என்னைமுதல் எனக்கவர்தான் உணர்த்தி விட்டார்
என்னைநான் மதியாமல் இகழ்ந்திருந்தேன்
என்னைஅவர் மதித்திட என் மதிப்பு ணர்ந்தேன்
தன்னை எனக் கறிவித்தார் தலைவ ராவர்
தலைவர்க்கே அடிமையாய்த் தாள்ப ணிவேன்
இன்னம் ஒரு முறைஎவர்க்கும் அடிமையாகேன்
ஏழ்பிறப்பும் எனைஅவர்க்கே ஈந்துவிட்டேன் (11)

நீர்ஏற்ற கையினிலே நெஞ்சை ஏற்றார்
நெடுங்காலம் நெஞ்சினிலே நிலைத்து நின்ற
போர் ஏற்றார் புன்மையெலாம் போக்கி விட்டார்
புதியவளாய் மாற்றிபின் போன தென்னே!
தேர்ஏற்றம் மறுப்பதுவோ தெய்வச் செய்கை
சிந்தனையில் மலர்த்தோட்டம் செய்து வைத்தார்
தார்ஏற்கத் தலைவர்தாம் மறுத்து விட்டால்
தனிய வளாய் உயிர்மாலைதான ழிவேன் (12)

தாய் : நீள்விழியே நீஎனக்கு வாழ்க்கை அன்றோ
நின்வாழ்க்கைப் பேறு என்றன்பேறு அன்றோ
வாள் விழியில் நீர்வற்ற அழுதல் ஏனோ?
வாழ்வைக்கண் ணீர்கரைக்க வைக்கலாமோ?
தோள் அழகு பெறவேநான் துணையாய் நிற்பேன்
துயரம்உனக் கினிவேண்டாம் தோகையே நீ
நாள் அழகு பெறும்வண்ணம் நாளை சென்று


படிப்பகம்

www.padippakam.com

நான் கண்டு மீண்டிடுவேன் கவலை வேண்டாம். (13)

மகள் : தேடிநீ சென்றிடலால் நன்மை இல்லை
தீமைஇவ் வாழ்வென்று துறவு கொண்டார்
நாடிஇவண் வந்திடத்தான் ஏது இல்லை
நம் நெஞ்சக கனல்தணியப் பாதை இல்லை
வாடிஇவ் வாழ்வழிய விரும்ப வில்லை
மந்திரத்தால் நீசெய்யாச் சூழ்ச்சி இல்லை
ஓடிவந்து அவர் என்னை நாடுமாறு
உன்மந்திரமே எனக்கு உயிர்வழங்கும் (14)

வான் மழைதான் தான்விரைந்து சூழ வேண்டும்
வையம்அ தைக் கவர்ந்து கொள்ள வேண்டும்
தேன்மாரி நிலங்குளிரப் பெய்ய வேண்டும்
திக்கெல்லாம் நீர்வண்ணம் திகழ வேண்டும்
பால்நுரைகள் பொங்கிவரத் தூய கங்கை
பார்அறிய யமுனையினை மருவக் கண்டோம்
நான் விடுக்கும் ஓலங்கள் நெஞ்சு சூழ
நல்லவர்வந் தென்னைமணம் கொள்ள வேண்டும் (15)

தாய் : (தனக்குள்)
மந்திரமா! நான் செய்வா! துறவி மேலா?
மற்றெந்த வழியும் இதற் கில்லை தானோ!
செந்தீயை மூட்டுமிந்த மந்தி ரத்தால்
செய்தவமாம் மலைஎரிக்க இயலுமோ தான்
எந்திரமாம் மந்திரத்தை இயற்றும் போதே
என்னுயிரைப் பலியிட்டுக் கொள்ள வேண்டும்
தந்திரம்வே றில்லையே என்ன ழிவால்
என்மகளை வாழ்வித்தால் எனக்குப் போதும் (16)

மகள் : ஆசைஅற வேண்டும்என அவர்அ லைவார்
ஆசைபெற வேண்டும்என அலைய வைப்பாய்
ஆசைஒரு கட்டென்று அவர்உ ரைப்பார்
ஆசைஒரு சொத்தென்று அறைய வைப்பாய்
ஆசையினை நஞ்சென்று அவர் வெறுப்பார்
ஆசையினை அமிர்தம்என அலைய வைப்பாய்
ஆசைதரும் கட்டுகள் ஓர் ஆயிரத்தால்
அணைக்கவரும் வாழ்வை அவர் சேரவைப்பாய் (17)

தாய் : இன்றிரவே மந்திரத்தை இயற்று கின்றேன்
எங்கிருந்த போதும்அவர் வந்தி டுவார்
துன்றும் எரி வளர்த்தற்குத் தேவையான
துணைப் பொருள்கள் கொணர்ந்திங்கு சேர்த்திடுவாய்
நன்றான கண்ணாடி கையிற் கொண்டு
நடப்பனஎ லாம்அங்குக் கண்டி ருப்பாய்
இன்றுமுதற் பன்னாட்கள் எரிவளர்ப்போம்
இடைநாளில் அச்சமிலா திருப்பாய் கண்ணே. (18)


படிப்பகம்

www.padippakam.com

## காட்சி: 2

தாய் : நாட்கள் கழிந்திடும் மூன்று - அந்த
நல்லவரைக் கனல் கொல்லும் - மன
வீட்டைஅவர் காத்து நின்றார் - மடம்
விட்டுஅவர் வெளிவர வில்லை - இன்னும்
மூட்ட எழுந்திடும் தீயால் - தவ
மூலத்தைத் தீர்த்திட வேண்டி - இதைச்
செய்திட வேண்டுமா சொல்வாய் (1)

இப்பொழு தேனும்உன் நெஞ்சில் - நல்
இரக்கம் எழுந்திடு மாயின் - என்
தப்பிற் குயிர் கொடுத் தேனும் - தீத்
தணித்திட லைவேண்டு கின்றேன்
எப்பொழு தேனும் இடையில் - தீ
எழுப்பிடும் மந்திரம் மாற்ற - ஒரு
ஒப்பில் உயிர்ப்பலி வேண்டும் - என்
உயிரைப் பலியிட்டுக் கொள்வேன் (2)

மகள் : (நுழைதல்)
அஞ்சிட வேண்டுவ தில்லை - அம்மா
ஆற்றல் அழிந்திட வேண்டாம் - என்
நெஞ்சத்தில் வேதனை இன்றி - நான்
நின்றிடவில்லை அறிவாய் - அவர்
தஞ்சம் அடைந்திடத் தானே - இத்
தழலை வளர்த்திடு கின்றோம் - புகை
மஞ்சிடைத் தீயில் அவரும் - மனம்
போரிடை நானுமாய் நின்றோம் (3)

தாய் : கண்ணாடி பார்த்திடு கின்றாய் - புயற்
காற்றொடு தீயும் இணைந்து - மேல்
விண்ணை யளாவிடச் சூழும் - அங்கு
வேதனை மின்னலும் வீசும் - அவர்
மண்ணில் மலைஎன நின்றார் - தம்
மாண்பினைத் தீக்கவ்வ நின்றார் - இரு
கண்ணற்ற வள்போல நின்று - இதைக்
காணுகின்றாய் எண்ணம் இன்றி (4)

காட்டிற்கு மன்னரை வீழ்த்தி - நம்
காலிற் படு தூசி யாக்கி - வான
வீட்டில் முகிலோடு வாழும் - தவ
வீரத்தைக் கொன்றின்பம் தேடும் - இது
ஏட்டிற்குத் தீயிட்ட தாகும் - இதில்
எள்ளளவும் வெற்றி இல்லை - மனக்
கோட்டையைக் காத்து அவர் நின்றார் - நாம்
மண்நின்று கல்லெறி கின்றோம் (5)


படிப்பகம்

www.padippakam.com

மகள் : பொன்னொடு செம்பினைச் சேர்க்க - அம்ம
போதுமோ செப்பை எரித்தல்? - நல்ல
பொன்னை உருக்கிட வேண்டும் - அதில்
போட்டிட வேண்டும்புன் செம்பை - இன்று
என்னைப் பழி சொல்லு கின்றாய் - அவர்
ஏற்கும் இத் துன்பத்தை நம்பியே - இந்தக்
கன்னி உளம் எரிகின்றேன் - நல்ல
காலம் வரும் என்ற காத்திருக்கின்றேன் (6)

கொண்டிங்கு சேர்த்திடு வாய்நீ - அவர்
கோலத்தை மாற்றிடு கின்றேன் - மன
மண்டலத் தைஅவர் காலில் - இட்டு
வாகை யணிந்திடச் செய்வேன் - என்
தொண்டெனும் நல்லமிர்தாலே - அவர்
துயர மகிழ்ந்திடச் செய்வேன் - அவர்
பண்டு எனை நீர்கேட்டு வந்தார் - இன்பம்
பாரக் கடலாடச் செய்வேன். (7)

வெந்திடும் தீயினில் நானும் - ஒரு
வேடிக்கையைக் காணு கின்றேன் - கரும்
கங்கு லிருந் தூலலெல்லாம் - முதற்
காலத்தில் செய்திட்ட தெய்வம் - இன்றும்
பொங்கிக் குதித்திடு கின்றான் - ஒரு
புதிய படைப்பினுக் காக - இந்தத்
தங்க நிற எரிக்குள்ளே - பார்
தாண்டவ மாடிடும் தெய்வம் (8)

தாய் : மூன்றித யத்தில் ஓர் கொள்கை - நன்கு
மூண்டு வளர்ந்திட்ட தாலே - தலை
சான்றஇப் போராட்டம் தன்னில் - உயிர்
தம்மைப் பணயமாய் வைத்தோம் - இங்குத்
தோன்றிய கொள்கையைத் தாங்க - உயிர்
துச்சம் எனக்கொண்டு விட்டோம் - இனி
ஏன் இடைஐயங்கள் ! வேண்டாம் - முடிவு
எப்படி யாயினும் ஏற்போம்.

தாய் : (மூல மந்திரம் ஓதுதல்)

1. கோடிப் பல் லாண்டுகளாய் - உயிர்க்
கூட்டத்தை வாழ்விக்கும் காரணமாய்
ஈடிலாப் பேரழகை - உல
கெங்கும் பரப்பி இனி தாக்கித்
தேடும் திருவிழிக்கே - எந்தத்
திக்கிலும் வண்ணங்கள் தேக்கி வைத்து
மோடியிற் பார்படைத்த - ஒரு
மூலத்தை மந்திரமாய் இசைக்கின்றேன் (10)



படிப்பகம்

www.padippakam.com

2. பன்னிற மலர்படைத்துத் - தேன்
பாய்ந்திட வைத்து மணத்தைப் பரப்பி
பொன்னிற வண்டீர்த்துத் - தன்
புகழைப் பரப்பிப்பின் மடிகனத்து
என்னென்ன வோசெய்து - தன்
இனத்தை இவ்வுலகினில் வாழ வைக்கும்
கன்னலைக் காலமெல்லாம் - நான்
கட்டிஇம் மந்திரமாய் இசைக்கின்றேன். (11)

3. மதியத்தில் பொழிநிலவை - காலை
மலர்ச்சியை மாலை மயக்கத் தினையும்
இதயத் துடிப்பினையும் - அன்றில்
ஏக்கத்தையும் நதித் தேக்கத்தையும்
புதுமலர்ப் புதுமை யினை - சுனைப்
புனலின் குளிர்ச்சியைத் தீச்சுவையை
மதுச்சு வையை இணைக்க - நல்
மாயத்தை மந்திரமாய் இசைக்கின்றேன் (12)

4. பருவத்தில் ஆழ்நெஞ்சில் - உடல்
பற்றி எழுந்து பரவிக் கனன்று
கருவிழியில் தோன்றிப் - பின்
கனவில் நினைவில் கருத்தில் மலர்ந்து
உருவத்தை ஆட்கொண்டு - பின்
உயிரையும் வெல்லும் உருவம் எடுத்து
கருவாய் காரணமாய் - நிற்கும்
கனலினை மந்திரமாய் இசைக்கின்றேன். (13)

5. கனிவுடன் ஏற்பவர் கையில்
காதல் இள நகை காட்டிச் சிரிக்கும்
முனிவுடன் எதிர்ப்பார்க்கே - நெஞ்சில்
மூளும் கனவாகி முற்றும் அழிக்கும்
இனியநற் பலகலைகள் - இங்கு
எடுக்க எடுக்கப் புதிதாக மலரும்
தனி இதன் பெருமையெலாம் - உயிர்த்
தாகத்தை மந்திரமாய் இசைக்கின்றேன் (14)

துறவி: (நுழைதல்)
காவல் மதில்போல் காத்திரு ந்தேன்மனம்
காவல் அழிந்து கனலும் புகையும்
ஏவல னாகும் என்னுடலில் எரி
ஏறியிருந்தே ஏவல் புரியும்
ஆவலைப் போல் விரி வானத்தில் இன்று
ஐயங்கள் ஆசைகள் போல்முகில் ஆர்க்கும்
காவல் அழித்துக் களிப்பதற் கோஇடி
கட்டுத் தவறி இடித்துக் களிக்கும் ! (15)


படிப்பகம்

www.padippakam.com

ஆடுகள் கூடிய மந்தையின் உள்ளே
ஆசை கொண்ட புலிபுகுந் தாலென
ஏடெடுத்துப் படிப்பதற் குற்றால்
எழுத்து களுக்கே ஏன்இந்த ஓட்டம்?
கூடும் பறவைக் கூட்டத்தின் உள்ளே
கொண்டொரு கல்லை எறிந்திடல் போல
தேடியென் நெஞ்சில் புகுந்து திரிந்து
தீண்டி வருத்தும் தீமை ஓர் மர்மம் ! (16)

மதப்பகை வெறும் மண்ணெனச் சொன்னேன்
வாழ்வ ழிக்கும் நஞ்செனக் சொன்னேன்
விதிப்ப டும்பல சாதிச் சடங்குகள்
வேதம் உரைத்திடும் யாகங்கள் ஆகிய
சதிகளை உண்மைச் சமயங்கள் என்று
சண்டை கொள்ளுதல் தாழ்வெனச் சொன்னேன்
மதியி ழுந்தவர் எனக் கெதிராக
வஞ்சமாய்க் செயும் மந்திர மோஇது? (17)

காற்றுச் சென்றிடும் திசைகளை நாடி
கதி ரொளியினில மழையில் திரிந்து
ஏற்றம் என்றும் இதயத்தில் ஆக்கும்
இயற்கைத் தேவியை ஏங்கி இருந்தால்
மாற்றம் நெஞ்சில் மலர்தலும் கூடும்
மடத்தின் எல்லையில் வருந்திட வேண்டாம்
ஆற்றங் கரையினில் காற்று வெளியில்
ஆசைநெஞ்சை விடுத்திட வேண்டும்
(வெளியேறுதல்0(18)

மகள் : மந்திரம் பலித்திடும் அம்மா - அவர்
மடம்விட்டு வெளிவந்து விட்டார் - அங்குச்
சிந்தனை செய்திட நின்றார் - அங்குச்
சிந்தை குலைத்திடு கின்றார் - இன்னும்
மந்திரத் தில் வலி யேற்று - மிக
மாய வலையை இறுக்கு - அவர்
இந்த முறை தப்பி விட்டால் - இனி
என்றும் எனை வந்து சேரார் (19)

தாய் : (மூலமந்திரம்)

6. நெஞ்செனும் நீர்க்குகையில் - நெடு
நாளிருந் தின்பம் குறைந்து வர
அஞ்சிக் கரையேறி - வரும்
ஆர்வத்தில் ஆசையில் அச்சம் துறந்து
கொஞ்சம் வெளிப்பட்டுப் - பின்
கோலங்கள் இட்டுக் கூடி விளையாடி
நெஞ்சைப் பறிகொடுத்துப் - பித்தம்
நேர்ந்திடும் மந்திரத்தை இசைக்கின்றேன் (20)


படிப்பகம்

7. நடையை மயிலாக்கும் - இன்ப
நல்லுடலை மலர்மாலையும் ஆக்கும்
உடையைத் திரையாக்கும் - அதில்
உலகின் அழகெலாம் ஓடி யிருக்கும்
கடையாய்க் கண்ணாகும் - அங்குக்
காதலை விற்றுக் களிப்பை அடையும்
தடையை இடையாக்கும் - இன்பத்
தாகத்தை மந்திரமாய் இசைக்கின்றேன் (21)

8. எதிர்பவர் இதயத்தை - இஃ (து)
எத்துணையே சுக்கு நூறாக்கி
மதிப் பொடி மிகத் தூவிப் - பின்
மாயத்தைக் கொண்டிளக்கி உருக்கிப்
புதிய உருப் படைத்து - நெஞ்சில்
பூட்டிவைத் தின்பத்தைப் போற்றிட வைக்கும்
மது மலர் எழிலாக்கும் - இந்த
மாயத்தை மந்திரமாய் இசைக்கின்றேன் (22)

9. மலையை முகில் தழுவும் - எழில்
வானத்தைக் காற்று வளைத்துத் தழுவும்
அலைகள் கடல் தழுவும் - நீர்
ஆற்றின் பெருக்(கு) உலகாரத் தழுவும்
இலையைக் கதிர் தழுவும் - பார்
எங்கும் பசுமை இதழ்கள் சிவக்கும்
வலைப்பட யார் மறுப்பார்- இன்ப
வாயிலை மந்திரமாய் இசைக்கின்றேன். (23)

10. எட்டுத் திசை பாயும் - இதற் (கு)
எங்கும் வரவேற்பும் ஏற்றங்களாகும்
கொட்டி இடித்து வரும் - பல்
கோடிக் கொடி கொண்டுலகம் அழைக்கும்
எட்டி உதைத்து விடும் - தடை
எங்கேனும் கண்டால் எமனாய் நிற்கும்
கட்டி உலகாளும் - முதற்
காரண மந்திரத்தை இசைக்கின்றேன்

துறவி: (நுழைதல்)

காட்டு வழியினில் வந்துவிட்டேன் மனம்
காரணம் இன்றிக் கவலுதல் ஏன்இனும்
ஏட்டினை நாடி இவ்வழிச் சென்றேன்
எத்துணை யோநாள் சுற்றித் திரிந்தேன்
மீட்டும் இவ்வழித் திரும்ப வந்தேன் என்
மேல்இவ் வழிக்கே ஏன்இந்த ஆட்சி !
ஆட்டிப் படைத்திடும் மர்மத்தின் வேதனை
ஆக்கம் இன்றேன் அதிகம் பெறுவதே ! (25)


படிப்பகம்

www.padippakam.com

எங்கிருந் தோனை யாரோ ஒருவர்
ஏங்கி யழைப்பது போலவும் அழைப்பைப்
பொங்க விடுவது போலவும் கான்போய்ப்
போற்றினால் துன்பம் போவது போலவும்
மங்க லாகஎன் மனம் உரைப்பதேன் !
மருட்சி யோஇது மாற்றலர் மாயமோ
இங்கும் நிறகவி டாதெனைத் துரத்தும்
ஏந்தல் புத்தனை எண்ணிவி ரைவேன் (26)

## காட்சி: 3

தாய் : வானாளும் இந்திரனைக் கூட இந்நாள்
வல்லமையால் கொண்டிங்கு சேர்த்திருப்பேன்
கானாளும் துறவி இவர்வல்ல மையைக்
கட்டிவிட இன்று வரை இயல வில்லை
ஏன் நாட்கள் ஏழிரண்டு கழிந்த பின்னும்
இங்(கு) அவரை மந்திரத்தால் சேர்க்க வில்லை!
ஊன் உடலிற் பலமெல்லாம் ஓய்ந்து விட்டேன்
உயிர் இன்றோ நாளையோ ஓய்ந்து போகும் (1)

என்னுயிர்தான் நீங்குதற்கு இரங்கவில்லை
எண்ணம் நிறைவேறாமல் இருக்கின்றேனே !
பொன்மகளைக் காதலனோ டிணைத்து விட்டுப்
போய்விட்டால் போதும் என் உயிர்க்குப் போதும்
பொற்குடத்தில் நீர் இழுத்துக் கையிற் கொள்ளும்
போதினிலே கயிறற்றுப் போய் விடுமோ?
இன்னும் இரண்டொரு கல்லே தொலைவிலுள்ள
ஏந்தலைக் கொண் டிணைக்காமல் ஏகு வேனோ? (2)

மகள் : (நுழைதல்)
வாழ்ந்திருந்த நாளெல்லாம் எனக்கே வாழ்ந்து
வையகத்தில் கண்கண்ட தெய்வம் அம்மா
தாழ்ந்திருந்த வாழ்வெல்லாம் தணலில் இட்டு
தங்கமெனச் செய்து விட்டதாய் நீ தெய்வம்
வாழ்ந்திருக்க வழிநீயும் செய்து விட்டாய்
வாராதார் ஊர்புறத்தில் வந்து விட்டார்
ஆழ்ந்திருந்தேன் கண்ணாடிக் காட்சி கண்டு
அவர் விரைந்து வரும் காட்சி காண்பாய் நீயும் (3)

தாய் : என்னநீ சொல்லுகிறாய்? வந்தா விட்டார் !
யார் வந்தார்! மறந்து விட்டேன் காதலரா !
என்னுடலில் உயிர்இருக்கும் காலத்திற்குள்


படிப்பகம்

www.padippakam.com

எமைத் தேடிஅவர் வந்தால் நல்ல தம்மா !
முன்னம் நாம் உரைத்தபடி வருகைக்காக
முன்வாயி லைஅழகு செய்தா விட்டாய்?
அலைந்து வரும் அவர்நெஞ்சைக் குளிர்விப்பாயே! (4)

மகள் : வாயிலே கோலங்கள் வரைந்து வைத்தேன்
வண்ணமலர் மாலைகளைத் தொடுத்து வைத்தேன்
கோயிலென விளக்குகளைக் கூட்டி வைத்தேன்
குணம் விளங்க மணப்புகையும் இட்டு வைத்தேன்
ஆயிரமாம் சொல்லழகை ஆக்கி வைத்தேன்
அருளாளர் வருநேரம் பார்த்திருந்தேன்
நோயிலியாய் நீமட்டும் வாழவேண்டும்
நூறாண்டுக் காலம் நாம் வாழ வேண்டும்
(வெளியேறுதல்)

தாய் : மந்திரம் ஓதுதல் (5)

மகள் : (நுழைதல்)
மந்திரங்கள் ஓதுவதை நிறுத்தம் மாநீ
மாயமோ மனமயக்கோ உண்மைதானோ?
வந்துநீ பாரம்மா மணாளர் வந்தார்
மணமகனைப் போலவரா வந்திருந்தார்
சிந்தனைஇல் லாதவர்போல் பித்தர் போல
தீ யினிலே வெந்தவர் போல் காணுகின்றார்
நொந்திருக்கும் அவரைவர வேற்க என்னால்
நூறுமுறை முயன்றாலும் இயல வில்லை (6)

ஏற்றமெலாம் தாமிழந்து இங்கு வந்தார்
எத்துணையோ துன்பங்கள் கண்டு வந்தார்
மாற்றாக இவர்க்குநாம் என்கொடுப்போம்
மறுவில்லாப் பொருளாஎன் மனமும் அம்மா
கூற்றமாய் மாறிடுமோ பெண்மைத் தன்மை!
கொடுநோயா மாற்றார்க்கும் கொடுமை செய்ய!
தோற்ற மநிந் தவர்வந்தார் தன்னலத்தைச்
தோரணமாய் நாற்றியா வர வழைப்போம் (7)

தாய் : காத்திருந்தாய் காதலிரின் வரவை எண்ணி;
களிப்படையும் காலத்தில் கவலை கொண்டாய்
பூத்திருந்த கண்ணால்இக் காட்சி கண்டு
பொலி வடைய ஒட்டாமல் பூட்டி வைத்தாய்
நீத்திருந்த இன்பங்கள் உறக்க மெல்லாம்
நேற்றோடு நீத்தனஎன் றுறுதி கொள்ளாய்
வேர்த்திங்கே வந்தாயே பேதைப் பெண்ணே
விழிநீரைத் துடைத்துக் கொள் வாஎன் பின்னே ! (8)


படிப்பகம்

www.padippakam.com

## காட்சி: 4

**(மேடையில் கோலம், விளக்குமாலை, புகை முதலியவை)**

தாய் : (நுழைதல் மகளுடன் )

எத்துணைநாள் உங்களுக்காக ஏங்கி நின்றோம்?
இன்றெங்கள் வாயிலுக்கு நீங்கள் வந்தீர்
சத்தியமாய் நற்றுணையாய் நீங்கள் நின்றீர்
தாழ்ந்திட்ட குலத்திற்கே கைகொ டுத்தீர்
நித்தமும்உங் கள்நினைவால் வாடி யேங்கும்
நேரிழைக்கு வாழ்வளித்து நீங்கள் காப்பீர்
பித்தர்களைப் போலெங்கள் நிலையா யிற்றே
பெரியவரே உம்பாதம் பணிந்தி டுவோம் (1)

துன்பங்கள் உங்களுக்குச் செய்து விட்டோம்
தூயதவத் தின்வாழ்வைக் குலைத்து விட்டோம்
தன்னத்தால் இன்பத்தை பெறுதல் வேண்டித்
சூழல்வளர்த் தம் மந்திரத்தைச் செய்து கொண்டோம்
அன்பைவளர்த் திடச் செய்த துன்பம் என்று
அருள் நோக்கம் எங்கள்பால் கொண்டிடுவீர்
என்செயலை மன்னிப்பீர் இரக்கம் கொள்வீர்
என் மகளின் வாழ்வினிலே இணைந்திருப்பீர் (2)

துறவி: என்காலில் நீர்விழுந்து வணங்க வேண்டாம்
ஏன் என்னைப பெரியவனா எண்ணு கின்றீர்
முன்னொருநாள் உங்களை இவ்வழியிற் கண்டேன்
முன் போலஇலை நீங்கள் தளர்ந்து விட்டீர்
என்மனத்தில் சிலநாளாய் எழுந்தி ருந்த
எண்ணத்தின் காரணத்தை இன்ற றிந்தேன்
துன்பத்தின் காரணத்தை நீங்கள் எண்ணித்
துயரத்தில் நீர்விழுந்து வருந்த வேண்டாம் (3)

உங்களைப் போல் ஒருதாயை கண்டதில்லை
உங்கள்மன எண்ணத்தில் குற்றம் இல்லை
மங்கைதான் காத்திருக்கும் மனமோ தங்கம்!
வளமாக உங்கள் வாழ் விருக்க வேண்டும்
பொங்கெரியால் என்னைநீர் கொண்டு வந்தீர்
போற்றுகிறேன் உங்களைநான் குற்றம் சொல்லேன்
உங்களைநான் வேண்டுகிறேன் என்னிலையை
உணர்ந்து பார்த் திடஉம்மை வேண்டுகிறேன் (4)

பத்தாண்டாய்த் துறவில் நான் பழகி விட்டேன்
பாரில்எனைத் துறவிஎனப் பலர்அ றிவார்
இத்துடனே துறவைநான் முடித்துக் கொண்டால்
என்னைஉல கேசுவதைப் பொறுக்க மாட்டேன்
நித்திரையில் மறைவிடத்தில் காமம் கொண்டு


படிப்பகம்

www.padippakam.com

நிலவுலகில் பழகிவரத் துணிச்சல் இல்லை
சத்தியத்தை திரையிட்டு மறக்க மாட்டேன்
தன் மனத்தை ஏமாற்றி வாழ மாட்டேன் (5)

நள்ளிரவில் மடம்விட்டு இரவில் வந்தேன்
நண்பகலில் தங்கியிருந் திரவில் வந்தேன்
எள்ளவும் என்னுடல்தான் நிற்க வில்லை
இழி வென்னும் காற்றில் ஒர் தூசி யானேன்
கள்ளனைப் போல் திரிந்திடவா மனிதனானேன்
கருநாகப் பாம்பாநான் மறைந்து வாழ?
உள்ளதுதான் ஒருமனமே இரண்டு இல்லை
உயிர்வாழ்க்கை ஒன்றன்றி இரண்டு இல்லை (6)

மனத்தைநான் குரங் கென்று கருத வில்லை
மருட்சிஉல கியல்பென்றும் எண்ண வில்லை
மனை வாழ்வை இழிவென்றும் சொல்ல வில்லை
மாயவலை உல கென்றும் எண்ண வில்லை
இனமெல்லாம் ஒன்றாக வாழ் வதல்லால்
எனக் கென்று தனிவாழ்வை எண்ண வில்லை
இனி வாழ்வின் முறைமாற்ற விரும்ப வில்லை
இரட்டை வாழ் வெனக்குத்தான் விருப்பம் இல்லை (7)

மானத்தை இழந்துயார் வாழ்த லாகும்?
மனத்தை இழந் தெவ்வாறு வாழ்த லாகும்?
ஈனமா இந்நாள்நான் கொண்ட கொள்கை
இக்கொள்கை இழந்தெங்கே வாழவல்லேன்
வேனலுறு மான்போலா வெந்திறப்பேன்
வேண்டாம் என் மேலிரக்கம் வேண்டுகின்றேன்
நான் துறவி என் றுரிமை கேட்க வில்லை
நல் மனித னாய்வாழ உரிமை கேட்டேன் (8)

தாய் : அன்பிற்கே நாம் வாழ்ந்தோம் உண்மைதானே !
அன்பைக்காத் திடத்தானே துன்பம் செய்தோம் !
துன்பத்தைச் செய்தேனும் அன்பா பெற்றோம் !
துயரத்தை யன்றோ நாம் பெருக வைத்தோம் !
இன்னும்நீ அன்பிற்காகத் துடிக்கின் றாயா?
இன்னும்இம் மந்திரத்தைச் செய்தி டவா?
என்னநீ சொல்லுகிறாய் என்ம களே!
ஏனோநீ சிலையாக மாறி விட்டாய் (9)

மகள் : என்னம்மா நான்பேசி எடுக்க வல்லேன்?
எதற்கம்மா இவ்வளவும் செய்து கெட்டோம்
முன்னாளில் இவர்பார்வை கொண்ட போதே
முளும்நல் லன்பை என் நெஞ்சில் கொண்டேன்
இந்நாளில் இவர்பார்வை கண்ட போதே
என்குற்றம் நன்கறிந்தேன் ; இவருக்கே நான்


படிப்பகம்

www.padippakam.com

பொன்னாலா கயிறெடுத்துப் பிணிக்கவல்லேன்
புலனளிக்கும் நஞ்சாநான் கொண்ட பக்தி! (10)

மன்னவராய் வாழத்தான் பிறந்தார் அம்மா
மதிகெட்டு அலையத்தான் வைத்தோம் அம்மா
இன்றும் ஏன் இவர்பெருமை குன்றவேண்டும்
இவர் நன்மை தான்நமக்கு என்றும் வேண்டும்
கன்னன்போல் தம்பெருமை நமக்குத் தந்து
கார்முகிலாய் நம்சிறுமை ஏற்கவேண்டாம்
மன்ன வராய் இவர்வாழப் பார்க்க வேண்டும்
மந்திரத்தை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். (11)

வீரத்தார் தோல்விஎன் வெற்றி யில்லை
வெற்றிஇது எனக்குத்தான் தேவையில்லை
ஈரமிலா இழிகுலத்தார் ஏற்பார் வெற்றி
இப்பொழுது நான் என்ன இழிகுலமா !
சாரமிலா வாழ் வென்று தாழ்ந்திருந்தேன்
தலைநிமிர வைத்தார்க்குத் தீங்கு செய்யேன்
யாருக்கு வேண்டும் இவ் வெற்றியெல்லாம்
யாது பயன் இனிமேலும் மந்திரத்தால் (12)

தாய் : மந்திரத்தால் உடல்வலிமை இழந்து விட்டேன்
மனவலிமை இல்லாமல் மங்கி விட்டேன்
மந்திரத்தை நம்பியது எங்கள் குற்றம்
மனவலிமை நம்பிவாழ்ந் திருக்க வேண்டும்
தந்திரமும் ஆணவமும் பிறர் உரிமைத்
தடம் அழித்தல் யார்செயினும் குற்றம்குற்றம்
சிந்தாத மனத்தோடும் செழித்திருப்பீர்
சிந்தையில் எம் குற்றத்தைப் பொறுத்திடுவீர்
(வீழ்ந்திறத்தல்) (13)

மகள் : மண்வாழ்வை நீமுடித்துக் கொண்டு விட்டாய்
மகள் வாழ்வை முடிப்பதற்குள் சென்று விட்டாய்
மண்ணுலகில் உன்னுயிரைக் கொண்டு மற்றோர்
மாண் புயிரை என்னுயிரோ டிணைக்க நின்றாய்
இறந் (து) அன்பை இறவாமல் காத்து விட்டாய்
வண்ணங்கொள் அன்பாக வாழ்ந்திருப்பாய்
வாழ்வெல்லாம் தெய்வமாய் பார்த்திருப்பாய் (14)

அன்பூற்றாய் நெஞ்சத்தை அமைத்திருந்தேன்
அள வில்லா அன்பை நான்தாங்கி நின்றேன்
என் புருக்கும் அன்பென்றே எவரும் சொன்னார்
இதைக் காத்த குற்றத்தை நாங்கள் செய்தோம்
துன்புறுத்தும் பேயாக மாறி விட்டோம்
தூயவரே, இக்குற்றம் பொறுத்திடு வீர்
என்னையும் நீர் மன்னிப்பீர் ஏகிடு வீர்
இவ்வுலகம் வாழத்தான் வாழ்ந்திடு வீர். (15)


படிப்பகம்

www.padippakam.com

மரங்களுக்கு மட்டுமல்ல
தனிமரம்
தோப்பாகது
தோப்பாகலாம் வா!

ஆனால்;
இடைவெளி என்பது
இருக்கட்டும் அவசியம்

ஒளிதேடி
வளந்தும் போகலாம்;

வளைந்தே போனால்
வாழ்க்கையது
கோணலாகுமே!

நம்
கைகளுக்கும்
வளர்ச்சி தேவை.

முதிர்ச்சி வேண்டி
முறிந்து போகலாமா?

நாணலைப் போலவும்
வாழத்தான் வேண்டும்

விலாசம் தேடி
விழுதுகள் இறங்கி
ஆழமாய்
அகலமாய் படர்வோம்!

பறவைகள் வந்து
பசியாறலாம்

சிவப்புக்கனிகள்
நம்
சிந்தனையாகட்டும்!

எச்சமிட்டாலே
என்ன செய்வது?

எதிர்கொள்ளத்தான்
வேண்டும்

உறவுகளென்பது
இணைந்து
வேம்பும் அரசுமாய்
விரிவுகொள்ளட்டும்

மண்ணில் நாமிருக்க
மண்ணரிப்பு இருக்கலாமா?

வேர்களை விட்டேனும்
விசாரிக்கச் சொல்வோம்!

-முத்தமிழ்விரும்பி

(இரண்டாவதாக வெளிவர இருக்கும்'நேற்றின் பாதங்கள்' கவிதை தொகுப்பிலிருந்து)
கடற்குதிரை வெளியீடு
396,பாரதியார் சாலை,
கோவை - 44

---

## அன்னையே சொல் நீ !

அன்னையே நீயேன் இவர்கட் கின்று
அன்னை மொழியாய் வாய்த்தனை
முன்னையோர் போலவே முழுதும் உன்னை
மதிப்பாரென்ற மயக்கத் தாலோ?
பின்னையும் தொடரும் பெரும்பிழை செய்கிறாய்

தாயைக் காக்கும் திறனிலார் இவர்கள் - எட்டிக்
காயும் காசு தருமேல்
வாயை மூடி வழிபாடு செய்து
வாங்கி உண்டு மகிழ்வார்! மகிழ்வார் !

இடையூறு நினக்கு எத்தனை நேரினும்
எவளுக்கோ என எண்ணி இருப்போர்
கடை ரென்னில் கதுமெனத் துடிப்பர்
வீதியில் நிற்கின்றோம்
வீட்டிலும் நின்னை வைக்காது மகிழும்
வீணருக்குணர்த்தும் வெட்டி வேலையில் !

வள்ளுவனோடு நீ மறைந்திருந்தால்
வர்லாறேனும் வாழ்த்திடும் நின்னை
கடல் கொண்ட காலை கன்னியே நீயேன்
கரைசேர்ந்து பிழைத்தாய்? - உன்
திருவினைச் சிதைப்போர்
தோன்றாரென்றே துணிவோ சொல்நீ!

நூல் : என் கவிதைகள் ஆசிரியர் : பண்ணண்
வெளியீடு : பண்ணன், 31-26ம் குறுக்குத் தெரு, பெசன்ட் நகர்
சென்னை - 90 விலை : ரூ 60/



படிப்பகம்

www.padippakam.com

கம்ப்யூக் கவிதை காலத்தவன் நீ
'எழுதுகோல்' என்னத்திற்கு?
"உந்துவண்டி' என்று கண்ணை உருட்டாதே
"ரோபோ' தமிழ்த்துரோகம் ஆகாது
சொல் இறக்குமதிக்கு
சுயக்கட்டுப்பாடே விதி

அயற்சொல்லை தமிழாக்கு
முடியாதெனில், அதையே
தமிழ் எனக் கொள்,
அயல்மகரந்தம் புதுமை விளைவிக்கும்
அயற்சேர்க்கையே உயிர்ப்பெருக்கம்

கவிதை வார்த்தை
கவிஞனின் வார்த்தையே !

வார்த்தைகளால் உலகை வெல்லலாம்
புத்தனுக்குப்
பாதி உலகமே பாதுகையானது
வார்த்தைகளினால்.

குருடனுக்கு ஒளி
ஊமைக்குப் பேச்சு
முடவனுக்கு இயக்கம் என
அற்புதங்கள் நிகழ்த்தியது
இயேசுவின் சொற்களே!

ஒவ்வொரு சொல்லும்

ஒரு குறியீடு
ஒவ்வொரு சொல்லுக்கும்
ஒரு வரலாறு

காலம் சொற்களை ஆக்கும். அழிக்கும்
காலத்தால் சொற்கள்
புதுப்புது அர்த்தங்கள் பெறும்

அர்த்தம் இறந்த வார்த்தையே
விட்டொழி
சடலம்
உயிர்க்காது

செத்த வார்த்தைகள் பலவகை :

சிங்கம் போல் வீரன்
ஆமைவேகம்
இருள் முடி
இப்படி உவமைகள்

கசப்பான உண்மை
ஏகாதிபத்தியவேசி
ஏகாந்தநிசப்தம்
போலும் குணப்பெயர்கள்

தாயைப் போல் பிள்ளை
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எனும் பழமொழிகள்

கல்தோன்றாக் காலத்தே
இதயத்தின் இதயமே
சொல்லிக் கொள்கிறேன்
ஆகிய மேடை முழக்கம்

இன்னும் மங்கல வழக்கு,
இடக்கரடக்கல்
குழூஉக்குறி . . .
இவை தவிர்

நூல் : எழுத்தென்ப . . .
ஆசிரியர் : கவிஞர் தமிழ்நாடன்
வெளியீடு :லவ். ஓ. ஏ.கே.நாகராஜ்
அறக்கட்டளை, குகை, சேலம் - 6
விலை : ரூ 35/


படிப்பகம்

www.padippakam.com

# சந்தைக்கு போன அம்மா

ஐந்தோ ஆறோ இருக்கும்
எனக்கு அப்போது
வினவு தெரியும் வயசு . . .

தாய்மாமன் கிராமத்தில்
வாழ்ந்ததா? குடியிருந்ததா? தங்கியிருந்ததா?
நான விளையாண்டிருந்தது ...
ஓ ... 'அந்த 'சுகத்துவம் ' அது
வார்த்தைகளுக்குள் வராத மகத்துவம் !

சம்மணம் போட்டு உட்கார்ந்து பழகத்
திண்ணைப் பள்ளிக்குப்
போய்வருவது தவிர
ஒருசோட்டுப் பசகளுடன்
பொழுதினிக்கும் விளையாடும்
பொற்காலம் !

அதுவும் சனிக்கிழமை யென்றால்
இரட்டிப்புச் சந்தோஷம் !
அது சந்தை நாள் !

இடுப்புகளில் கூடைகளோடு
விட்டுச் செலவுக்கு வெங்காயம் காய்கறிகள்
கருப்பட்டி வெல்லமென்று
வாங்கிவரப் புறப்பட்டுத் தாய்மார்கள்
சனிக்கிழமைச் சந்தைக்கு
மத்தியானம் போனால்
பொழுதிருக்க வருவார்கள்
கூடை தலைமேலாக எங்கள்
குதூகலம் அதற்கு மேலாக . . .

கச்சாயம் முறுக்கு கடலைபொரிபழங்களென
அவர்கள் கொண்டு வரும் சிறுதீனிப்
பண்டங்கள்!
சோத்துக்கும் சாத்துக்கும் வாங்குவதைச்
சுருக்கிக் கொண்டாவது
சிறுசுகளுக்கு 'என்னாச்சும்'
வாங்கி வருவார்கள்

தடம்பார்த்துத் தடம்பார்த்து
ஊரெல்லைத் தலைவாசலில் நிற்போம்
கண்ணுக்கெட்டிய தொலைவில்
கிழக்கே
கன்னியாத்தா கோயில் . . .
அதன் மேல்புறத்தில் ஒரு கூடைவர
மெல்லத் தெரிந்து விட்டால் போதும்
எங்கள் கால்களுக்கு சிறகு முளைத்துவிடும் !

தாவிப் பறந்து போய் தாய்மார்களை அணைய
மடிப்பண்டம் கைமாறும் . . .
அந்த மகிழ்ச்சிக்கு
மறுபடியும் பிறந்து மண்ணில் வரவேண்டும்

"தவமிருந்து பெத்த பிள்ளை
தங்கநிறப் பிள்ளை - நீ
ஏ ராசா ஓடி வந்தே . . .
எங்காச்சும் விழுந்த யின்னா . . .
ஏதாச்சும் ஆச்சு தின்னா . . ." என்று
தலைதடவி முகந்தடவி, தோள்தடவி மேல்தடவி
ஏனோ தெரியாது,
இமைகளில் நீர் கசிந்துவிட -
என்மேல் தாய்கொண்ட பாசம்
சமுத்திரங்கள் வெகு பெரிசோ?

என்பிரியம் தன்பிரியம் ஆனதனால்
அம்மா என்னத்தைச் செய்தாலும்
எனக்குப் பிடிக்கும் அது . . .
ஒன்று தவிர ... ஒன்றே ஒன்று தவிர...

எப்போதோ எதற்கோ
அப்பாவோடு சண்டை பிடித்துக்கொண்டு
இப்போதும் பேச்சு வார்த்தையின்றி
ஒரு மௌனயுத்தம்
வளர்த்துக் கொண்டிருக்கிறாளே
இது ஒன்று தவிர ....

நூல் : மண்வாசல்
ஆசிரியர் : தேனரசன்
வெளியீடு : கவிதா பப்ளிகேசன்
தபால் பெட்டி எண் : 6123
தி.நகர், சென்னை - 17 விலை ரூ 40/


படிப்பகம்

www.padippakam.com

# வரையாட்டு மொட்டை

குளத்தின் உச்சியில்
கழுகின் நிழல்
வட்டமடித்து நீந்திக் குளித்து
வெயில் காய்கையில்
காட்டுக் கோழிச் சிறகுகள் பதறும்
அடைக்கல ஓசையோடு

நம் காலடி அதிர்வுகள் கேட்டு
உடலிலிருந்து ஈட்டி பாய்ச்சி
புதருக்குள் பதுங்கும் முள்ளம் பன்றி
கூரானைக் குறிவைக்கும்

மரம் வெட்டுகையில்அது
வீழ்வதற்கான கடைசி முறிவில்
மிளா மான்கள் மிரளும்
மலையிலிருந்து சமதளம் நோக்கி
கிளைகள் உருட்டுகையில்
கேளையாடுகள் சிதறும்

விறகு தூக்கும் சதம்பலுக்குள்
மர அணில்கள் விளையாடும்
முயல் குட்டிகள் மிதிபடும்

நாம் சென்று நீரருந்தும்
பனிநீர் ஓடைக்கருகில்
பாறைகளுக்குக் குடை பிடிக்கும்

பூங்குமர அடியில்
வரையாடுகள் உறங்கும்

சிறுத்தைகளும்
காட்டுப் பூனைகளும்
மேயுமிடமெல்லாம்
புலிக் குகையின் வாசமடிக்கும்

பக்கத்துக் காட்டில் யானை
ஈத்தலை வளைக்கையிலும்
கடந்தைக் கூடுகள்
கலைகையிலும்
நமக்கு
அடிவயிற்று குளம் கலங்கும்

ஆலங்கட்டி மழை பொறுக்கி
தூக்குச்சட்டியில் அடைத்து
மேகம் குடித்துத் திரிந்த நாட்களில்
வரையாட்டு மொட்டையென்று
பெயர் வைத்தோம் அந்த மலைக்கு

இப்போது
வரையாடுகளைக் காட்டச்
சொல்லிக்
குதிக்கும் குழந்தைகளிடம்
யார் யார் தொலைத்ததாய்ச்
சொல்வது
காடுகளை ... ஆடுகளை

நூல் : இசைஇல்லாத இலையில்லை
ஆசிரியர் : தேன்மொழி
வெளியீடு : மதிநிலையம்
4(39) தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17.
விலை ரூ 60/



படிப்பகம்

www.padippakam.com

## வாழ வழியின்றி வறுமைக் கோட்டின் கீழ் வீழ்ந்துழலும் கோடிக் கணக்கான மக்களைக் கண்டும், நெஞ்சில் ஈரமின்றி ஓய்வூதியம் பெறுவதோ எம்.பி; எம்.எல்.ஏ.க்கள்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத தேசம் தன்னை, வாழ்விக்க வேண்டி, அரசியல் கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டன. அதற்காகவே கண்ணீரும் செந்நீரும் சிந்தி, ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து, இலட்சக் கணக்கான மக்கள் போர்க்களம் கண்டனர்.

இந்தத் தியாக வேள்வியில் தங்களை அர்பணித்துக் கொண்டவர்களே சுதந்திரத்திற்கு முன்பிருந்த கட்சிகளும், பெரும்பாலான தலைவர்களும். நமது பண்பாட்டு அறங்களைத் தங்களது வாழ்வியல் நெறியாக அவர்கள் பாதுகாத்தனர்.

சுதந்திரப் போராட்டத்துடன் நெருங்கி ஒத்துழைத்து, சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தனர். தொழில், வர்த்தக, நிலமுதலைளும், இடைத்தரகர்களும், சுதந்திரப் பிற்காலத்தில், திட்டங்களின் பயன்ளைப் பங்குபோட, அதிகாரவர்க்கத்தை முழுமையாகவும், அரசியல்வாதிகளில் பெரும்பான்மையினரையும் விலைக்கு வாங்கினர்.

நாட்டின் முதல் பிரதமரான பண்டித நேரு அவர்கள் அய்ந்தாண்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, நாடு சமதர்ம சமுதாய அமைப்பை நோக்கி விரைந்து முன்னேறவே அய்ந்தாண்டு திட்டங்கள் என்று திடநம்பிக்கையுடன் பிரகடனம் செய்தார்கள்.

முதல் அய்ந்தாண்டுத் திட்டம் நிறைவேறியபின் அன்னாரது தன்னம்பிக்கை சற்றே தளர்ந்து விட்டது போலும். திட்டத்தின் பயன்கள் சமுதாயத்தில் எப்படிப் பங்கு போடப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்பினார் நேரு அவர்கள். மஹலநோபிஸ் என்ற பொருளாதார நிபுணரை நியமித்து, 6 மாதங்களில் ஆய்வறிக்கை தரும்படி வேண்டினார். அவரும் சரியாக 6 மாதங்களிலேயே தனது அறிக்கை அளித்தார். அதில்அவர், இந்தியாவின் அதிகப் பணம் படைத்த நான்கு பெருமுதலாளிகளின் குடும்பங்களுக்கு அய்ந்தாண்டுத் திட்டத்தின் முழுப்பயனும் சேர்ந்து விட்டன என்று தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

தனது தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்த பண்டிட் நேரு அவர்கள் இனிவரும் அய்ந்தாண்டு திட்டங்கள் குறிதவறாமல் செயலாற்றும் என்று கூறினார். இறுதியாக அவர் தன்து இலட்சியங்கள் தோல்வியுற்ற வேதனையோடு மறைந்தார் என்பது வரலாறு.

9வது அய்ந்தாண்டு திட்டம் முடிவுறும் தருவாயில் சமதர்ம நோக்கங்களை முற்றிலுமாக புதைகுழிக்கு அனுப்பி இன்று அய்யந்திரிபற்ற ஒரு முதலாளித்துவச் சுரண்டல் சமுதாயத்தை அரங்கேற்றிவிட்டார்கள் என்பதைக் காண்கிறோம்!

இந்தக் காலங்களில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த



படிப்பகம்

www.padippakam.com

அரசியல்வாதிகள் பணமுதலைகளின் ஆசை வலைகளில் சிக்கி போக வாழ்வில் திளைக்கலாயினர். அதிகாரத்தை கையகப்படுத்தினால் காலமெல்லாம் வாழ்வில் வசந்தங்கள் பூத்துக் குலுங்கும் என்ற உண்மையை உணர்ந்து கொண்டனர், அரசியல் கட்சியினர். எனவே அதிகாரத்தில் ஆதிக்கம் பெற முடியாத அரசியல் குழுக்களும் தனிக் கட்சிகளைத் துவக்கினர். மாநிலக் கட்சிகளும் தலையெடுத்தன. சமீபகாலத்தில் சாதி அமைப்புக்குளும் அரசியல் சாயம் பூசிக் கொண்டன.

இத்தகைய சூழலில் மக்களின் ஆதரவு பெற, பொய்யான வாக்குறுதிகள் அளித்து, நெறி தவறிய நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டிய இழிநிலைக்கு தள்ளப்பட்டனர். அதிகாரத்தை எப்படியெல்லாமோ கைப்பற்றிக் கொண்ட இவர்கள், தங்களுக்கு பெரும்பாண்மையான மக்கள் வாக்களித்து ஆதரவு காட்டவில்லை என்பதை அறிந்து கொண்டனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ்ப் பண்பாட்டை மறந்து போன இவர்கள், உற்றார் உறவினர்களுக்கு மட்டும் தேவையானவற்றை ஓரளவு செய்துவிட்டு, சொந்தப் பைகளை நிரப்புவதற்கே திட்டங்களை வகுத்துச் செயற்பட்டனர். அத்துடன் நில்லாமல் சட்டப் பாதுகாப்பையும் உருவாக்க எண்ணி, தங்களை அரசு ஊழியர்களாக பிரகடனப்படுத்தி, சட்டமியற்றிக் கொண்டனர். இதன் மூலம் தாங்கள் நினைத்த போது, நினைத்தபடி ஊதியம், ஓய்வூதியம் மற்றும் ஏராளமான இதர வசதி வாய்புகளையும் எடுத்துக் கொள்ள ஏதுவாயிற்று. ஊதியத்தை உறுதிப்படுத்திக் கொண்டபின் ஓய்வூதியத்தின் நிரந்தரப் பாதுகாப்பையும் குறைவில்லாத மதிப்பையும் நினைத்துப் பூரித்துப் போன இவர்கள், தங்களை தேர்வு செய்த மக்களின் தேவைகளை, எதிர்பார்ப்புகளை மறந்தனர். பதவி பறிபோகமல் பாதுகாக்க மட்டுமே பேரவை கூட்டங்களை பலர் பயன்படுத்திக் வருகின்றனர். மேலும் சொல்லுவானேன், தாய்மொழி (தமிழ்மொழி) தாய்நாடு என்ற உணர்வுகூட அற்றுப் போனதாக அவர்களின் செயல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசு ஊழியர்கள் அதிகார வர்கத்தினர்தான். அவர்களை சமுதாய தொண்டர்களாக கருத முடியாது. ஆங்கில மெக்காலேயின் கல்வித் திட்டம் உருவாக்கிய அதே அதிகார வர்க்கம் இன்று வரை அப்படியே செயல்படுகிறது. இந்தக் கல்வி கொள்கையினை கிழித்தெறிந்துவிட்டு ஒரு நாட்டு நலக் கல்விக் கொள்கையை உருவாக்காதவரை நிலைமை மாறாது. இருந்தாலும் அந்த அரசு ஊழியர்களே, வேலைக்காக போட்டியிட்டு பலகாலம் காத்திருந்து பணிக்கு சேர்ந்த பின்னும் தங்களுக்க உரிமைகள் வேண்டும் எனில் பல போராட்டங்களை நடத்தி, பேரம் பேசி, பழிவாங்குதலுக்கு உள்ளாகி, துயர்பட்டபிறகுதான் அமைச்சரவை சிலவற்றை ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கிறது. ஆனால் இந்த அமைச்சர்களோ எம்.பி; எம்.எல்.ஏ. க்களோ தங்களுக்கு தேவையென்று கருதுகின்ற பொழுதெல்லாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, ஊதியத்தையும், ஓய்வூதியத்தையும், மற்றெல்லாச் சலுகைகைளையும் எடுத்துக் கொள்ள முடிகிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கிற மனச்சாட்சிகூட அவர்கள் இழந்து விட்டார்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்ற அய்ந்தாண்டுக் காலங்களில் இவர்களின் பெரும்பாலனவர்களின் சொத்து மதிப்புகள் பற்பல மடங்குகள் பெருத்துவிடுகிற யதார்த்தம் சராசரி மக்களும் புரிந்து கொள்ளுமளவு வெளிப்படையானதே.

இது தவிர, இப்பொழுது தொகுதி வளர்ச்சி நிதியென ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஆலோசனை எந்த பிரகஸ்பதியின் மூளையில் முளைவிட்டதோ தெரியவில்லை! இனிமேல் நாட்டு வளர்ச்சித் திட்டங்கள் தேவையில்லை! நாட்டு வருமானம் அனைத்தையும், எம்.பி; எம்.எல்.ஏ.க்கள், ஊராட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு பங்குவைத்தால் போதும்! திட்டச் செலவுகளும், அதற்கான நிர்வாகச் செலவுகளும் மீதமாகும்!.

இந்தத் தொகுதி வளர்ச்சி நிதிமூலம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்துகிற சில பெரிய மனிதர்களின் கருத்துக்கிசைய, திட்டங்கள் என்ற பெயரால் சலுகை காட்டி, தானும் தேவையானதைச் சுருட்டி, அடுத்த பொதுத் தேர்தலின் போது தொண்டுள்ளம் படைத்த புதியவர்கள் போட்டியிட்டு வெற்றியீட்டும் வாய்பினைக் கெடுத்து, தானே வெற்றிபெறும் சாதக நிலையைப் பக்குவப் படுத்திக் கொள்ள முடிகிறது.எனவே, இந்தத் தொகுதி வளர்ச்சி நிதியானது, மக்கள் சனநாயகத்தின் மீது விழுந்த மற்றொரடியாகும். இன்று இந்திய சனநாயகம் என்றால் அதிகாரவர்க்க - அரசியல்வாதிகளின் சனநாயகம்தான்! மக்கள் சனநாயகமல்ல! மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் மேவமுடியாத பள்ளம் தோன்றிவிட்டது.

நாட்டில் மீண்டும் மக்கள் சனநாயகம் மலர வேண்டும். அரசியல் கட்சிகள் அரசியல் தலைவர்கள் சமுதாய ஊழியர்களே . . மக்கள் தொண்டர்களே ... என்பதை நிலை நிறுத்த வேண்டும். அதற்கு முதற்படியாக அரசியல் தலைவர்கள் அரசு ஊழியர்கள் என அறிவித்து இயற்றிய சட்டத்தை உடனடியாக ரத்து செய்யவேண்டும். எம்.பி; எம்.எல்.ஏ.க்களின் ஊதியங்களையும், ஓய்வூதியங்களையும் நிறுத்திவிட வேண்டும். பதிலாக ஆட்சி மன்றக் கூட்டங்களில் பங்கெடுப்போர்களுக்கு மட்டும் நியாமான போக்குவரத்து, உணவு, இதர செலவுகளைக் கணக்கிட்டு, கூட்ட முடிவில் அளித்தால்தான் நாளைய சமுதாயத்திற்கு சான்றோர்களாக அரசியல்வாதிகளை உயர்த்திக் கொண்ட வரஇயலும் !

அத்துடன் நில்லாமல் ஊழக்கு எதிரான சட்டங்களைக் கடுமையாக நடைமுறைபடுத்துவது மிகமிக தேவையானது. இந்த



படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கையைத் தொடர்ந்து அரசியல் தலைவர்களிடம் குவிந்து கிடக்கின்ற தேவைக்கதிகமான சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும்.

இத்தகைய புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அரசியல் என்றால் சாக்கடை என்ற இழிச்சொல் நீங்காது. ஊழல் இந்தியா என்ற தீப்பெயரும் தீராது. ஆனால், இதனைச் செய்ய வேண்டிய அரசியல்வாதிகளே தடம் புரண்டு போனதால் . . வேலியே பயிரை மேய்ந்தால், பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது! இதற்கு பதில் எளிமையானதுதான். இந்த ஊழல்பேர்வழிகளை யார் ஆட்சி அதிகாரம் செய்ய அனுப்பி வைத்தார்களோ அந்த வாக்காளப் பெருமக்கள்தான் இதனையும் செய்தாக வேண்டும். எப்படி?

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மக்களுக்கு வழிகாட்டத் தகுந்த தமிழகம் தழுவிய ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம். அக்குழுவில் 1.) உந்துனர் குழு 2.) மக்கள் சக்தி இயக்கம் 3.) அனைத்திந்திய சர்வோதய இயக்கம் 4:) காந்தீய வழியில் ஊருக்குப் பத்துபேர் இயக்கம் 5.) தமிழ்நாடு பாரதி சிந்தனையாளர் கூட்டமைப்பு 6.) சுற்றுச் சூழல் இயக்கம், 7.) பல்வேறு தொண்டு நிறுவனங்கள், 8.) தமிழ்மொழிப் பாதுகாப்பு அமைப்புக்கள், ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை உட்கொண்டதாக அந்த வழிகாட்டும் குழு அமையும். துணைக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும். அந்தக் குழுக்கள் அடையாளங் காட்டக்கூடிய வேட்பாளர்களுக்கு மட்டுடே மக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும்.

வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட உடன், நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்ட திருத்தம் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளைச் சட்டப் பேரவையில் எடுப்போம் என்ற உறுதிமொழியினை அந்த வேட்பாளர்களிடம் எழுத்துமூலம் பெறப்படும்.

சமாதான வழிமுறையில் ஆட்சி அதிகாரம் மக்கள் எண்ணியபடி மாற்றி அமைப்பதற்கு இதைவிட வேறு வழியில்லை. இதற்கு மக்கள் செவிசாய்க்காமல், நேற்றுவளரச் செய்தது போல், உறவினர் சொன்னான், கட்சித் தலைவர் நேரில் வந்து வேண்டினார், வேட்பாளர் காலை பிடித்துக் கெஞ்சினார், பணம் கொடுத்தார் என்றெல்லாம் மனமிளகி வாக்களித்தால், நாட்டையும், மக்களையும் இறைவனே காப்பாற்ற வேண்டும். கொலை, கொள்ளை, தற்கொலை, வன்முறை, தாய்க்குலத்திற்கெதிரான இழிசெயல் ஆகியன பெருகி நல்லவன் நடமாட இயலாத அராஜகம் தலைவிரித்தாடும். பிறகு நக்சலைட்டுகளே சரணம் என்று சமுதாயம் வரவேற்கும் நிலை உருவாகும். ●

மருத்துவர் கோபி,

பாரதி மூத்த சிந்தனையாளர் பேரவை, கணபதி, கோயமுத்தூர் - 6



படிப்பகம்

www.padippakam.com

# தமிழின உறவு மடல்

அன்பு நிறைந்த தமிழின உறவீர்! வணக்கம். மொழியாலும் வாழ்வாலும் தமிழர்களாக இருக்கின்ற நாம் உலக அரங்கில் உயர்ந்து வாழ்தல் வேண்டும். தமிழகத் தமிழர்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு முகாமையான சில துறைகளில் தொலைநோக்குடன் திட்டமிடல் செய்து தொடர்ந்து பணியாற்றுவதல் வேண்டும். விளைகின்ற நல்விளைவுகளை நிறுவனப்படுத்துதல் வேண்டும்.

நம்மினத் தாழ்விற்கான மூலங்களை அறிந்து ஓயாமல் பரப்புரை மட்டும் செய்து வரும் பணியை மறுஆய்வு செய்து இனத்தை ஆக்க வழியில் வளர்பதற்கான நடைமுறைக்கு விரைந்து வருதல் வேண்டும். தமிழினம் மேன்மையடைய பல்வேறு வழிமுறைகளை கையாளும் பல்வேறு இயக்கங்களை நாம் வரவேற்கிறாம். அதே பொழுது பிற அமைப்புக்கள் செய்யத் தவறுகின்ற அடிப்படையான ஆக்க வேலைகளை புரிதல் வேண்டிய தேவையுள்ளது.

கருத்து வழி, கொள்கைவழி, தலைவர் வழி, அமைப்பு வழி, நுகர்வு வழி போன்ற ஏதாவது ஒன்றில் தேங்கி மயக்கமடையாமல் தூய அன்பின் மலர்ச்சிக்கான இயற்கை வாழ்முறையை நடைமுறைப்படுத்துகிறோம்.. இயற்கை வேளாண்மை, நிலம் சார்ந்த கேடற்ற தொழில், தற்சார்பு பொருளியல் ஆள்கை, தமிழியல் வாழ்முறை, இனநலன் சார்ந்த அரசியல் நிலைப்பாடு, மொழிநலன் போன்ற துறைகளில் அடிப்படையான பணிகளை காலந்தாழ்த்தாமல் முனைப்புடன் செயலாற்றத் தொடங்குவோம். ஏற்கனவே செயற்பட்டு வருபவரை புரிதலுடன் இணைத்துக் கொள்வோம்.

தமிழகத்தில் வாழ்ந்து வருகின்ற தகுதிவாய்ந்த, தமிழ்ச் சான்றோர்களை முன்னோடியினராக ஏற்றுக்கொண்டு கூட்டுத்தன்மையுடன் முடிவெடுக்கும் பண்பட்ட குமுகாயப் பண்பை வளர்த்தெடுப்போம். நாம் அறிவித்தல் செய்கின்ற செயல்களை நடைமுறைப்படுத்துகின்ற தமிழ்க் குடும்பங்களை குமுகாய உறவினராக வளர்த்து செழுமைப்படுத்துகின்ற உண்மை வாழ்வியல் அமைப்பே தமிழகத்தின் தன்மையை மேம்படுத்த உதவும் என்று நம்புகிறோம்.

ஆதலால் வாய்ப்பு அமைகின்ற இடங்களில் எல்லாம் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை வரும் கல்வியாண்டில் இருந்து புதியதாகத் தொடங்குவதற்கு ஆக்கப்படுத்துவோம். பள்ளியை நடுவமாக வைத்து பல்வேறு துறைசார்ந்த ஆக்கப் பணிகளை இணைத்துக் கொண்டு நாமும் நம்மினமும் மேன்மையடைய வாழ்வாங்கு வாழ்வோம். இதற்கான செயற்திட்டத்தை நாம் வரைவு செய்வோம். இதில் உடன்பாடு உள்ள அன்பர்கள் தங்களின் இசைவினை தமிழ்நேயத்திற்கு தெரிவித்து உதவுமாறு வேண்டுகிறோம்.

நாம் வாழ்வதற்காகவும் மேன்மை அடைவதற்காகவும் விரைவில் கூடுவோம்! முடிவெடுப்போம்!! முன்னேறுவோம் !!!

-வ.நா. தன்மானன்
செஞ்சி



படிப்பகம்

www.padippakam.com

# என்னருமைத் தாயகமே கதறியழு!

## (குஜராத் படுகொலைகள் பற்றிய எண்ணச் சிதறல்கள்)

- திரு. ஹர்ஸ் மந்தர்

எட்டுமாத கர்ப்பிணிப் பெண் ஒருத்தி தன்னை கொல்லாமல் விட்டுவிடுமாறு உங்களிடம் கெஞ்சிக் கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அவரைத் தாக்க வந்தவர்களோ, அவரது வயிற்றை கத்தியால் குத்திக் கிழித்து அவர் வயிற்றிலிருந்த சிசுவை வெளியே உருவி அவர் கண்முன்னாலேயே அதை படுகொலை செய்தார்கள். பத்தொன்பது பேர் உள்ள ஒரு குடும்பத்தை, அவர்களின் வீட்டிற்க்குள்ளேயே வைத்துப் பூட்டி, வீட்டை நீரால் நிரப்பிப் பின் அதில் உயர் மின்சாரத்தை செலுத்தி அவர்களை கொன்றது பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்? உங்களால் என்ன சொல்ல முடியும்?

ஏராளமான வாயு உருளைகளைச் (காஸ் சிலிண்டர்களை) சுமந்தபடி டிரக் வண்டிகள் வந்தன. பணக்கார முசுலீம் வீடுகளும் வணிக நிறுவனங்களும் முதலில் முறைப்படி கொள்ளையிடப்பட்டன. அவற்றில் இருந்த விலைமதிப்பு மிக்க பொருள்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. பிறகு, உருளைகளில் இருந்து சமையல் வாயு கட்டிடங்களுக்குள் பலநிமிடங்களுக்கு செலுத்தப்பட்டது. பின் அதற்கு, கும்பலைச் சேர்ந்த பயிற்சி பெற்ற ஒருவன் தீ மூட்டுவான். கட்டிடத்தை நெருப்பு முழுவதுமாக சூழ்ந்து கொள்ளும். சில இடங்களில் பெரிய கல்காரை (காங்கிரிட்) கட்டிடங்களைத் தகர்க்க, இரும்பை உருக்கி இணைக்க பயன்படுத்தப்படும் அசிட்டிலீன் வாயு பயன்படுத்தப் பட்டது. மசூதிகளும், தர்க்காக்களும் துடைத்தொழிக்கப்பட்டன. அவ்விடங்களில் அனுமார் சிலைகளும், காவிக் கொடிகளும் நாட்டப்பட்டன. அகமதாபாத் நகரின் முக்கிய சந்திகளில் இருந்த சில தர்காக்கள் இரவோடு இரவாக தகர்த்து தரைமட்டம் ஆக்கப்பட்டன. அந்த இடங்கள் சாலை போடுவதற்கான பொருள்களை பரப்பி மூடப்பட்டு, சாலையின் மற்ற பகுதிக்கும் அவற்றுக்கும் எந்த வேறுபாடும் கண்டுபிடிக்க முடியாதபடி திறம்பட நிரப்பப் பட்டுவிட்டன. முன்பு தர்க்காக்கள் இருந்த அதே இடத்தின் மேல் எந்தக் காலத்திலும் அவ்விடத்தில் தர்காக்கள் இருந்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு இப்போது போக்குவரத்து சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

அரசின் போலீசு படையும் நிர்வாக இயந்திரமும் செய்த மனிதத் தன்மையற்ற தவறுகளும், இனப்படுகொலைக்குத் தீவிரமாக துணைபோவதும் இப்போது அனைத்துத் தரப்பினராலும் பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நேராக கலவரக் கும்பல்களின் கைகளில் போய் அகப்படுமாறு மக்களுக்கு போலீசார் தவறாக வழிகாட்டி உள்ளது தெரிய வந்துள்ளது. கொலை, கொள்ளை, தீவைப்பு, பாலியல் வன்முறை போன்றவற்றில் கலவரக் கும்பல்கள் மும்முரமாக இருந்தபோது அவற்றுக்குப் பாதுகாப்புக் கவசமாக செயல்பட்டனர் போலீஸ்காரர்கள். பாதிக்கப்பட்ட முசுலீம்கள், பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும் கையறு நிலையில் கதறிய கதறல்களை போலீசுகாரர்கள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. பெரும்பகுதி வன்முறைக் கும்பலின்



படிப்பகம்

www.padippakam.com

தாக்குதல் இலக்காக இருந்தச் சிறுபான்மைச் சமுகத்தின் மீதே பெரும்பகுதி போலீசாரும் நேரடியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பல அறிக்கைகள் வந்திருக்கின்றன. திட்ட மிட்ட இன ஒழிப்புக்கு முதன்மையாகப் பலியாகி உள்ள சமூகத்தினரையே மிகப் பெருமளவில் கைதும் செய்திருக்கிறார்கள் போலீசார்.

இந்திய ஆட்சித் துறையில் இருபதாண்டுகளுக்கும் மேலாக நான் பணிபுரிந்து இருக்கிறேன் என்ற முறையில், சிவில் மற்றும் காவல் துறை நிர்வாகத்தில் இருக்கிற என் சக ஊழியர்கள் தம் கடமைகளிலில் தவறியது எனக்குப் பெருத்த அவமானமாக இருக்கிறது. வன்முறையானது வெறித்தனமாக அதிகரித்துக் கொண்டு போவதைப் தடுப்பதில் படையினரை உறுதியான முறையில் ஈடுபடுத்துவதற்கும், அரசியல் தலைவர்களிடமிருந்து ஆணைகள் வரும்வரை அதிகாரிகள் காத்திருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, சுதந்திரமாகவும், அச்சமில்லாமலும், நடுநிலையாகவும், திட்டவட்டமாகவும், துணிவோடும், பரிவோடும் செயல்படவேண்டும் என்றுதான் சட்டம் சொல்கிறது. அகமதாபாத்தில் இருக்கும் அதிகாரிகளில் ஒருவராவது இந்த முறையில் செயல்பட்டிருப்பார்ரேயானால் அவர் போலீசை ஆங்காங்கு பரப்பி நிறுத்தியிருக்க முடியும்; படையை உதவிக்கு அழைத்து சில மணி நேரத்திற்குள் வன்முறையைத் தடுத்து நிறுத்தி பொதுமக்களைக் காப்பாற்றி இருக்க முடியும். அவ்வப்பகுதி போலீசு மற்றும் நீதித்துறையின் தீவிர ஒத்துழைப்பு இல்லாவிட்டால் எந்த கலவரமும் சில மணி நேரத்திற்கு மேல் நீடிக்க முடியாது. குஜராத்திலுள்ள காவல்துறை மற்றும் சிவில் அதிகாரிகளின் கைகளில் நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் ரத்தக்கறை படிந்துள்ளது. அத்துடன் எதிர்பின்றி மவுனம் காத்து இந்த சதியில் தாமும் பங்குபெற்றதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மொத்த உயர் அதிகாரவகுப்பின் கைகளிலும் அப்பாவிகளின் ரத்தக்கறை படிந்துள்ளது.

குஜராத்தில் இருந்த காலத்தில் கொஞ்ச நேரமாவது நான் பெருமிதமாகவும் நம்பிக்கையாகவும் உணர்ந்தது ; முஜித் அகமது போன்ற ஆண்களையும் ரோஷன் பஹறன் போன்ற பெண்மணிகளையும் நான் பார்த்த போதுதான். தம்மைச் சுற்றிலும் உள்ள அழிவுகளுக்கு மத்தியில் இவர்கள் அசைக்க முடியாத மனித நேயத்துடன் ஓய்வுஒழிச்சலின்றி இந்த முகாம்களில் பணிபுரிகிறார்கள். எந்த ஒரு குழந்தைக்கும் உணவோ பாலோ கிடைக்காமல் போய்விடக் கூடாது அல்லது அவர்களின் காயங்களைக் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதற்காக அதிகாலை 4 மணி முதல் நள்ளிரவைத் தாண்டியும் பணிபுரியும் இளம் தொண்டர் குழுவினரை அமன்சவுக் முகாமிலிலுள்ள பெண்கள் நெஞ்சார வாழ்த்தினார்கள். அந்தக் குழுவின் தலைவரான முஜித் அகமது ஒரு பட்டதாரி. அவரது சிறிய சாயத்தொழிற்சாலை தீக்கிரையாக்கப்பட்டு விட்டது. ஆனாலும் தன் சொந்த இழப்பு பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க அவருக்கு நேரம் இல்லை. முகாமில் அடைக்கலம் புகுந்துள்ள சுமார் 5000 பேருக்கு நாள் தோறும் 1600 கிலோ உணவு தானியத்தை அவர் சேகரித்தாக வேண்டியிருக்கிறது. ரோஷன் பஹறன் எதிர்கொள்ளும் சிக்கல்களோ இன்னும் பெரியவை. ஏறக்குறைய 60வயதாகும்



படிப்பகம்

www.padippakam.com

இவர் ஜுவாபாரா முகாமில் தங்கியிருப்போரின் சோகக்கதைகளை கேட்கும் ஒவ்வொரு தடவையும், தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறார். ஆனால் அவருக்கு சோகம், கோபம் ஆகிய சொகுசுகளில் மூழ்கித் திளைக்க நேரமிருப்பதில்லை. உறங்குவதற்குக்கூட அவருக்கு நேரம் கிடைப்பதில்லை. அவருடன் இருக்கும் தொண்டர்களுக்கும் அப்படியே. இவர்கள் பெரும்பாலும் உழைக்கும் வகுப்பைச் சேர்ந்த முசுலீம் பெண்களும் ஆண்களும் ஆவர். முகாமைச் சுற்றியுள்ள எளிய குடியிருப்புகளில் இருந்து வருபவர்கள். இவர்கள் தற்காலிகக் கழிப்பறைகள் அமைக்கிறார்கள். ஈவிரக்கமற்ற கும்பல்களின் மூர்கத்திலிருந்துத் தப்பிப்பதற்காக ஒரு ஆரம்பப்பள்ளி வளாகத்தில் திரண்டிருக்கும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு உணவும் ஆறுதலும் வழங்குகிறார்கள்.

முகாம்களின் வழியாக நான் நடந்து செல்லும்போது, மோசமான இந்தச் காலகட்டத்தில் காந்தி இருந்திருந்தால் எப்படி நடந்து கொண்டிருப்பார் என யோசித்தேன். கல்கத்தா கலவரங்களின் போது சமதானத்திற்காகக் காந்தி உண்ணா நோன்பு மேற்கொண்ட போது நடந்த கதை நினைவுக்கு வருகிறது. ஓர் இந்து காந்தியிடம் வந்தார். முசுலீம் கும்பல்களால் தன் இளம் வயது மகனைப் பற்றி பேசினார். தன் கோபத்தின் ஆழத்தையும் பழிவாங்குவதற்காக தன் வேகத்தையும் தெரியப் படுத்திக் கொண்டார். அவருக்கு காந்தி பின்வருமாறு கூறினாராம்;

"மெய்யாகவே உன் வேதனைகளிலிருந்து நீ மீள விரும்பினால் உன்மகனின் வயதை ஒத்த வயதுடைய ஒரு அனாதைச் சிறுவனைக் கண்டுபிடி. அந்தச் சிறுவன், இந்துக் கும்பல்களால் கொல்லப்பட்டுவிட்ட ஒரு முசுலீம் பெற்றோரின் மகனாக இருத்தல் வேண்டும். அந்தப் பையனை உன் சொந்த மகனாக வளர்த்து வா! ஆனால் அவன் பிறந்த இசுலாமிய நம்பிக்கையிலேயே அவனை வளர்! அப்போது மட்டும்தான் உன் வேதனையும் உன் கோபத்தையும் பழிக்குப் பழி வாங்குவதில் உனக்கிருக்கும் வேகத்தையும் உன்னால் தனிக்க முடியும் என்பதை நீ காண்பாய் "!

குஜராத்திலுள்ள கொலைக் கும்பல்கள் என்னிடமிருந்த பலவற்றை பறித்துச் சென்று விட்டன. அவற்றில் விலை மதிப்பில்லாத உயரிய ஒன்று, பெருமிதத்துடனும் உறுதிப்பாட்டுடனும் அடிக்கடி நான் பாடி வந்த ஒரு பாட்டு . .. அந்தப் பாடலின் வரிகள்

"சாரே ஜஹாங்சே அச்சா
இந்துஸ்தான் ஹமாரா . . . ."

இனிஇந்தப் பாடலை. . . ஒருபோதும் என்னால் பாட முடியாது.
(இதை எழுதிய திரு.ஹர்ஷ் மந்தர் பணியில் இருக்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. வளர்ச்சிப்பணி நிறுவனம் ஒன்றில் பிரதிநிதியாகப் பணியாற்றிவருகிறார்)
நன்றி : மக்கள் சிவில் உரிமைக்கழகம், கோவைக் கிளை



படிப்பகம்

www.padippakam.com

## வரப்பெற்றோம். நன்றி

- பெண் இலககியம் வாசிப்பு
  ஆசிரியர் : எம்.ஏ. சுசிலா
  வெளியீடு : மீனாட்சி புத்தக நிலையம்
  48, தேனப்ப முதலி தெரு மதுரை -1
  பக்கங்கள் : 144 விலை ரு 35
- தலித் - மள்ளரிய நோக்கில்
  ஆசிரியர் : த. செயக்குமார்
  பக்கங்கள் : 96 விலை : ரு 25
  கதிர்கள்
  ஆசிரியர் : த. செயக்குமார்
  பக்கங்கள் : 80 விலை : ரு 20
  வெளியீடு : நெய்தல் வெளியீடு
  1435, 17வது முதன்மைச் சாலை, சென்னை - 40
- மள்ளரியம் - இதழ் விலை ரு 10
  ஆசிரியர் : டாக்டர் ஆ. முத்தையா
  வெளியீடு : மள்ளரியம்
  8-சி, ஆசாரியர் குறுக்குத் தெரு
  மதுரை - 625 214
- பன்னாட்டுத் தமிழரும் பண்பாடும்
  (இராஜேசுவரி பாலசுப்பிரமணியம் படைப்புலகம்)
  ஆசிரியர் : டாக்டர் இராசு. பவுன்துறை
  வெளியீடு : காந்தி பதிப்பகம்
  1/86, வடக்குத் தெரு
  தஞ்சை - 614 906
  பக்கங்கள் : 192 விலை : ரு 60.
- குறிஞ்சி வளம்
  ஆசிரியர் : முனைவர். இராம. குருநாதன்
  வெளியீடு : வெள்ளிமங்கை வெளியீட்டகம்
  கே.கே.நகர் மேற்கு, சென்னை - 78
  பக்கங்கள் : 240 விலை : ரு 55/
- சங்கப்பாட்டும் ஜப்பானியக் கவிதையும்
  ஆசிரியர் : முனைவர். இராம. குருநாதன்
  வெளியீடு : கலைஞன் பதிப்பகம்
  தி.நகர், சென்னை - 17



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



## மாறி வரும் உலகை நோக்கி : தமிழும் தமிழரும்

தமிழின் எல்லா வகை ஆக்கங்களுக்கும் இருபதாம் நூற்றாண்டு நிறைய வாய்ப்புக்களை வைத்திருந்தது. இருபதின் இறுதியில் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் வரலாற்றுக்கும் நேர்ந்த கெடுதிகள் இருபத்தியொன்றில் குறைந்து விடப் போவதில்லை. இந்த நெருக்கடிச் சூழலை நம்மால் உறுதியாக எதிர் கொள்ள இயலவில்லை என்றால் தமிழ் வரலாறு பொய்யாய், பழங்கனவாய்ப் போய்விடும் என்பதில் ஐயமில்லை.

தமிழ், உலத்தின் முதல் மொழி என்பதை இறுதியாக நோம் சாம்ஸ்கி எடுத்துரைப்பது நமக்கு இதமாகவே உள்ளது. சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பர்காவியம் மற்றும் பக்தி இலக்கியங்கள் உலகளவிளான வாழ்வியலுக்கும், பண்பாட்டிற்கும் தமிழர் தந்த நன்கொடைகள். தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் தமிழர் நாகரிகத்தின் சின்னங்கள் இன்றும் உள்ளன. தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்த பலரையும் தமிழரின் வாழ்வியல் பெரிதும் கவர்ந்துள்ளது. இத்தகைய தமிழ் வரலாற்றை அழிப்பதற்கு அந்நியர்களோடு நம்மவரும் ஒத்துழைக்கின்ற அறிவின்மையை நம்மால் மதிக்க இயலாது.

தமிழகத்தின் இயற்கை வளங்களையும், உழைக்கும் மக்களையும், தமிழ்மொழியையும், கலைச் செல்வங்களையும் அழிக்க வரும் எந்த ஆதிக்கத்தோடும் நம்மால் ஒத்துழைக்க இயலாது. நவீன அறிவியலும் தொழில் நுட்பங்களும் நம்மீது ஆதிக்கங்களாய் மாற நாம் அனுமதிக்க முடியாது. தமிழ்தான் நமக்கு பயிற்று மொழி, ஆட்சி மொழி, வழிபாட்டு மொழி. தொல்காப்பியரும், சங்கத் தமிழ்ச் சான்றோரும், வள்ளுவரும், இளங்கோவும் நம் குல முதல்வர்கள். சமத்துவமும் சமதர்மமும் தமிழ் மக்களின் வாழ்வியல்.

**மதுரையில் மே 2 முதல் நடைபெறும் பன்னாட்டுத் தமிழ் உறவு மாநாடு நமக்கான எதிர்காலத்தைத் திட்டமிடுவதாக அமையட்டும்**

ஆசிரியரும் வெளியிடுபவரும்:
**கி.பழனிச்சாமி (ஞானி)**
123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009. தொலைபேசி : 235040

அச்சாக்கம் :
விஷ்ணு அச்சகம், கோயமுத்தூர் - 641 012. தொலைபேசி : 493093

படிப்பகம்